Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

MULTI TIMBER DEALERS
மல்ரி மர விற்பனை நிலையம்
கொழும்பு விலையில் கிளிநொச்சியில்...
மொத்தமாகவும் சில்லறையாகவும்

புதிய மக்கள்வங்கி முன்பாக, 79/2, A9 வீதி, கிளிநொச்சி.
தொடர்புகளுக்கு:
077 2612452, 077 3357333
077 3322993, 021 2283829
Fax : 0212283829
அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும், ஒப்பந்தகாரர்களுக்கும், வியாபாரிகளுக்கும் விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.



இந்தியா

பக். 06
மதிய உணவில் விஷம் 22 மாணவர்கள் சாவு

உலகம்

பக். 07
சிக்கிக் கொண்டது வடகொரிய கப்பல்

விளையாட்டு

பக். 23
மேற்கிந்தியா பதிலடி


# தமிழரைத் தொடர்ந்தும் எரிச்சலூட்டுகிறது அரசு

## ஆஸ்திரியத் தூதுவரிடம் ஆயர் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 17
போர் முடிந்த இன்றைய சூழலில் தமிழ் மக்களை எரிச்சலூட்டும் நடவடிக்கை களைத் தொடர்ந்தும் அரசும் சிங்கள மக்களும் மேற் கொண்டுவருகின்றனர். தமிழ் மக்களைத் தொடர்ந்தும் சந்தேகக் கண்கொண்டு பார்க்கும் நிலையே இங்கு காணப்படுகின்றது.

இவ்வாறு யாழ்.மாவட்டத் துக்கு போரின் பின்னர் முதல் முறையாக வருகை தந்த ஆஸ்திரியத்தூதுவர்ரைமுண்ட் மாஜிலிடம், யாழ். மறை மாவட்ட ஆயர்மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை எடுத்துக் கூறினார்.

யாழ்.மாவட்டத்துக்கு நேற் றுக்காலை வருகை தந்த இலங்கை மற்றும் இந்தியா வுக்கான ஆஸ்திரிய தூது வர் அரியாலை நாவலடியி லுள்ள இந்திய வீட்டுத்திட்டம்,



யாழ்.போதனா வைத்திய சாலை, யாழ். பொதுநூல கம் ஆகியவற்றைச் சென்று பார்வையிட்டார். யாழ்மாவட்ட அரச அதிபரையும் சந்தித் துக் கலந்துரையாடினார்.

அத்துடன் யாழ்.ஆயர் இல் லத்தில் மேதகு தோமஸ் சவுந் தரநாயகம் ஆண்டகையை யும் சந்தித்து சமகாலநிலை மைகள் தொடர்பில் ஆராய்ந் தார். இதன் போதே யாழ். ஆயர் மேற்கண்டவாறு தெரி வித்தார்.

சந்திப்புக் குறித்து ஆயர் மேலும் தெரிவித்ததாவது, வடமாகாண சபைத் தேர் தல் குறித்து தூதுவர் என்னிடம் கேட்டார். உலகத் துக்கு நாங்கள் எங்கள் பிரதிநிதிகள் யார் என்று தெரி யப்படுத்த வேண்டும். எங் கள் உரிமையை வெளிக் காட்ட வேண்டும்.

மாகாண சபை வேகமாகப் பூரண நன்மையைப் பெற் றுக்கொள்ள வேண்டுமாக இருந்தால் அரசும் அதற்கு ஒத்துழைக்க வேண்டும் என அவரிடம் கூறினேன்.

சிங்களவர்கள் தொடர்ந் தும் தமிழர்களைச் சந்தே கக் கண்கொண்டு பார்க் கின்றனர். தமிழ் மக்களை எரிச்சலூட்டும் நடவடிக்கை களிலேயே அவர்கள் ஈடு படுகின்றனர் என்பதைத் தூதுவரிடம் விளக்கினேன். இராணுவம் தமிழ் மக்க ளின் நிலங்களை அபகரிக் கின்றது.

தமிழ் மக்கள் போரை விரும்பவில்லை. சிங்கள மக்கள் அனுபவிக்கும் சகல உரிமைகளையும் தமிழ் மக்கள் அனுபவிக்க வேண்டும் என்று விரும்புகின்றார்கள் என தூதுவரிடம் எடுத்துரைத் தேன் – என்றார். (த-5)

## மர்மப் பொருள் வெடித்ததில் இளைஞர் படுகாயம்

மன்னார், ஜூலை 18
மன்னார் திருக்கேதீஸ்வரத் தில் உள்ள வீடொன்றின் பின் பகுதியில் காணப்பட்ட மர்மப்பொருள் ஒன்று வெடித் ததில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார். அவர் மன்னார் வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

திருக்கேதீஸ்வரத்தைச் சேர்ந்த ரீ.கஜேந்திரன் (வயது -25) என்ற இளைஞரே மர்மப்பொருள் வெடித்து படுகாயமடைந்து மன் னார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் செவ் வாய்க்கிழமை நண்பகல் தனது வீட்டின் பின் பகு தியில் காணப்பட்ட குறித்த மர்மப்பொருளைத் தொட்ட போது அது வெடித்த தாகக் கூறப்படுகின்றது. உடனடியாக குறித்த இளைஞர் மன்னார் வைத் தியசாலையில் சேர்க் கப்பட்டார். மேலதிக விசாரணைகளை மன்னார் வைத்தியசாலை பொலி ஸார் மேற்கொண்டு வரு கின்றனர். (த-12)

## வவுனியா விபத்தில் இரு படையினர் சாவு

### நால்வர் படுகாயம்

வவுனியா,ஜூலை 18
ஏ-9 வீதியில் வவுனியா, நவகமுவ பிரதேசத்தில் இராணுவ வாகனமொன்று நேற்றுமுன்தினம் செவ் வாய்க்கிழமை விபத்துக் குள்ளானதில் இரு படை யினர் உயிரிழந்துள்ள துடன் மேலும் நான்கு படை யினர் படுகாயமடைந்த நிலை யில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

குறித்த பகுதியில் பயணித் துக்கொண்டிருந்த மேற்படி வாகனம், வீதிக்கு குறுக் காகப் பயணித்துக்கொண் டிருந்த பிரதேசவாசி ஒரு வர் மீது மோதிவிடாமல் வீதி யோரமாக நிறுத்திவிட்டு மீண்டும் பயணிக்க ஆரம் பிக்கும் தறுவாயில், வேகக் கட்டுப்பாட்டை இழந்து இந்த விபத்து இடம்பெற்றுள்ள தாகச் சம்பவத்தை நேரில் கண்டவர்கள் பொலிஸாரி டம் தெரிவித்துள்ளனர்.

விபத்துக்குள்ளான வாகனம், கிளிநொச்சி பாதுகாப்பு படைத் தலைமையகத்தைச் சேர்ந்தது என்று தெரிவிக் கப்படுகின்றது. விபத்தில், கிளிநொச்சி படைத் தலை மையகத்தின் 24ஆம் கெமுனு படைப்பிரிவைச் சேர்ந்த கேணசேகர (வயது 29) மற்றும் அதே படைத் தலைமையகத்தைச் சேர்ந்த 20ஆவது கஜபா றெஜிமண்டைச் சேர்ந்த தென்னகோன் (வயது 25) ஆகிய இருவருமே உயிரி ழந்துள்ளனர்.

விபத்தில் காயமடைந்த நான்கு படையினரும் வவு னியா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின் றனர். விபத்து தொடர்பில் நவகமுவ பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (த)

## வடக்கிலும் தெற்கிலும் கைவினை கிராமங்கள்

### அமைக்க இந்தியா உடன்படிக்கை

கொழும்பு,ஜூலை 18
அம்பாந்தோட்டை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பகுதி களில் கைவினைக் கிரா மங்களை அமைக்க இந்திய அரசு தீர்மானித்துள்ளது.

இந்தத் திட்டத்திற்கென 40 மில்லியன் ரூபா செலவி டப்படவுள்ளதாகக் கொழும் பில் உள்ள இந்தியத் தூதர கம் நேற்று விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் பாரம்பரிய கைத்தொழில் அமைச்சின் வேண்டுகோளுக்கு இணங்க இந்திய அரசு இந்தத் திட்டத் தைச் செயற்படுத்தவுள்ளது. இதன் கீழ் அம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்

தொடர்ச்சி: பக்கம் 21

## ‘றோ’ ஆலோசனைப்படியே தேர்தலில் விக்னேஸ்வரன்

### குணதாச அமரசேகர எச்சரிக்கை

கொழும்பு,ஜூலை 18
இந்தியாவின் ‘றோ’ உளவுப் பிரிவின் ஆலோசனையும், இரா. சம்பந்தனின் அரசியல் தந்திரமும் இணைந்தே முன்னாள் நீதியரசர் சீ.வி. விக்னேஸ்வரனை வடக்கு மாகாண சபையின் முதல மைச்சர் வேட்பாளராக நிறுத்தியுள்ளது எனத் தேசி யப்பற்றுள்ள தேசிய இயக் கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர எச்ச ரித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரி வித்ததாவது:-

சர்வதேசத்தால் அங்கீகரிக் கப்படக்கூடிய் விக்னேஸ்வ ரனை நியமித்ததன் மூலம் கூட்டமைப்பு தனது விடுத லைப் புலிப் பிரதிநிதித்து வத்தை மறைக்க முயற்சித் துள்ளது.


மாவை சேனாதிராசா முழுக்க முழுக்க விடுதலைப் புலி களின் ஆதரவாளர். முக்கிய மாக இந்தியாவும் இதனை நன்கு அறிந்துள்ளது. எனவே மாவை சேனாதிராசாவை வடக்கு மாகாண சபைத் தேர்தலில் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாள ராக நிறுத்துவதை இந்தியா விரும்பவில்லை.

இந்திய உளவுப் பிரிவின் ஆலோசனை, சம்பந் தனின் அரசியல் வியூகம் என்பன காரணமாக விக் னேஸ்வரன் முதலமைச்சர் வேட்பாளராக நியமிக்கப் பட்டிருப்பது, பயங்கரமான தும் நாட்டுக்கு ஆரோக்கிய மற்ற சூழ்நிலைமையுமாகும். எனவே, ஜனாதிபதி இதனை தடுத்து நிறுத்த அரசியல் காய் நகர்த்தல்களை மேற் கொள்ள வேண்டும். விக் னேஸ்வரனுக்கு அமைச்சர் பதவியோ அல்லது வெளி நாட்டுத்தூதுவர்பதவியையோ வழங்கி முதலமைச்சர் வேட்பாளர் போட்டியிலி ருந்து வெளியேற்ற வேண் டும்–என்றார். (த)

## வீரவன்ஸவும் சம்பிக்கவும் அரசில் உள்ள கோமாளிகள்

### சாடுகிறார் மனோ கணேசன்

கொழும்பு, ஜூலை 18
வடக்குத் தேர்தலுக்குச் சர்வ தேச கண்காணிப்பாளர்கள் வேண்டாம் என்று புதிய சுவச்சவை விமல் வீரவன்ஸ என்ற கோமாளி எழுப்புகின் றார். இந்தக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படாவிட் டால் இந்தக் கோமாளி கட லில் குதிக்கப் போகின்றாரா? இவரைப் போன்ற இன் னொரு கோமாளியான சம் பிக்க ரணவக்கவும் அரசிலி ருந்து வெளியேற வேண் டும். அல்லது வாயை மூடிக் கொண்டிருக்க வேண்டும் என்று ஜனநாயக மக்கள்



முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித் துள்ளார்.

அதிகாரத்தைப் பகிர்ந்து ஐக்கியப்படும் இயக்கம் கொழும்பில் நேற்று புதன்

தொடர்ச்சி: பக்கம் 21

## ஆஸி. அகதிகளுடன் மேலும் ஒரு படகு மூழ்கி 4 பேர் சாவு

கான்பரா,ஜூலை 18
தஞ்சக் கோரிக்கையாளர் களை ஏற்றிக் கொண்டு ஆஸ் திரேலியா நோக்கிச் சென்று கொண்டிருந்த படகு ஒன்று விபத்துக்குள்ளானதில் சுமார் நால்வர் உயிரிழந்துள் ளதாக அங்கிருந்து வெளி யான தகவல்கள் தெரிவிக்

தொடர்ச்சி: பக்கம் 21

## கூட்டமைப்புக் கட்சிகளிடையே வேட்பாளர் பங்கீட்டு இறுதி முடிவு இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 18
நடைபெறவுள்ள வடமாகாண சபைத் தேர்தலுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார் பாக போட்டியிடவுள்ள உறுப் பினர்கள் பங்கீட்டில் யாழ்ப் பாணம், கிளிநொச்சி தவிர்ந்த 3 மாவட்டங்களில் முடிவு கள் எட்டப்பட்டுள்ளன.

இறுதி முடிவுகள் இன்று நடைபெறும் கூட்டத்தில் தீர் மானிக்கப்படும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வட் டாரங்கள் தெரிவித்தன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் வேட்பாளர்களை பங்கீ

தொடர்ச்சி: பக்கம் 21

## மஹிந்தவை அடக்கியதாம் மன்மோகன் சிங்கின் கடிதம்

### விஜித ஹேரத் எம்.பி கூறுகிறார்



கொழும்பு,ஜூலை 18
இலங்கைக்குக் கடந்த வாரம் வந்த இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ் சங்கர் மேனன், இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கின் செய்தி ஒன்றை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கையளித்துள்ளார்.

இந்த கடிதத்தில், இலங்கை அரசு 13ஆவது திருத்தச்சட்டத்தைப் பலவீனப்படுத்தவோ அல்லது, ஒழிக்கவோ நடவடிக்கை மேற்கொண்டால், அனைத்துலக அரங்கில் இலங்கை அரசு எதிர்கொள்ளும் எந்தப் பிரச்சினையின் போதும், இந்தியா ஆதரவு தராது என்று நேரடியாகவே எச்சரித்துள்ளார்.

இதன் பின்னரே, இலங்கை அரசு 13 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பாக அடக்கி வாசிப்பதாக, ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்தாவது:-

இலங்கையின் அரசியல் மற்றும் பொருளாதாரத்தைத் தீர்மானிக்கும் சக்தியாக இந்தியாவே உள்ளது. தனது நிகழ்ச்சி நிரலுக்கேற்ப ஆட்சியை நடத்த இலங்கை அரசின் மீது இந்தியத் தரப்பில் அழுத்தங்கள் கொடுக்கப்படுகின்றன. இந்தியாவின் தாளத்துக்கு ஏற்ப இலங்கை அரசு ஆடுகிறது.

பஸில் ராஜபக்ஷவின் புதுடில்லிப் பயணம் மற்றும் சிவ் சங்கர் மேனனின் கொழும்புப் பயணத்தை அடுத்து, 13ஆவது திருத்த விவகாரத்தைக் கைவிட்டு விட்டது இலங்கை அரசு.

நாடாளுமன்றத் தெரிவுக் குழு அமைக்கப்பட்ட போது, இரண்டு வாரங்களுக்குள் அறிக்கையைச் சமர்ப்பிக்கும் என்று கூறப்பட்டது. இப்போது 6 மாதங்களில் அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்று கூறப்படுகிறது.

வடக்கு மாகாணசபைத் தேர்தல், பொதுநலவாய மாநாடு ஆகியவற்றின் பின்னர் தான் இந்த அறிக்கை வெளியாகும்-என்றார். (த)

# எமது பிள்ளைகளுக்கு மன்னிப்புத் தாருங்கள்

### தமிழ் அரசியல் கைதிகளின் உறவினர்கள் ஜனாதிபதிக்குக் கடிதம்

கொழும்பு, ஜூலை 18
நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி என்ற வகையில் நீண்ட காலம் சிறையில் வாழும் எமது உறவுகளை பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழ் அரசியல் கைதிகளின் உறவினர்கள் கூட்டாக இணைந்து ஜனாதிபதியிடம் கோரியுள்ளனர்.

இது தொடர்பில் ஜனாதிபதிக்கு அவர்கள் 'நீண்ட காலம் சிறையில் உள்ள எமது உறவுகளை பொது மன்னிப்பு வழங்கி விடுவியுங்கள்' எனும் தலைப்பிட்டு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

எமது பிள்ளைகளின் விடுதலை நாட்டின் ஜனாதிபதி என்ற வகையில் உங்கள் கையிலேயே உள்ளது. பயங்கரவாத, அவசரகால தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட பல நூற்றுக்கணக்கானவர்கள் பல்வேறு இடங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். போர் முடிந்து நான்கு வருடங்கள் கடந்த நிலையில் இவர்களது விடுதலை தொடர்பில் எந்த முயற்சிகளும் எடுக்கப்படவில்லை. தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் பெண்கள், வயோதிபர்கள், இளைஞர்கள், விசேட தேவையுடையவர்கள், சரீரத்தில் இரும்புத் துகள்களை சுமந்தபடி மருத்துவ வசதிக்காகத் தினமும் அல்லல்படுபவர்கள் எனப் பலர் உள்ளனர்.

★ எவ்வித குற்றச்சாட்டுக்களும் சுமத்தப்படாது 14 நாள்களுக்கு ஒருதடவை நீதிவான் நீதிமன்றுக்கு சென்று வருவோர்.

★உயர் நீதிமன்றில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டும் விசாரணை இன்றி நீண்டகாலம் தடுத்து வைக்கப்பட்டிருப்போர்.

★காலம் நீண்டு கொண்டே செல்வதால் வழி தெரியாது குற்றங்களை ஒப்புக் கொண்டவர்கள் என்ற அடிப்படையில் எமது உறவுகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களது விடுதலை தொடர்பில் நாம் பல தடவை தங்களதுகவனத்துக்குக்கொண்டு வந்தோம். எனினும் ஆரோக்கியமான பதில் எதுவும் கிட்டவில்லை.

காலத்துக்குக் காலம் எமது பிள்ளைகளின் விடுதலை தொடர்பில் ஒவ்வொரு அரசியல் வாதியும் வெவ்வேறு கருத்துக்களை முன்வைக்கின்றனர். இருந்த போதும் அவை நிறைவேற்றப்படுவதில்லை.

எங்கள் உறவுகள் சிறையில் வாடும் நிலையில் நாம் சமூக பொருளாதார நிலையில் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றோம். குடும்பத் தலைவர்கள் சிறையில் வாட நாளாந்த உணவுக்குக் கூட பிறரிடம் கையேந்தும் நிலையில் எத்தனையோ குடும்பங்கள் உள்ளன. இது போன்ற எல்லா நெருக்கடிகளையும் நாட்டின் ஜனாதிபதி என்ற வகையில் தாங்கள் அறிந்திருப்பீர்கள் என நாம் நம்புகிறோம்.

சிறைகளில் வாடும் எமது பிள்ளைகள் நீதிமன்ற கட்டமைப்புக்கூடாக விடுதலையாவது என்பது சாத்தியமற்ற ஒன்று. எனவே நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி என்ற வகையில் எமது உறவுகளுக்குப் பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்ய ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம்- என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஜ)

## காணாமற்போன படகு நடுக்கடலில் வைத்து மீட்பு

வடமராட்சி, ஜூலை 18
வடமராட்சிவடக்கு இன்பருட்டி கடற்கரையோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டு, காணாமல் போன இயந்திரப் படகு நடுக் கடலில் வைத்து மீனவர் ஒருவரால் கண்டு பிடிக்கப்பட்டு உரியவரிடம்ஒப்படைக்கப்பட்டது.

மயிலிட்டியிலிருந்து இடம் பெயர்ந்து இன்பருட்டியில் வசித்து அங்கேயே கடற் தொழில் புரிந்துவரும் சூசைப்பிள்ளை பூலோகசிங்கம் என்ற குடும்பஸ்தரின் இயந்திரப் படகு கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போது காணாமல் போய்விட்டது. கம்பர் மடத்தைச் சேர்ந்த மீனவர் ஒருவர் பருத்தித்துறை முனைக்குநேரேமிருகமுனை என்ற கடற்பரப்பில் காணாமல் போன இயந்திரப் படகு சென்றுகொண்டிருப்பதைக் கண்டு, அதனைக்கைப்பற்றி கரைக்கு கொண்டு வந்து உரியவரிடம் கையளித்தார்.

இந்த இயந்திரப் படகு கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போது யாராவது கடலுக்குள் தள்ளியிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது. (த-8)

## முல்லைத்தீவில் அபிவிருத்திப் பணிகளை ஐரோப்பிய ஒன்றியக் குழு பார்வை

முல்லைத்தீவு, ஜூலை 18
ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியில் முல்லைத் தீவு மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும்அபிவிருத்திவேலைத் திட்டங்களை அதன் நாடாளுமன்றக் குழுவினர் நேற்று முன்தினம் நேரடியாகச் சென்று பார்வையிட்டனர்.

இலங்கைக்கு வருகை தந்துள்ள ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் 6 பேர் வட பகுதிக்கான பயணத்தை மேற்கொண்டு நேற்றுமுன்தினம் முல்லைத் தீவுக்குச் சென்றனர்.

இதன் போது முல்லைத்தீவு மாவட்டத்தில், ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற வேலைத்திட்டங்களைச்சென்றுபார்வையிட்டனர்.

அத்துடன் கள்ளப்பாட்டில் மக்களுடனும் முல்லைத் தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சமாசங்களுடனும் கலந்துரையாடியதாக அதன் தலைவர் அருள் ஜெனி பேர்ட் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின் போது முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள், வெளி மாவட்ட மீனவர்களால் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

அரசினால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திப் பணிகளை விட நிறுவனங்களாலேயே அதிகளவான அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மக்கள்தெரிவித்தனர். மேலும் கருவாடு பதனிடும் நிலையம் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியில் அமைத்துக் கொடுக்கப்பட்டிருந்தது.

இதன் பலா பலன்கள் தொடர்பிலும் ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேட்டறிந்து கொண்டனர். (ஜ-5)

## மொஹான் பீரிஸுக்கு எதிரான மனு விசாரணைக்கு ஏற்பு

கொழும்பு,ஜூலை 18
ஜனாதிபதி சட்டத்தரணி மொஹான் பீரிஸ், பிரதம நீதியரசர் பதவியை ஏற்பதைத் தடை செய்யக் கோரும் அடிப்படை உரிமை மனுவை எதிர்வரும் 25ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப் போவதாக உயர்நீதிமன்றம் அறிவித்தது.

மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பாக்கியசோதி சரவணமுத்து இந்த மனுவை தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

# போராளிகளின் தியாகங்களுக்கு இடைக்காலத் தீர்வு ஈடாகாது

### புளொட் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 18
போராளிகள் எதனை அடைவதற்காக தமது வாழ்வினை அர்ப்பணித்தார்களோ அவர்களின் தியாகங்களுக்கு இடைக்காலத் தீர்வுகளேதும் ஈடுஇணையாக் முடியாது என்று புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) அனுஷ்டித்து வரும் வீர மக்கள் தினத்தின் இறுதிநாள் நிகழ்வு நேற்று புதன்கிழமை இடம்பெற்றது.

வவுனியாவில் இடம்பெற்ற 24 ஆவது வீரமக்கள் தின நிகழ்வில், புளொட் தலைவர் த.சித்தார்த்தன், உமா மகேஸ்வரனின் உருவப் படத்துக்கும் 'ரெலோ' இயக்கத்தின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், அமிர்தலிங்கத்தின் உருவப்படத்துக்கும், நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் சிறிசபாரத்தினத்தின் உருவப்படத்துக்கும், நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் பத்மநாபாவின் உருவப்படத்துக்கும் மலரஞ்சலி செலுத்தினார்கள்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய த.சித்தார்த்தன் மேலும் தெரிவித்ததாவது:-



வீரமக்கள் தினத்தில் அனைத்துப் போராளிகளையும், பொதுமக்களையும் நினைவு கூருகின்றோம். இவர்கள் எதனை அடைவதற்காகத் தமது வாழ்வை அர்ப்பணித்தார்களோ அவர்களின் தியாகங்களுக்கு இடைக்காலத் தீர்வுகளெதுவும் ஈடு இணையாக முடியாது. இருந்தாலும் இன்று ஒரு நியாயமான தீர்வைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம்தான் அவர்களின் ஆத்மாக்கள் சாந்தியடையும்.

இயக்கங்கள் அனைத்தும் தங்களுடைய தலைவர்களதும், உறுப்பினர்களதும், பொதுமக்களதும் உயிர் அர்ப்பணிப்புக்களை ஞாபகப்படுத்துவதற்காகத் தனித்தனியாக நினைவு தினங்களை நடத்துகின்றன. எதிர்காலத்திலாவது எமது மக்களிடையே இருக்கக்கூடிய ஒற்றுமையைப் பலப்படுத்துவதற்காக அனைவரும் பொதுவான நாளைத் தேர்ந்தெடுத்து அந்த நாளில் நினைவு கூரலை ஒற்றுமையாகச் சேர்ந்து நடத்த வேண்டும்-என்றார். (த-5)

# தொண்டமானாறு ஏரியை ஊடறுத்து மண் பாதை

## செல்வச்சந்நிதி ஆலய திருவிழாவை முன்னிட்டு வலி. கிழக்குப் பிரதேச சபை நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 18
வலி.கிழக்கு பிரதேச சபையின் ஏற்பாட்டில் செல்வச்சந்நிதி முருகன் ஆலய வருடாந்த பெருந்திருவிழாவின் போது இம்முறையும் தொண்டமானாறு ஏரியை ஊடறுத்துத் தற்காலிக மண் பாதை அமைக்கப்படும் என்று வலி.கிழக்கு பிரதேச சபைத் தலைவர் அ.உதயகுமார் தெரிவித்தார்.

ஆலய பெருந்திருவிழா தொடர்பான ஏற்பாட்டுக் கூட்டம் வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் அனந்தராஜ் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் தெரிவித்ததாவது:-

கடந்த ஆண்டு இடம்பெற்ற பெருந்திருவிழாவை போன்று பக்தர்களின் வசதி கருதி இம்முறையும் சபை ஏற்பாட்டில் தற்காலிக மண் பாதை தொண்டமானாறு ஏரியில் அமைக்கப்படும்.

அதேவேளை ஆலயத்தில் மகோற்சவ காலத்தில் பக்தர்களின் வசதி கருதிக் குடிதண்ணீர், சுகாதாரம் உட்பட சகல அத்தியாவசிய தேவைகளையும் வல்வெட்டித்துறை நகர சபை மேற்கொள்ளும் - என்றார்.

ஆலயத்துக்கு வருகை தரும் பக்தர்களின் பாதுகாப்புக்காக இம்முறையும் வழமை போன்று பொலிஸாரின் பாதுகாப்பு இடம் பெறும். அத்துடன் வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ்கள் மற்றும் தனியார் பஸ்கள் போன்றவற்றின் விசேட போக்குவரத்து சேவைகளையும் மகோற்சவ காலத்தில் நடத்துவது என்று கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் பொலிஸார், ஆலய பரிபாலன சபையினர் சமய தொண்டு நிறுவன பிரதிநிதிகள் மற்றும் சமூக ஆர்வலர்கள் போன்றோர் கலந்து கொண்டனர்.

ஆலய வருடாந்த மகோற்சவம் ஓகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாக உள்ளது. (வ-17)


## இராமநாதன் நுண்கலைக்கழக மாணவரின் ஓவியக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூலை 18
யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் அனுசரணையுடன் யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக்கழக மாணவர்களின் மாபெரும் ஓவியக் கண்காட்சியும் கலை நிகழ்வும் ''வீசப்பட்ட வர்ணங்கள்'' நிகழ்வு இன்று வியாழக்கிழமை தொடக்கம் தொடர்ந்து 3 தினங்கள் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வில் சித்திரமும் வடிவமைப்பும் துறை மாணவர்களின் கைவண்ணத்தில் உருவான படைப்புக்கள், இசைத்துறை, நடனத்துறை மாணவர்களின் கலை நிகழ்வுகள் என்பன இடம்பெறும்.

பாடசாலை மாணவர்களுக்கான அனுமதி இலவசம் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (வ-14)

# அரச தாதியர்கள் நேற்று சுகவீன லீவு போராட்டம்




யாழ்ப்பாணம், ஜூலை 18
வடமாகாண வைத்தியசாலைகள் உட்பட நாடளாவிய ரீதியில் உள்ள அரச வைத்தியசாலைகளில் தாதியர்கள் நேற்று சுகவீன விடுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். எனினும் அவசர சிகிச்சைப் பிரிவுப் பணிகள் பாதிக்கப்படவில்லை.

இதேவேளை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை, மந்திகை ஆதார வைத்தியசாலை என்பவற்றின் விடுதிகளில் தங்கியுள்ள நோயாளர்களும் வெளிநோயாளர் பிரிவுக்கு வந்த நோயாளர்களும் நேற்று சிரமங்களை எதிர்நோக்கினர்.

தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாததை அடுத்து தாதிய உத்தியோகத்தர்கள் சுகவீன விடுமுறைப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வைத்தியசாலைகளில் நேற்று வழமையை விட நோயாளர் கள் வருகை மிகக் குறைவாகவே காணப்பட்டது. அவசர சிகிச்சை பெற வேண்டியிருந்த நோயாளர்களே வந்திருந்தனர்.

தாதியர் தமது சுகவீன விடுப்பை தந்தி மூலம் வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகருக்கு அறிவித்திருந்தனர். (வ-8-9-34)

# தே.அ.அட்டை வழங்கும் நடமாடும் சேவை நல்லூரில்

யாழ்ப்பாணம், ஜூலை 18
நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் தேசிய அடையாள அட்டை தொடர்பான நடமாடும் சேவைகள் எதிர்வரும் 23 ஆம் திகதி தொடக்கம் வெவ்வேறு கிராம அலுவலர் பிரிவுகளில் 3 தினங்களுக்கு நடைபெறும் என நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தெரிவித்தார்.


எதிர்வரும் 23 ஆம் திகதி அரியாலை சித்திவிநாயகர் ஆலய முன்பாக அருளம்பலம் ஞாபகார்த்த மண்டபத்தில் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை நடமாடும் சேவை இடம்பெறும். கிராம அலுவலர் பிரிவுகள் ஜே/89, ஜே/90, ஜே/91, ஜே/92, ஜே/93, ஜே/94, ஜே/95, ஜே/96, ஜே/106, ஜே/107, ஜே/108, ஜே/109 பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் இதில் கலந்து கொள்ள முடியும்.

எதிர்வரும் 24 ஆம் திகதி கிராம அலுவலர் பிரிவுகள் ஜே/99, ஜே/115, ஜே/116, ஜே/117, ஜே/118, ஜே/119, ஜே/120, ஜே/121, ஜே/123, ஜே/124, ஜே/125, ஜே/126, ஜே/127, ஜே/128 பிரிவுகளுக்கு கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் கோயில் திருமண மண்டபத்தில் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை இடம்பெறும்.

மூன்றாவது நாளான எதிர்வரும் 25 ஆம் திகதி ஜே/97, ஜே/98, ஜே/100, ஜே/101, ஜே/102, ஜே/103, ஜே/104, ஜே/105, ஜே/110, ஜே/111, ஜே/112, ஜே/113, ஜே/114, ஜே/122 பிரிவுகளுக்கு திருநெல்வேலி சேர் பொன்.இராமநாதன் வீதியில் உள்ள சரஸ்வதி திருமண மண்டபத்தில் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறும்.

நடமாடும் சேவையூடாக தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கவுள்ளோர் தமது பிரிவு கிராம அலுவலருடன் உடன் தொடர்பு கொள்ளுமாறும் முக்கியமாக பிறப்பு, திருமணம் என்பவற்றைப் பதிவு செய்யாதோர், பதிவு மேற்கொள்ளாதோர் பதிவு சேதம் என்ற சான்றிதழை கட்டாயம் பெற்றிருக்க வேண்டும் எனவும் பிரதேச செயலர் தெரிவித்தார். (வ-7)

## ஊர்காவற்றுறை வைத்தியசாலையில் நடமாடும் கண்சிகிச்சை முகாம்



யாழ்ப்பாணம், ஜூலை 18
விஷன் 2020 திட்டத்தின் அனுசரணையில் ஊர்காவற்றுறை வைத்தியசாலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடமாடும் கண் சிகிச்சை சேவை இடம்பெற்றது. காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஐந்நூறுக்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்டனர்.

ஊர்காவற்றுறை வைத்திய அதிகாரி அருணபுண்ணியமூர்த்தி தலைமையில் நடைபெற்ற நடமாடும் சேவையில் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரனும் சமூகமளித்து நிலைமைகளைப் பார்வையிட்டார்.

யாழ்.போதனா வைத்தியசாலை கண் சிகிச்சை வைத்திய நிபுணர்கள் இதில் கலந்து கொண்டனர். கண் பரிசோதனையை அடுத்து மூக்குக் கண்ணாடி வழங்கப்பட்டதுடன் சிகிச்சை பெறுவதற்கான ஆலோசனைகளும் வழங்கப்பட்டன. (வ-7)

# 3 ஆம் கட்டத்தில் 247 வீடுகள் வலி. கிழக்கில்

## இந்திய வீட்டுத் திட்டத்தில்

அச்சுவேலி, ஜூலை 18
வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் இந்திய அரசின் வீட்டுத் திட்டம் மூன்றாம் கட்டத்தில் 247 வீடுகள் அமைக்கப்படவுள்ளன. ஏழு கிராம அலுவலர் பிரிவுகளில் இந்த வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன. மூன்றாம் கட்ட வீட்டுத் திட்டத்துக்கான பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு கட்டுமானம் தொடர்பான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வலி. கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் மூன்றாம் கட்ட வீட்டுத் திட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்ட கிராம அலுவலர் பிரிவு மற்றும் வீடுகளின் தொகை விவரம் வருமாறு:-
ஜே/261 கோப்பாய் மத்தி -32 வீடுகள், ஜே/267 ஊரெழு - 16 வீடுகள், ஜே/272 சிறுப்பிட்டி மேற்கு - 26 வீடுகள், ஜே/273 புத்தூர் மேற்கு - 20 வீடுகள், ஜே/278 புத்தூர் கிழக்கு - 84 வீடுகள், ஜே/279 அச்செழு - 34 வீடுகள், ஜே/286 அச்சுவேலி தெற்கு - 35 வீடுகள் என்ற விதத்தில் வீடுகள் அமைக்கப்படவுள்ளன. (வ-11)

# பிளாஸ்ரிக் பாத்திரங்களில் உணவு வைப்பதைத் தவிருங்கள்

## உடுவில் பிரதேச சபையில் அறிவுறுத்து

வலி வடக்கு, ஜூலை 18 -
வலி. தெற்கு, உடுவில் பிரதேச சபைப் பிரிவில் உள்ள உணவகங்களில் பிளாஸ்ரிக் பொருள்களில் உணவு வகைகளை வைத்திருப்பதைத் தவிர்க்குமாறு பொது சுகாதாரப் பரிசோதகர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

உடுவில் பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் அந்தப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உணவகங்கள், தேனீர் கடைகள் நடத்துவோருக்கான கலந்துரையாடல் இரண்டு தினங்களுக்கு முன்னர் இடம் பெற்றது.

இதில் உணவுப் பொருள்களைப் பிளாஸ்ரிக் பாத்திரங்களில் வைப்பதால் உணவுப் பொருள்கள் விரைவாக பழுதடைகின்றன. அத்துடன் உணவுப் பொருள்கள் சூடான நிலையில் பிளாஸ்ரிக் பொருள்களில் வைக்கப்படுவதன் மூலம் அவற்றின் தாக்கம் இடம் பெற்று சுகாதாரப் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. எனவே பிளாஸ்ரிக் பொருள்களை எதிர்காலத்தில் தவிர்க்கும் படி அறிவுறுத்தப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் ஐம்பதுக்கும் மேற்பட்ட உணவகங்கள், தேனீர் கடைகளின் உரிமையாளர்கள் கலந்து கொண்டனர். (வ-86)




## ஆனைவிழுந்தான் மயானத்தில் குவியும் குப்பை கூளங்கள்

வடமராட்சி, ஜூலை 18
புலோலி, ஆனைவிழுந்தான் மயானப் பகுதியில் தொடர்ந்தும் குப்பை கூளங்கள், வெற்று பியர் ரின்கள் அதிகமாக வீசப்படுகின்றன.
இதனால் குறித்த மயானத்தில் சடலங்களைத் தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்வோர் பெரும் சிரமங்களை



யும், அசௌகரியங்களையும் சந்தித்து வருகின்றனர்.
மயானத்தின் 'கேற்' திறந்த நிலையிலேயே இருப்பதால் குப்பை, கூளங்களைக் கொட்டுவோருக்கு அது வசதியாக அமைந்துள்ளது.
குப்பை, கூளங்களால் நாற்றம் எடுக்கும் இந்த மயானத்தில் தகனக் கிரியைகளுக்காகச் செல்வோர் குப்பை கூளங்களை அப்புறப்படுத்தி நெருப்பில் இட்ட பின்னரே சடலங்களைத் தகனக் கிரியை செய்ய வேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளது.
இது தொடர்பில் பிரதேச சபை உரிய நடவடிக்கைகளை எடுக்குமா என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். (வ-8)





தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தினர் கொடிகாமம் கச்சாய் வீதியில் உள்ள அன்னை திரேசா முன்பள்ளி சிறார்களின் கற்றல் செயற்பாட்டுக்காகக் கணினியை அன்பளிப்பாக வழங்கினர். கழகத் தலைவர் லயன் த.இரவீந்திரன் முன்பள்ளி ஆசிரியை மற்றும் சிறார்கள், பெற்றோர் ஆகியோரிடம் கணினியைக் கையளிக்கின்றனர். (வ-9)

## கைதடி வடக்குக்கு மீண்டும் பஸ் சேவை

தென்மராட்சி, ஜூலை 18
கைதடி வடக்குப் பகுதிக்கான பஸ் சேவை இ.போ.ச.கோண்டாவில் டிப்போவால் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
முன்னர் நடத்தப்பட்ட குறித்த மார்க்கத்துக்கான பாடசாலைச் சேவை உட்பட பஸ் சேவை கடந்த சில மாதங்களாக நிறுத்தப்பட்டிருந்ததாகவும், அந்தப் பகுதி மக்கள் விடுத்த வேண்டுகோளையடுத்து மீண்டும் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## தென்பகுதிக்கு செல்லும் குடாநாட்டு முருங்கைக்காய்



யாழ்ப்பாணம் , ஜூலை 18
யாழ். குடாநாட்டில் இருந்து பெருமளவிலான முருங்கைக்காய்கள் தென்பகுதிக்கு வியாபாரிகளால் எடுத்துச் செல்லப்படுகின்றன.
தற்போது முருங்கைக்காய்களின் விலைகள் திடீரென வீழ்ச்சியடைந்ததை அடுத்து அவை சந்தைகளில் விற்பனை இன்றி தேங்கிக் காணப்படுகின்றன.
முன்னர் கிலோ 250 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட இந்த முருங்கைக் காய்கள் தற்போது கிலோ 120 ரூபாவாக விலை குறைந்துள்ளது.
இது இவ்வாறிருக்க தென்பகுதியில் முருங்கைக்காய்க்கு கிராக்கி ஏற்பட்டதை அடுத்து இங்கிருந்து அவற்றை கூடுதலாக எடுத்துச் செல்வதில் விவசாயிகள் அதிக கவனம் செலுத்தியுள்ளனர். (வ-17)

செயற்கைமுறை சினைப்படுத்தலில்

# பசு வளர்ப்போருக்கு 10,000 ஊக்குவிப்பு

அச்சுவேலி, ஜூலை 18
செயற்கை முறைச் சினைப்படுத்தல் மூலம் பசுக் கன்றுகளைப் பெற்றுக்கொண்ட பண்ணையாளர் மற்றும் மாடு வளர்ப்போருக்கு ஒவ்வொரு கன்றுக்கும் 10 ஆயிரம் ரூபா வீதம் ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாகப் பேராதனை கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.
இந்த வருடம் ஜூன் மாதம் முதலாம் திகதி தொடக்கம் ஊக்குவிப்பு உதவித்திட்டம் நடைமுறைக்கு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
செயற்கை முறைச் சினைப்படுத்தல் மூலம் பசுக் கன்றுகளைப் பெற்றுக்கொண்ட பயனாளிகள் குறித்த விவரங்களை தமது பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்தில் பதிவு செய்து கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ளலாம்.
இந்த வருடம் ஜூன்மாதம் முதலாம் திகதிக்கும் அதற்கு பின்னரும் பிறந்த கன்றுகளுக்கே கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன. 'இளம் பசுக்கன்றுகளை வளர்க்க



ஊக்குவிக்கும் செயற்றிட்டம் 2013'' இன் கீழ் இந்த ஊக்குவிப்பு உதவுதொகை நான்கு கட்டங்களாக வழங்கப்படவுள்ளன. மிக ஆரோக்கியமானதும் திடமான வளர்ச்சி உள்ள கன்றுகளுக்கு 10 ஆயிரம் ரூபாவும் ஆரோக்கிய நிலைக்கு குறைவான கன்றுக்குட்டிக்கு 7500 ரூபாவும் கொடுப்பனவாக வழங்கப்படவுள்ளன.
கடந்த காலங்களில் ஊக்குவிப்புத்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்ட வேளைகளில் ஊக்குவிப்பு உதவியாகப் பசுக் கன்று வளருங்காலத்தில் பயன்படுத்தும் போஷாக்கு உணவு வகைகள் மற்றும் மருந்து வகைகள் வழங்கப்பட்டு வந்தன. இந்த வருடம் உதவுதொகை ரொக்கமாக பயனாளிகளிடம் கையளிக்கப்படவுள்ளது.
பசு வளர்ப்பு ஊக்குவிப்பு உதவித்தொகை பெறுவதற்குத் தகுதிபெற்ற கன்றுகளை உரிய முறையில் மேற்பார்வை செய்து அறிவுறுத்தல் ஆலோசனைகளை வழங்குவதற்கு பிரதேச கால்நடை வைத்திய அதிகாரிகள் மற்றும் கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர்கள் குறித்த கால இடைவெளியில் கன்று வளரும் இடங்களுக்குச் சென்று பார்வையிடுவர்.
பயனாளிகள் கன்று பிறந்து குறிப்பிட்ட தினங்களுக்கு உள்ளே பதிவுகளை மேற்கொள்வதோடு கால்நடை வைத்திய அதகாரிகள் மற்றும் அதிகாரிகளின் அறிவுறுத்தலுக்கு ஏற்ப கன்றுகளைப் பராமரிக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-11)

வடக்கில் தேர்தல் பணியில் ஈடுபடுவோரின்

## விவரங்களை அனுப்பி வைக்குமாறு தேர்தல் திணைக்களம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 18
வடமாகாண சபைத் தேர்தலில் தேர்தல் கடமையில் ஈடுபடவுள்ள உத்தியோகத்தர்களின் விவரங்களை அந்தந்த மாவட்டத் தேர்தல்கள் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்குமாறு உதவித் தேர்தல்கள் ஆணையாளரால் கோரப்பட்டுள்ளது.
வடமாகாண சபைக்கான தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் இடம்பெறவுள்ளது. இதற்கான வேட்பு மனுக்கள் இந்த மாதம் 25 ஆம் திகதி முதல் ஓகஸ்ட் முதலாம் திகதி வரை தாக்கல் செய்யப்படவுள்ளன.
தேர்தல் ஏற்பாடுகள் வடமாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள தேர்தல் திணைக்களங்களினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்களும் தேர்தல்கள் திணைக்களத்தினால் கோரப்பட்டுள்ளன. இதற்கான முடிவுத் திகதி ஓகஸ்ட் இரண்டாம் திகதி வரை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
தேர்தல் தினத்தில் கடமையாற்றும் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர், கனிஷ்ட தலைமை தாங்கும் அலுவலர் மற்றும் ஏனைய பணிகளில் ஈடுபடவுள்ள உத்தியோகத்தர்களின் விவரங்களை உடனடியாக அனுப்பி வைக்குமாறு தேர்தல்கள் திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது. (ஐ-5)

## ஆவரங்கால், புத்தூர் பகுதியில் பஸ்தரிப்பு நிலையங்கள் அமைப்பு

### வலி.கிழக்கு பிரதேச சபை ஏற்பாட்டில்

யாழ்ப்பாணம், ஜூலை 18
வலி.கிழக்கு பிரதேச சபை ஆவரங்கால் மற்றும் புத்தூர் பகுதியில் பஸ்தரிப்பு நிலையங்களை அமைத்துத் திறந்து வைத்துள்ளது. பிரதேசத்தில் பருத்தித்துறை வீதியில் குறித்த பஸ்தரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.
பொது மக்களின் வசதி கருதி அமைக்கப்பட்ட குறித்த பஸ்தரிப்பு நிலையங்கள் தற்போது மக்களின் பாவனைக்கு விடப்பட்டுள்ளதாக சபைத்தலைவர் தெரிவித்தார்.
இது இவ்வாறிருக்க கோப்பாய், கைதடி வீதியிலும் பஸ்தரிப்பு நிலையம் ஒன்றை துரிதமாக அமைக்கும் பணிகள் இடம்பெறுகின்றன.
அதனை விட நீர்வேலி, இருபாலை போன்ற பகுதிகளிலும் பஸ்தரிப்பு நிலையங்கள் அமைக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (வ-17)

## விரைவில் இடம் மாறுகிறது சங்கானை மீன்சந்தை

சங்கானை மீன்சந்தையை தற்பொழுது செயற்படும் இடத்தில் இருந்து வேறு இடத்துக்கு மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது அதனைச் செயற்படும் இடத்தில் அதனை நடத்துவது தொடர்பாகப் பொதுமக்கள் ஆட்சேபனை தெரிவித்து வருவதை அடுத்து இடமாற்றம் செய்யப்படவுள்ளது.
மீன்சந்தையை இடம் மாற்றுவதற்கு வசதியாக ஏழு பரப்புக் காணி வலி. மேற்கு பிரதேச சபைக்குக் கையளிக்கப்பட்டுள்ளது. இதில் ஐந்து பரப்பு பொதுமக்களின் ஒத்துழைப்புடனும் இரண்டு பரப்புக் காணியை சங்கானையைச் சேர்ந்த க.முருகானந்தம் என்பவரும் வழங்கி உதவியுள்ளனர்.
சங்கானை பட்டின அபிவிருத் திச் சபை பொதுமக்களின் வசதியைக் கருத்தில்கொண்டு சந்தை அமைப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது. புதிய மீன் சந்தையை அமைப்பதற்கான தீர்மானங்களும் பிரதேச ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன. சந்தைக் கட்டடத்துக்கான 7 பரப்பு காணியும் பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்டிருப்பதால் கட்டுமான வேலைகள் ஆரம்பிக்கப்பட விருப்ப



தாக சங்கானை பட்டின அபிவிருத்திச் சபையின் செயலாளர் கு.குணசிறி தெரிவித்தார். (வ-11)

காட்சியறை முகாமையாளர் தேவை
(SHOW ROOM MANAGER)
STAFFORD MOTOR'S இன் அங்கீகாரம் பெற்ற வடமராட்சி விற்பனை முகவரின் HONDA WORLD காட்சியறைக்கு
★ காட்சியறை முகாமையாளர் (Show room Manager) தேவை.
★ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
★வடமராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
★கணக்கியல், கணினி அறிவு, விற்பனைத்துறை அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
★ஆங்கிலம்/சிங்கள மொழி அறிவு உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
★விண்ணப்பதாரர் தங்கள் சுயவிபரக் கோவையை 7 நாள்களுக்குள் கீழ் உள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும்.
(C10530)
பணிப்பாளர்
HONDA WORLD
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
021 226 4416 - 077 0387444
eMail-rajavetham@yahoo.com

## தென்மராட்சியில் வெங்காயத்துக்கு கிராக்கி

தென்மராட்சி, ஜூலை 18
தென்மராட்சி பிரதேச சந்தைகளில் ஒரு கிலோ வெங்காயத்தின் விலை 200 ரூபாவைத் தாண்டியுள்ளது.
கடந்த சில தினங்களாக சந்தைகளுக்கு வெங்காயம் வருவது குறைந்துள்ளதையடுத்து சந்தையில் என்றுமில்லாத அளவுக்கு ஒரு கிலோ 240 ரூபாவாக விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் தெரிவித்தனர். (வ-9)

## தொழில்நுட்பக் கருத்தரங்கு

தென்மராட்சி, ஜூலை 18
புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப பாடத்தை பயிலத் தொடங்கியுள்ள சாவகச்சேரி இந் துக் கல்லூரி மாணவர்களுக்கான கருத்தரங்கு நாளை வெள்ளிக் கிழமை கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
கருத்தரங்கில் கைதடி தொழிற் பயிற்சி மையத்தைச் சேர்ந்த வர்கள் கலந்து கொண்டு கருத் தரங்கை நடத்தவுள்ளனர் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ் ணகுமார் தெரிவித்தார். (ஜ-9)

## வீதி அபிவிருத்தித் திணைக்கள வீதிகள் கூட திருத்தப்படவில்லை

### தென்மராட்சி மக்கள் விசனம்

தென்மராட்சி, ஜூலை 18
தென்மராட்சி பிரதேசத்தில் வீதி அபிவிருத்தி திணைக்களத்துக்குச் சொந்தமான பல வீதிகள் நீண்ட காலமாக புனரமைக்கப்படாமல் உள்ளமை குறித்து பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.
பிரதேசத்தில் காணப்படும் எல்லை வீதிகளும், மக்கள் பெருமளவில் போக்குவரத்துக்குப் பயன்படுத்தும் வீதிகளுமே இவ்வாறு புனரமைக்கப்படாமல் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
திணைக்களத்துக்குச் சொந்தமான பல வீதிகள் மக்கள் பயன்படுத்தமுடியாத அளவுக்கு குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றன. இது தொடர்பாக அந்தந்தப் பகுதிமக்கள் உரிய அதிகாரிகளுக்கு அறிவித்தும் பயன்கிடைக்க வில்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது.
ஏ-9 வீதியில் கைதடி-நுணாவில் வைரவர் கோயில் சந்தியிலிருந்து மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோயில் வரையிலான மூன்று கிலோ மீற்றர் நீளமான வீதியைப் புனரமைத்துத் தருமாறு மக்கள் விடுத்த வேண்டுகோளையடுத்து பன்றித் தலைச்சி அம்மன் ஆலய பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவ காலத்தில் சுமார் 500 மீற்றர் தூரம் சிறு திருத்தங்கள் செய்யப்பட்டன.
இவ்வீதியில் சுமார் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசிப்பதுடன் சரசாலை, மீசாலை, புத்தூர் ஆகிய பிரதேசங்களுக்குச் செல்வதற்கான குறுக்குப் பாதையாகவும் இந்த வீதி காணப்படுகிறது. (வ-9)



## நடமாடும் சேவையில் 800 பேர் வரை பயன்

### யாழ்.பிரதேச செயலகத்தில் நடந்தது



யாழ்ப்பாணம், ஜூலை 18
கபே அமைப்பு மற்றும் மனித உரிமைகள் நிலையம், யாழ்.பிரதேச செயலக அடையாள அட்டைப் பிரிவு என்பன இணைந்து யாழ். பிரதேச செயலகத்தில் நேற்று புதன்கிழமை தேசிய அடையாள அட்டை வழங்குவதற்கான நடமாடும் சேவையை நடத்தியது.
இதன்போது அடையாள அட்டைக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் காலங்கடந்த பிறப்பு இறப்புப் பதிவுகளும் மேற்கொள்ளப்பட்டன.
யாழ். பிரதேச செயலர் திருமதி சு.தெய்வேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கபே மனித உரிமைகள் நிலைய பிரதிநிதிகளுடன் கிராம அலுவலர்கள், பிரதேச செயலக அடையாள அட்டைப் பகுதியினர், சமாதான நீதவான்கள் கலந்து கொண்டனர்.
நேற்றைய நடமாடும் சேவையில் புகைப்படம், முத்திரைகள், புகைப்படப் பிரதிகள் இலவசமாகப் பெறுவதற்கான ஏற்பாடுகள் மக்களுக்கு வழங்கப்பட்டன.
கபே அமைப்பு இவற்றுக்கான செலவுகளை ஏற்றுக்கொண்டிருந்தது. சுமார் எண்ணூறுக்கும் அதிகமானோர் பயன்பெற்றனர். (வே-7)

## 413 நிலையங்களில் நுளம்பு பெருகும் சூழல்

### மாநகர சபையின் வேலைத்திட்டத்தில் அவதானிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 17
தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரத்தை முன்னிட்டு யாழ்.மாநகர சபையால் நடைமுறைப்படுத்தப்பட்ட வேலைத் திட்டங்களின் போது 7 ஆயிரத்து 215 நிலையங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன் 413 நிலையங்களில் நுளம்பு பெருகும் சூழல் இருந்தமை அவதானிக்கப்பட்டது.
அவற்றில் 15 நிலையங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்று யாழ்.மாநகர சபையின் பிரதம பொதுச் சுகாதாரப் பரிசோதகர் க.ஆ.ஜீவநாதன் தெரிவித்துள்ளார்.
கடந்த முதலாம் திகதி தொடக்கம் 7ஆம் திகதி வரையான காலப்பகுதி தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரமாக அனுஷ்டிக்கப்பட்டு இதன்போது மாநகரசபை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், தொண்டர்கள் உட்பட 797 பேர் ஒன்றிணைந்து யாழ்.மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.
வீடுகள், தனியார் நிறுவனங்கள், அரச திணைக்களங்கள், பாடசாலைகள் மற்றும் பொது இடங்களில் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்போது நகரப் பகுதி I, நகரப் பகுதி II, பொதுச் சுகாதாரப் பிரிவுகளில் 1198 நிலையங்கள் பரிசோதிக்கப்பட்ட போது 93 நிலையங்களில் நுளம்பு பெருகும் சூழல் இனங்காணப்பட்டது. நல்லூர் பொதுச் சுகாதாரப் பிரிவுகளில் 1021 நிலையங்கள் பரிசோதிக்கப்பட்டு 103 நிலையங்களில் நுளம்பு பெருகும் சூழல் இனங்காணப்பட்டது. குருநகர் I, குருநகர் II பொதுச் சுகாதார பிரிவுகளில் 1478 நிலையங்கள் பரிசோதிக்கப்பட்டு 41 நிலையங்களில் நுளம்பு பெருகும் சூழல் இனங்காணப் பட்டது.
வண்ணார்பண்ணை பொதுச் சுகாதாரப் பிரிவுகளில் 984 நிலையங்கள் பரிசோதிக்கப்பட்டு 80 இடங்களில் நுளம்பு பெருகும் சூழல் இனங்காணப்பட்டது. அரியாலைப் பொதுச் சுகாதாரப் பிரிவில் 516 நிலையங்கள் பரிசோதிக்கப்பட்டு 15 நிலையங்களில் நுளம்பு பெருகும் சூழல் இனங்காணப்பட்டது. நாவாந்துறை பொதுச் சுகாதாரப் பிரிவில் 1103 நிலையங்கள் பரிசோதிக்கப்பட்டு 69 நிலையங்களில் நுளம்பு பெருகும் சூழல் இனங்காணப்பட்டது. கொழும்புத்துறைப் பொதுச் சுகாதாரப் பிரிவில் 915 நிலையங்கள் பரிசோதிக்கப்பட்டு 12 நிலையங்களில் நுளம்பு பெருகும் சூழல் இனங் காணப்பட்டது.
இதனைவிட 42 பாடசாலைகள் பரிசோதிக்கப்பட்டு 9 பாடசாலைகளில் நுளம்பு பெருகும் சூழல் இனங்காணப்பட்டது.
அத்துடன் 23 அரச திணைக்களங்கள் பரிசோதிக்கப்பட்டு 2 அரச திணைக்களங்களில் நுளம்பு பெருகும் சூழல் இருந்தமை இனங்காணப்பட்டது.
பரிசோதனை நடவடிக்கைகளின் போது 21 நிலையங்களில் நுளம்புக் குடம்பிகள் காணப்பட்டதுடன் 22 நிலையங்களுக்கு எச்சரிக்கை அறிவித்தல் வழங்கப்பட்டது. இதனைவிட 15 நிலையங் களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (வ-14)

## மாணவருக்கான கருத்தரங்கு

பளை, ஜூலை 18
சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் கல்விச் செயற்றிட்டத்தின் கீழ் பளைப் பிரதேச பாடசாலைகளில் ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு இன்றுவியாழக்கிழமை மு.ப.9 மணிக்கு பளை ஆரம்பப் பாடசாலையில் நடைபெறும்.
பளைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் இதில் கலந்து கொள்வர் என கழகத் தலைவர் லயன் பி.தளிர்ராஜ் அறிவித்துள்ளார். (வ-9)

## ஒலிபெருக்கிகளின் சத்தத்தால் மாணவரின் கல்வி நிலை பாதிப்பு

### ஆலயங்களுக்கு அறிவுறுத்துமாறு
### சாவகச்சேரி நகர சபை உறுப்பினர்கள் கோரிக்கை



தென்மராட்சி, ஜூலை 18
இந்து ஆலயங்களில் உற்சவங்கள் ஆரம்பித்துள்ளதால் அங்கு பயன்படுத்தப்படும் ஒலிபெருக்கிகளால் மாணவர்களின் கல்வி நிலை பாதிக்கப்படுவதாக நகர சபை உறுப்பினர்கள் நேற்று முன்தினம் நடைபெற்ற நகர சபைக் கூட்டத்தில் ஒருமித்த குரலில் தெரிவித்தனர்.
ஆலயங்களில் உற்சவ வேளையில் பயன்படுத்தும் ஒலிபெருக்கிகளின் சத்தத்தை ஆலய வளாகத்தினுள் மட்டும் கேட்கக்கூடிய வகையில் பயன்படுத்த வேண்டுமென சம்பந்தப்பட்ட ஆலயங்களுக்கும், பெரிதாக ஒலியெழுப்பும் வகையிலான ஒலிபெருக்கிகளை பயன்படுத்த அனுமதிவழங்கக் கூடாது என பொலிஸாருக்கும் அறிவிக்கவேண்டுமெனவும் உறுப்பினர்களால் கருத்துக்கள் முன் வைக்கப்பட்டன.
பாடசாலைகளின் இரண்டாம் தவணைப் பரீட்சை, க.பொ.த உயர்தரப் பரீட்சை, ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை ஆகியவற்றுக்குத் தோற்றும் மாணவர்கள் ஆலயங்களின் ஒலி பெருக்கிப் பாவனையால் பாதிக்கப்படுவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டதாக தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தெரிவித்தார். (வ-9)


## பிரதேச செய்தியாளர்கள்

★ தெல்லிப்பழை
★ சுன்னாகம்
★ ஏழாலை
★ சண்டிலிப்பாய்
★ இளவாலை
★ பண்டத்தரிப்பு
★ இணுவில்
★ புன்னாலைக்கட்டுவன்
★ உரும்பிராய்
★ திருநெல்வேலி
★ கோப்பாய்
★ நீர்வேலி
★ புத்தூர்
★ கல்வியங்காடு
★ புங்குடுதீவு
★ ஊர்காவற்றுறை
★ வல்வெட்டித்துறை
★ உடுப்பிட்டி
★ தொண்டமானாறு
★ நாகர்கோவில்
★ தாளையடி
★ இயக்கச்சி
★ மிருசுவில்

தேவை

மேற்குறிப்பிட்ட இடங்களுக்கு பிரதேச செய்தியாளர் களாகப் பணியாற்ற விரும்புவோர் தமது சுய விவரங்களை editor @ uthayan.com என்ற - மின் அஞ்சல் முகவ ரிக்கோ அல்லது உதயன் வெளியீட்டகம், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற தபால் முகவரிக்கோ அனுப்பி வைக்க வேண்டும்.

உதயன்
18/07/2013

## இடையூறான கட்டடங்களை இடியுங்கள்

### தமிழக அரசுக்கு நீதிமன்று அனுமதி

சென்னை, ஜூலை 18

சென்னையில் மெட்ரோ ரயில் திட்டத்திற்கு இடையூறாக இருக்கும் கட்டடங்களை இடித்து தள்ளலாம் என்று தமிழக அரசுக்கு உயர்நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

சென்னை நகரம் முழுவதும் மெட்ரோ ரயில் திட்டத்திற்கென நிலங்களை அரசு சுவீகரித்து அதை மெட்ரோ ரயில் நிறுவனத்திடம் ஒப்படைத்து வருகிறது. இதை எதிர்த்து சென்னை நகரில் பாதிக்கப்பட்டவர்கள் பலர் சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அனைத்து வழக்குகளும் தள்ளுபடி செய்யப்பட்டன.

அதையடுத்து சென்னை மத்திய ரயில் நிலையத்துக்கு முன்னாள் உள்ள கட்டடங்களை சம்பந்தப்பட்டவர்களே இடித்து விட்டு நிலத்தை ஒப்படைக்குமாறு தமிழக அரசு உத்தரவிட்டது. அதையெதிர்த்து கட்டட உரிமையாளர்கள் 39 பேர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தனர். இந்த வழக்கை விசாரித்து நீதிமன்றம் மனுதாரர்களிடம் விளக்கம் கேட்டு அதன்பிறகே அரசு உரிய உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று தீர்ப்பு வழங்கியது.

எனினும் அதை எதிர்த்து தமிழக அரசு சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு மனு தாக்கல் செய்தது.

மனுவை விசாரித்த சென்னை உயர்நீதிமன்றம், அரசுக்குச் சொந்தமான இடத்தில் மனுதாரர்கள் குத்தகைக்கு இருந்துள்ளனர் என்று தெளிவாகத் தெரிகிறது. எனவே இந்த இடத்தைவிட்டு வெளியேற வேண்டும் என்று அரசு பிறப்பித்த உத்தரவு செல்லுபடியானதாகும். காலி செய்த பிறகு அங்குள்ள கட்டடங்களை இடித்துத் தள்ளி விட்டு அதை மெட்ரோ ரயில் நிறுவனத்திடம் ஒப்படைக்க வேண்டும் என்று அதிகாரிகளுக்கு அரசு உத்தரவிட்டமையும் சரியானதே. மெட்ரோ ரயில் திட்டம் பொதுமக்களுக்கு பயனளிக்கும் திட்டமாகும்." என்று தீர்ப்பு வழங்கியுள்ளது. (ற)

# மதிய உணவில் விஷம் 22 மாணவர்கள் சாவு

### 30க்கு மேற்பட்டோர் உயிருக்குப் போராட்டம்; பீகாரில் பரிதாபச் சம்பவம்

பாட்னா, ஜூலை 18

பீகாரில் அரச பாடசாலையில் வழங்கப்பட்ட மதிய நேர சத்துணவை உட்கொண்ட மாணவர்கள் 22 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 30 மாணவர்கள் ஆபந்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



நேற்றுமுன்தினம் வழங்கப்பட்ட மதிய நேர சத்துணவை உட்கொண்ட மாணவர்கள் சிறிது நேரத்தில் மயங்கி விழத் தொடங்கினர். அதை அடுத்து அவசரமாக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட போது வழியில் 9 மாணவர்கள் உயிரிழந்ததுடன் ஏனையவர்கள் மருத்துவனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளனர்.

மருத்துவனையில் அனுமதிக்கப்பட்டுள்ள ஏனைய 30 மாணவர்களின் நிலை கவலைக் கிடமாகக் உள்ளது என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பான துரித விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனஎன்று அறிவித்துள்ள பீகார் அரசு, உயிரிழந்தவர்களது குடும்பங்களுக்கு உடனடியாக நட்டஈடு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனஎன்றும்அறிவித்துள்ளது. எனினும் இந்தச் சம்பவம் பீகாரில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. பல இடங்களில் வன்முறைகள் இடம்பெற்றுள்ளதுடன், அரச பஸ்கள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளன. அதையடுத்து அங்கு பெரும் பதற்ற நிலை தோன்றியுள்ளது. (ற)

## தாக்குதல் நடத்தியவர்கள் புதியவர்களாக இருக்கலாம்

### மகாபோதி தாக்குதல் குறித்து தேசிய புலனாய்வு நிறுவனம்


புத்தகயா, ஜூலை 18

புத்தகயாவில் உள்ள மகாபோதியில் தாக்குதல் நடத்தியது புதிய தீவிரவாத அமைப்பாக இருக்கலாம் என்று இந்திய தேசிய புலனாய்வு நிறுவனம் சந்தேகம் வெளியிட்டுள்ளது.

பீகார் மாநிலம் புத்தகயாவில் உள்ள மகாபோதியில் கடந்த 7ஆம் திகதி அடுத்தடுத்து 9 குண்டுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. அதில் 2 புத்த துறவிகள் காயமடைந்தனர்.

அந்தச் சம்பவம் தொடர்பாக விசாரித்து வரும் தேசிய புலனாய்வு நிறுவனம் 4 பேரைக் கைது செய்திருந்த போதும், பின்னர் அவர்களை விடுவித்திருந்தது. அதன்பின்னர் குற்றவாளிகள் பற்றித் தகவல் கொடுப்போருக்கு ரூ.10 லட்சம் பரிசும் அறிவிக்கப்பட்டது.

இந்தநிலையில், குறித்த தாக்குதலை மேற்கொண்டது



புதிய தீவிரவாத அமைப்பாக இருக்கக் கூடும் என்று தேசிய புலனாய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது. மகா போதியில் பயன்படுத்தப்பட்ட வெடிகுண்டுகள் இதுவரை நடத்தப்பட்ட தாக்குதல்களில் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்று தெரிவித்துள்ள தேசிய புலனாய்வு நிறுவன அதிகாரிகள், அதனால் தாக்குதலை நடத்தியது புதிதாகத் தோற்றம் பெற்ற தீவிரவாத அமைப்பாக இருக்கலாம் என்று சந்தேகம் தெரிவித்துள்ளனர். (ற)



ஜம்மு காஷ்மீர் மாநில தலைநகர் ஸ்ரீநகரின் பாதமால்லோவில் தீவிரவாதியை ஏற்றிச் சென்ற பொலிஸ் வாகனம் மீது கையெறி குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. அதையடுத்து அப்பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு, தீவிர சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.(ற)

## வெளியில் வரமறுக்கும் சங்கிலி; காத்திருக்கும் பொலிஸார்

மதுரை, ஜூலை 18

சங்கிலியை விழுங்கிய பெண்ணிடம் இருந்து சங்கிலியை மீட்பதற்கு 7 நாள்களாகப் படாதபாடுபடுகின்றனர் வைத்தியசாலைப் பணியாளர்கள். இந்த விநோத சம்பவம் இந்தியாவின் மதுரை மாவட்டத்தில் இடம்பெற்றுள்ளது.

மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றத்தைச் சேர்ந்தவர் 70 வயதுடைய செல்லம்மாள். கடந்த 9ஆம் திகதி இரவு வீட்டில் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தபோது அவரது கழுத்தில் இருந்த 3 பவுன் சங்கிலியை உறவினர் மல்லிகா (வயது-40) திருட முயன்றார். செல்லம்மாள் கூச்சலிடவே, பிடிபடாமல் தப்புவதற்காக மல்லிகா சங்கிலியை விழுங்கி விட்டார். அதையடுத்து திருப்பரங்குன்றம் பொலிஸார் மல்லிகாவைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட மல்லிகாவை வைத்தியசாலையில் அனுமதித்த பொலிஸார் சங்கிலியை எடுக்கும் முயற்சியில் இறங்கினர். எனினும் சந்திரசிகிச்சை செய்ய முடியாததால் அவருக்கு பேதி மருந்து கொடுத்து சங்கிலியை எடுக்க முயற்சித்து வருகின்றனர். கடந்த 7 நாள்களாக மல்லிகாவின் பின்னால் அலைந்து திரிகின்றனர் மருத்துவமனை ஊழியர்கள். சங்கிலிதான் இன்னும் வெளிவரவில்லை. வேறுவழியின்றி பொலிஸாரும் மருத்துமனையில் காத்துக் கிடக்கின்றனராம். (ற)

### ராஜீவ் காந்தி கொலை வழக்கு

## விசாரணை விவரங்களை பேரறிவாளன் பார்வையிடலாம்

புதுடில்லி, ஜூலை 18


இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி படுகொலை வழக்கு தொடர்பான விசாரணை விவரங்களை அறிந்துக்கொள்ள அந்த வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட பேரறிவாளனுக்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்று மிக முக்கிய பிரமுகர்களின் பாதுகாப்புத் தொடர்பான விவகாரங்களை கையாளும் துறைக்குத் தகவல் ஆணையாளர் சுஷ்மா சிங் உத்தரவிட்டுள்ளார்.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கு தொடர்பாக விசாரணை நடத்துவதற்காக வர்மா ஆணையக்குழு, ஜெயின் ஆணையக்குழு ஆகிய 2 விசாரணை ஆணையக் குழுக்கள் அமைக்கப்பட்டன. ராஜீவ் காந்திக்கு அளிக்கப்பட்ட பாதுகாப்பில் ஏற்பட்ட குறைபாடு, அவரை கொல்வதற்காக தீட்டப்பட்ட சதித்திட்டம் உள்ளிட்ட பல அம்சங்களை இவ்விரு ஆணைக்குழுக்களும் விசாரித்தன.

விசாரணைகளின் முடிவில் இந்தக் கொலை தொடர்பான வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகியோருக்கு தூக்குத் தண்டனை அளிக்கப்பட்டது. அதை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப்பட்ட போதும் தண்டனை உறுதி செய்யப்பட்டதுடன், குற்றச்சாட்டப்பட்டவர்களால் தாக்கல் செய்யப் பட்டிருந்த கருணை மனுக்களையும் இந்திய முன்னாள் ஜனாதிபதி பிரதீபா பாட்டீல் தள்ளுபடி செய்திருந்தார்.

இந்நிலையில், மரண தண்டனை விதிக்கப்பட்ட பேரறிவாளன், ஜெயின் மற்றும் வர்மா ஆணைக்குழுக்கள் நடத்திய விசாரணையின் போது அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள், விசாரணை விபரங்கள், அரசு எடுத்த நடவடிக்கை குறிப்புகள் ஆகியவற்றை வழங்க வேண்டும் என்று தகவல் அறியும் உரிமை சட்டத்தின் மூலம் மனு செய்தார்.

இந்நிலையில், கருணை மனு தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில் தனது வழக்கு தொடர்பான விசாரணையைப்பற்றி அறிந்துக்கொள்ள மரண தண்டனை விதிக்கப்பட்ட பேரறிவாளனுக்கு வாய்ப்பளிக்க வேண்டும் என தகவல் ஆணையாளர் சுஷ்மா சிங் உத்தரவிட்டுள்ளார். (ற)



19ஆம் நூற்றாண்டில் பின்லாந்து வளைகுடாவில் முழ்கிய ரஷ்ய கடற்படைக் கப்பலின் எஞ்சியுள்ள பகுதிகளை, 'சீ எக்ஸ்புளோர் 5' எனப்படும் கண்ணாடி நீர்மூழ்கிக் கப்பல் மூலமாகச் சென்று பார்வையிட்டார் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின்.

## 'இரகசியம் காக்கிறோம்'

### விளக்கமளிக்கிறது மைக்ரோ சொப்ட்

நியூயோர்க், ஜூலை 18
சர்வதேச நாடுகளை இரகசியமாக உளவு பார்க்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டமை தொடர்பாக அமெரிக்கா மீது குற்றச்சாட்டுகள் எழுந்துள்ள நிலையில், தாம் பயனாளிகளின் தகவல் எதையும் அமெரிக்காவுக்கு வழங்கவில்லை என்று மைக்ரோசொப்ட் நிறுவனம் தெரிவித்துள்ளது.

"பயனாளிகள் தரவுகள் இரகசியமாகவே வைக்கப்பட்டுள்ளன. அவ்வாறு தகவல்கள் கோரப்படும் நிலையில் முறையான சட்ட நடவடிக்கைகளின் பிரகாரம் குறித்த தகவல்கள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்" என்று அந்த நிறுவனம் விளக்கமளித்துள்ளது.

எனினும் அமெரிக்கா இரகசியமாக முன்னணி இணைய வழங்கிகளை ஊடுருவி தரவுகளை திரட்டுகின்றது என்று தெரிவித்துள்ளார் சி.ஐ.ஏ. முன்னாள் பணியாளர் எட்வேர்ட் ஸ்நோடன். (ற)

## பாக். ஜனாதிபதி தேர்தல் ஓக.6

இஸ்லாமாபாத், ஜூலை 18
பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரியின் பதவிக் காலம் எதிர்வரும் 8 ஆம் திகதி முடிவடைவதை அடுத்து, ஓகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தலை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி நடத்துவதற்கு பாகிஸ்தானின் தலைமைத் தேர்தல் ஆணையாளர் பக்ருதீன் இப்ராகிம் ஒப்புதல் வழங்கியதை அடுத்தே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

அதையடுத்து வேட்பாளர்கள் அனைவரும் எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு முன்னர் வேட்புமனுக்களை தாக்கல் செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ற)

## 'ஸ்நோடனை தாருங்கள்'

### ரஷ்யாவிடம் அமெ.


நியூயோர்க், ஜூலை 18
மொஸ்கோவில் தங்கியுள்ள எட்வேர்ட் ஸ்நோடனை தம்மிடம் ஒப்படைக்குமாறு மீண்டும் ரஷ்யாவிடம் கோரிக்கை விடுத்துள்ளது அமெரிக்கா.

"ஸ்நோடன் மனித உரிமை ஆர்வலர் அல்ல. அமெரிக்காவின் இரகசியத் தகவல்களை வெளியிட்ட குற்றவாளி. அவரைத் திருப்பி அனுப்பும் நடவடிக்கைகளை ரஷ்யா மேற்கொள்ளவேண்டும்" என்று வலியுறுத்தியுள்ளது அமெரிக்கா.

எனினும் இதுகுறித்து ரஷ்யா வழமை போன்று எதுவித கருத்தையும் வெளியிடவில்லை. (ற)

# சிக்கிக் கொண்டது வடகொரிய கப்பல்

## சீனி மூடைகளுக்கு நடுவே ஆயுதங்கள்



மன்ஜநில்லோ, ஜூலை 18
வடகொரியாவுக்குச் சொந்தமான கப்பலொன்றில் ஆயுதங்கள் கடத்தப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதை அடுத்து அந்தக் கப்பல் தடுத்து வைக்கப்பட்டுள்ளது என்று பனாமா அரசு அறிவித்துள்ளது.

சீனி மூடைகளுக்கு நடுவே மறைத்துக் கடத்தப்பட்ட ஆயுதங்கள் சுமார் 240 தொன் எடையுடையவை என்றும் பனாமா அரசு மேலும் தெரிவித்துள்ளது. அவற்றில் விமான எதிர்ப்பு ஏவுகணைத் தொகுதிகள், ஒன்பது ஏவுகணைகளின் உதிரிப்பாகங்கள், இரண்டு மிக் - 21 போர் விமானங்கள் மற்றும் 15 மிக் விமான இயந்திரங்கள் என்பன அடங்கியுள்ளன என்றும் தெரியவருகின்றது.

இதுகுறித்து பனாமா அரசு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது,

"கப்பல் மூலம் போதைப் பொருள்கள் கடத்தப்படுகின்றன என்று எமக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து கடற்படையினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தனர். அந்த வழியாகப் பயணத்தை மேற்கொண்டிருந்த குறித்த வடகொரியக் கப்பல் வழிமறிக்கப்பட்டு சோதனை செய்யப்பட்டது. குறித்த கப்பலில் சீனி மூடைகள் உள்ளன என்றும், கியுபாவில் இருந்து வடகொரியாவுக்குச் பயணத்தை மேற்கொள்வதாகவும் தெரிவிக்கப்பட்டது. கடற்படையினரின் சோதனைகளின் போது குறித்த கப்பலின் கீழ்த் தளத்தில் பெருமளவு ஆயுதத் தளபாடங்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து கப்பல் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதுடன், குறித்த ஆயுதக் கடத்தல் ஐ.நா. ஆயுதக் கடத்தல் தீர்மானத்துக்கு எதிரானது' என்ற அடிப்படையில் தற்போது கரீபியன் துறைமுகத்தில் நிறுத்தப்பட்டுள்ளது," என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆயுதங்கள் 20ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியைச் சேர்ந்தவைகள் என்று அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற)

## ஐ -போன் அழைப்பில் ஓடோடி வந்தார் எமன்

### இளம் பெண் பரிதாபச் சாவு


பீஜிங், ஜூலை 18
ஐ-போனில் வந்த அழைப்புடன் பேசிக்கொண்டிருந்த இளம் பெண் மின்சாரம் தாக்கி உயிரிழந்த சம்பவம் சீனா வில் பெரும் பரபரப்பை ஏற் படுத்தியுள்ளது.

சீனாவின் உய்குர் பகுதியைச் சேர்ந்தவர் 23 வயதுடைய மா. இவர் தனது ஐ-போனை மின்னேற்றுவதற்காக மின் இணைப்புடன் இணைத்திருந்தார். அப்போது அழைப்பு ஒன்று வரவே, மின் இணைப்பைத் துண்டிக்காது அப்படியே பேசிக் கொண்டிருந்தார். திடீரென ஐ-போன் ஊடாக மின்சாரம் பாயத் தொடங்கியுள்ளது. மா அந்த இடத்திலேயே துடிதுடித்து உயிரிழந்துள்ளார்.

பெரும் தொகையானோர் அப்பிள் நிறுவனத்தின் ஐ-போனை உபயோகித்து வரும் நிலையில் இந்தச் சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்பட்டுத்தியுள்ளது.

இந்தச் சம்பவத்துக்கு வருத்தம் தெரிவித்துள்ள அப்பிள் நிறுவனம், இந்தச் சம்பவம் தொடர்பாக முழுமையான விசாரணைகள் நடத்தப்படும் என்று தெரிவித்துள்ளது. (ற)

## 40 ஆண்டுகளின் பின்னர் சூரியவெளிச்சம் காணும் நகர்



ஜெனிவா, ஜூலை 18
சுமார் 40ஆண்டுகளாக சூரிய ஒளியே படாமல் இருந்த நோர்வேயின் ருஜுகான் நகரம், தற்போது கண்ணாடிகளின் உதவியால் சூரிய வெளிச்சத்தை பெறுகிறது.

1970ஆம் ஆண்டு நோர்ஸ்க் ஹைட்ரோ என்ற தொழில் நிறுவனத்தின் இணை இயக்குநரான சாம் அய்டு என்பவரால் ருஜுகான் நகரம் உருவானது. அந்த நகரம் நோர்வேயின் டெலிமார்க் பகுதியில், குறுகலான பள்ளத்தாக்கில் அமைந்துள்ளது. எனவே இங்கு சூரிய வெளிச்சம் இயற்கையாக விழுவதற்கு வாய்ப்பே இல்லை.

அதனால் குளிர்காலத்தில் இங்குள்ள மக்கள் 'கேபிள் கார்' மூலம் அருகில் உள்ள மலை உச்சிக்கு சென்று சூரிய வெளிச்சத்தை அனுபவித்துத் திரும்புவதை வாடிக்கையாகக் கொண்டிருந்தனர். தற்போது அந்தப் பிரச்சினைக்கு மாற்றுத் தீர்வொன்றைக் கண்டறிந்துள்ளனர். அருகில் உள்ள மலையில் 450 மீற்றர் உயரத்தில் மூன்று பெரிய கண்ணாடிகள் பொருத்தி, அக்கண்ணாடிகளில் படும் சூரிய வெளிச்சத்தை எதிரொலிக்க வைப்பதன் மூலம், நகரின் மத்திய பகுதியில் சூரிய வெளிச்சம் படுகிறது. இத்திட்டம் கடந்த முதலாம் திகதி முதல் செயற்படுத்தப்பட்டு வருகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற)

## யூடியூப்பை கலக்கிய சிறுமி புற்றுநோயால் சாவு

நியூயோர்க், ஜூலை 18
யூடியூப்பை கலக்கி வந்த அமெரிக்க சிறுமியான டாலியா ஜோய் கெஸ்டலானோ புற்றுநோயுடன் போராடி வந்த நிலையில் உயிரிழந்தமை இணைய உலகை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

கடந்த 6 வருடங்களாக புற்று நோயுடன் போராடி வந்த 13 வயதான டாலியா ஜோய் கெஸ்டலானோ, ஒப்பனை மற்றும் அலங்காரங்கள் தொடர்பாக யுடியூப்பில் காணொலிகளை பதிவேற்றி வந்தார்.

அதன் மூலம் இணைய உலகில் பலராலும் விரும்பப்படும் ஒருவராக திகழ்ந்த அவரது யூடியூப் பக்கமானது 8 இலட்சத்துக்கும் அதிகமான பின்தொடர்நர்களைக் கொண்டுள்ளது.

அவர் நோயின் தாக்கத்தால் உயிரிழந்த செய்தி அவரது யூடியூப் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது. சிறுமியின் இழப்புக்கு பல்லாயிரக்கணக்கானோர் அனுதாபங்களைத் தெரிவித்து வருகின்றனர். (ற)

## தீர்ப்பை எதிர்த்துப் போராட்டம்



போர்க்குற்றவாளியாக நீதிமன்றத்தால் இனங்காணப்பட்ட பங்களாதேஷ் அரசியல் கட்சித் தலைவரான குலாம் அஜமுக்கு விதிக்கப்பட்ட 90 ஆண்டுகள் சிறைத் தண்டனைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. வன்முறைச் சம்பவங்களில் 4 பேர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற)

# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

## VACANCY

Applications will be received by me up to 16 August 2013 from suitably qualified candidates for the following post;

1. POST – STENOGRAPHER GR.II (ENGLISH)
   (University of Jaffna)

**QUALIFICATIONS :**

I. G.C.E (Ordinary Level) Examination in six subjects at not more than two sittings with credit passes in three subjects including English

II. Proficiency in English Stenography with the following minimum speeds;

| | | |
|---|---|---|
| Shorthand | - | 80 w.p.m |
| Typing | - | 35 w.p.m ( Manual Type writer) |
| | | 55 w.p.m( Computer ) |

**Notes :**

*a) If suitable candidates are not available for recruitment according to the scheme of recruitment,applicants with lesser proficiency than specified, but who have successfully followed a course in English/Sinhala/Tamil stenography (as the case may be) of a recognized institution of which the duration is not less than one year, may be recruited as Trainee English/ Sinhala/Tamil Stenographers (as the case may be ), on a fixed salary equivalent to the initial of the salary scale carrying the salary code U-MN 1 (III) per month. They may be placed in Grade.II within three years if they attain the specified proficiency. A Trainee who does not attain the specified proficiency within three years shall be discontinued.*

*b) The trainee period will not be taken into consideration for reckoning the required period for promotions.*

| | | |
|---|---|---|
| Salary Scale | : | U-MN 1 (III A) Rs.16070-17x155-18705 p.m |
| Selection | : | Test and By Interview |
| Age Limit | : | Not more than 45 years (Note - Age limit is not applicable for applicants in the Government / Departments/ State Corporation and statutory bodies.) |

**Statutory Benefits:**

1. Allowance approved by the University Grants Commission.
2. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University System.
3. Gratuity payments
4. Employment Trust Fund Benefits
5. Free Medical care

Application forms may be obtained from the office of the Senior Assistant Registrar/ Establishments Branch (Non Academic Section), University of Jaffna, Thirunelvely, Jaffna, either in person or by post on a payment of Rs.100/= per application form.

Those who wish to obtain application forms by post are requested to send a Money Order / Postal Order drawn in favour of **" Bursar, University of Jaffna, Thirunelvely, Jaffna"** together with a self- addressed Rs.5.00 stamped envelope of 23x10 c.m in size.

Application forms and other details will also be available in the University website www.jfn.ac.lk . Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/ Postal Order for Rs.100/- to the applications forms drawn in favor of the Bursar, University of Jaffna.

Duly completed application form should be sent under registered cover to reach the Senior Assistant Registrar/ Establishments Branch (Non Academic Section), University of Jaffna, Thirunelvely, Jaffna on or before 16.08.2013

Applications sent on the specified form only will be accepted. Applications received after the closing date or illegible and incomplete applications will be rejected without intimation.

Those who are in Public Service/ Corporations / Statutory Bodies should forward their applications through their respective Heads of Departments/ Corporations/Boards.

Advance copies of applications may be sent in the first instance. However, no such applicant will be considered for the appointment if the applications routed through the Head of Department is not received.

**Registrar.** (C/10523)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம்ஜூலை18 யூ.என்.டீ.பியின் அனுசரணையுடன் தென்மராட்சி கிழக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்துக்கு உட்பட்ட நெல் உற்பத்தியாளர்களுக்கான ஆலோசனைக் கருத்தரங்கு இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்தக் கருத்தரங்கில் நெல் அறுவடை, சேமிப்பு, தொழில்நுட்பம், சந்தைப்படுத்தல் வழிமுறைகள் போன்றவை தொடர்பாக விவசாயப் போதனாசிரியர்கள்ஊடாகஆலோசனைகள் வழங்கப்படவுள்ளன.

இதனைவிட மஹிந்த சிந்தனையில் நெல் உற்பத்தி தன்னிறைவு தொடர்புடைய அரச உதவிகள், அரிசி ஆலைகளில் நெல் கொள்வனவு தொடர்பாகவும் கலந்துரையாடப்படவுள்ளன(வ-14-122)




சங்கானை செங்கற்படை மகாதேவப் பிள்ளையார் தேவஸ்தானம் – 2013

ஆறாம் திருவிழா

ஆறாதாரத்துக்கு ஆதியாய் திகழ் மூலாதாரத்தில் மலர்ந்து
ஆராதிக்கும் அடியார் தம் அருளுறு நிலை உவந்தே
உயிராவணம் உயர்த்தி உச்சியில் மலரும் நல்ல
உயர் ஆதனம் தா ஆனைமுகா திருநாளாம் ஆறு இன்று.

ஆக்கம்: சங்கை – சிவம்

சிறப்புற வாழ்த்துவோர் :
கதிரவேலு கஜேந்திரன் (றமணன்) நினைவாக
ஆஸ்பத்திரி வீதி, சங்கானை.

(சி/9767/12-6-3)

Japan இன் தயாரிப்பில் உலகின் முதற்தரம் வாய்ந்த

Koyo
Value & Technology — MADE IN JAPAN

KOYO என்றால் BEARING
BEARING என்றால் KOYO (C/10387)
எப்பொழுதும் நாம் உங்களுடன்

ZERENDIB MOTOR ENTERPRISE (PVT) LTD
60 - B ,SRI SANGARAJA MAWATHA,COLOMBO - 10
TEL:011-4378307 , 011-2341580 - 81 FAX:011-2454608 E-mail:zme@slt.lk

### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்ப 1977 டிசெம்பர் பிறந்த, விசாகம் முதலாம் கால், 26½ பாவமும், எவ்வித குற்றமில்லாத சிவில் எஞ்சினியர் மணமகனுக்கு தகுதியான மணப்பெண் தேவை. பட்டதாரி, அரச உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு:
021 321 4965, 075 047 0337 (C/10518)(3.6.11)

### வீடு வாடகைக்கு

கந்தர்மடம் சந்திக்கு அருகில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 077 656 2661 (30894)(3.6.11)

### தவறிவிட்டது

4 ஆம் வட்டாரம், மண்டைதீவைச் சேர்ந்த செல்வநாயகம் நீற்றம்மா என்பவரது தேசிய அடையாள அட்டை 507422721v கடந்த (13.07.2013) அன்று மண்டைதீவுக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 021 222 4764 (30961)(3.6.11)

### வீடு வாடகைக்கு

சுதுமலையில் சகல வசதிகளுடனான வீடு வாடகைக்குண்டு.சிறிய குடும்பம்/அரச உத்தியோகத்தர்கள்/ நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 042 6936 (30970)(3.6.11)

### புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.07.2013

**Aat (Srilanka)**

Foundation, intermediate, final
Medium:Tamil& English
Further Details

JAFFNA COLLEGE
UNDERGRADUATE Dept,
464, Hospital Road, Jaffna.
021 222 3382 (c/10514)(3.6.11)

### தவறிவிட்டது

பத்மநாதன் லதன் என்பவருடைய தே.அ. அட்டையும் (872790730 V), முக்கிய ஆவணங்களும் (16.07.2013) புதன்கிழமை யாழ் பேருந்து நிலையத்துக்கும், கஸ்தூரியார் வீதிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க் கண்ட இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்புக்கு: 0213213941 (30965)(10,6,3)

### சுருக்குக்கேற் விற்பனைக்கு

கடையில் பாவித்த சுருக்குக்கேற் விற்பனைக்குண்டு. அகலம் 13½ அடி (இரண்டு பாதிகள்) உயரம் 8 அடி.

தொடர்பு: 19/20, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.
தொ.பே. 077 232 7058.



## ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் நிறுவன 26 ஆவது ஆண்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 18

யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் 26 ஆவது ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஜெய்ப்பூர் நிறுவன வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி நளாயினி இன்பராஜ், சிறப்பு விருந்தினராக துணுக்காய் பிரதேச செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராசா ஆகியோர் கலந்து கொள்வர்.

இதன்போது மாற்றுவலுவுள்ளோருக்கான சேவைகளை வழங்கும் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம், வாழ்வகம், சிவபூமி யாழ். விழிப்புலனற்றோர் சங்கம், ஒளிரும் வாழ்வு மற்றும் நவீல்ட் பாடசாலை போன்றவற்றால் கலை நிகழ்வுகள் நிகழ்த்தப்படவுள்ளன. (வ-14)

# முதியோருக்கான கொடுப்பனவுகள்

### விவரம் பிரதேச செயலகங்களுக்கு


யாழ்ப்பாணம், ஜூலை 18

70 வயதுக்கு மேற்பட்ட முதியோருக்கான ஆயிரம் ரூபா கொடுப்பனவை இந்த வருடத்தில் மீதமுள்ள மாதங்களில் வழங்குவது தொடர்பான திகதிகள் முதியோருக்கான தேசிய செயலகத்தால் பிரதேச செயலகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் தொடக்கம் டிசெம்பர் மாதம் வரையான ஆறு மாத காலத்தில் மாதத்தின் 5 ஆம் திகதியிலிருந்து 12 ஆம் திகதிக்குள் ஞாயிறு மற்றும் பொது விடுமுறை தினங்கள் தவிர்ந்த ஏனைய தினங்களில் கொடுப்பனவுகள் அந்தந்த அஞ்சல் அலுவலகங்கள் ஊடாக வழங்கப்படல் வேண்டுமென முதியோர்களுக்கான தேசிய செயலகப் பதில் பணிப்பாளர் அனுஷா கோகுலபர்ணாந்து அறிவித்துள்ளார்.

70 வயதுக்கு மேற்பட்ட முதியோருக்கான ஆயிரம் ரூபா கொடுப்பனவுகள் அந்தந்த மாதத்தின் 5 ஆம் திகதி தொடக்கம் வழங்கப்பட வேண்டும் என தேசிய செயலகத்தால் முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் சில பிரதேச செயலகங்கள் உரிய வேளையில் இந்தக் கொடுப்பனவை அஞ்சல் நிலையங்களுக்கு அனுப்புவதில்லை எனகிடைத்தமுறைப்பாட்டை அடுத்து திகதி பற்றிய விவரங்கள் அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## நெல்லியடி வீதிகளில் ஒளிரா மின் விளக்குகள்



வடமராட்சி, ஜூலை 18

நெல்லியடி - பருத்தித்துறை வீதியில் நெல்லியடி நகர்ப் பகுதி தவிர்ந்த ஏனைய இடங்களில் உள்ள வீதி மின் விளக்குகள் ஒளிராமையால் இரவு வேளைகளில் சைக்கிள்களிலும் நடந்தும் செல்வோர் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இவ்வீதியில் நெல்லியடி தொடக்கம் அல்வாய் தெருமூடிமடம் வரையிலானதும் நெல்லியடி தொடக்கம் புறாப்பொறுக்கிச் சந்தி வரையானதுமான பிரதான வீதியில் பொருத்தப்பட்டுள்ள வீதி மின்விளக்குகளே ஒளிராமல் உள்ளன.

கரவெட்டிப் பிரதேச சபையால் பொருத்தப்பட்டுள்ள இவ்வீதி மின்விளக்குகளை மீண்டும் ஒளிர . வைத்து சைக்கிள் மற்றும் கால்நடைப் பயணிகளுக்கு உதவ சபை முன்வருமா எனக் கேள்வி எழுப்பப்படுகின்றது. (வ-8)

## இந்துமாமன்ற பதிவுக்குள் 55 இந்து ஆலயங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 18

நாடளாவிய ரீதியில் 55 இந்து அமைப்புக்கள் அகில இலங்கை இந்து மாமன்றத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக அகில இலங்கை இந்து மாமன்றம் தெரிவித்துள்ளது.

இந்து சமயத்தின் பண்பாடுகளைப் பாதுகாப்பதற்கான முன்னேற்றச் செயற்பாடுகளை மேற்கொண்டு வரும் அகில இலங்கை இந்து மாமன்றம் இந்து அமைப்புக்களின் நலன் செயற்பாடுகளுக்கு கைகொடுத்து வருகிறது.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மட்டுமல்லாது நாடளாவிய ரீதியில் இந்து சமயச் செயற்பாடுகளை மேற்கொண்டு வரும் இந்து அமைப்புக்கள் 55 இதுவரை அகில இலங்கை இந்து மாமன்றத்துடன் தொடர்பில் உள்ளன. இதனூடாக இந்து சமயத்தின் பாரம்பரியமாக நடைமுறைகள் பின்பற்றப்பட்டு வருகின்றன.

இந்து அமைப்புக்களின் செயற்றிட்டங்களுக்கும் அகில இலங்கை இந்து மாமன்றம் கைகொடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-14)





கீரிமலை நகுலேஸ்வரா மகா வித்தியாலயத்துக்கான புதிய நுழைவாயில் திறப்பு விழா வித்தியாலய அதிபர் திருமதி யாமனி சதீஸ்குமார் தலைமையில் நடைபெற்றபோது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தெல்லிப்பழை கோட்டக் கல்விப் பணிப்பாளர் சண்முககுலகுமார் வித்தியாலயத்தின் புதிய நுழைவாயிலைத் திறந்து வைத்தார். (வ)

## வாங்கிக் கட்டினார் தர்ம அடி முக்காற் காற்சட்டை ஆசாமி

### பஸ்ஸில் கைப்பை திருடியதால்

யாழ்ப்பாணம், ஜூலை 18

பஸ்ஸில் வைத்து மற்றொரு பயணியின் கைப்பையைத் திறந்து பணத்தைத் திருடிய முக்கால் காற்சட்டை அணிந்த இளைஞனுக்குச் சக பயணிகள் தர்ம அடியும் உதையும் கொடுத்து பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து இரவு 7 மணியளவில் புறப்பட்டு கொடிகாமம் நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் பயணிகள் பஸ்ஸிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது. யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டகுறிப்பிட்ட தனியார் பஸ்ஸில் சுமார் 25 வயது மதிக்கத்தக்க குறித்த இளைஞரும் பயணித்துள்ளார். பஸ்ஸினுள் இருந்த பெண்ணொருவரின் கைப்பையைத் திறந்து அதற்குள்ளிருந்த 500 ரூபா பணத்தைத் திருடியுள்ளார். பஸ் நடத்துநருக்கு பயணச்சீட்டுக்கான பணத்தை அவர் கொடுப்பதற்காக பார்த்தபோதே கைப்பையிலிருந்த பணம் திருடப்பட்டுள்ளதை அந்தப் பெண் அறிந்து கொண்டார்.

அவருக்கு அருகில் நின்றிருந்த குறித்த இளைஞர் அப்போது அந்த இடத்திலிருந்து நழுவ முற்பட்டார். அவரைப் பிடித்த சக பயணிகள் அவருக்குத் தர்ம அடி கொடுத்தனர். அந்த வேளையிலும் அந்த இளைஞன் தான் பணத்தைத் திருடவில்லை என்று கூறியுள்ளார்.

அவரைச் சுற்றி வளைத்த பயணிகள் அவர் அணிந்திருந்த முக்கால் காற்சட்டையினுள் இருந்து 500 ரூபா பணத்தை எடுத்தனர். அது தன்னுடையதுதான் என்று குறித்த பெண் உறுதிப்படுத்தியதையடுத்துப் பணம் மீட்கப்பட்டது. சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் அவரைக் கைது செய்தனர். கடந்த சனிக்கிழமையும் இதே வழிப் பாதை பஸ்ஸில் சங்கிலித் திருட்டு முயற்சியொன்று முறியடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (வ-4)

## வீதிகள் புனரமைப்பு

### முன்னுரிமை அடிப்படையில்

தென்மராட்சி, ஜூலை 18

சாவகச்சேரி நகரசபை அடுத்த வருடம் மேற்கொள்ளவுள்ள வீதி புனரமைப்பு வேலைகள் தொடர்பாக சபையினால் தயாரிக்கப்படவுள்ள வரவு செலவுத் திட்டத்தில் முன்னுரிமை அடிப்படையில் வீதிகளைத் தெரிவு செய்ய சபை உறுப்பினர்கள் ஒத்துழைப்புவழங்க வேண்டும் என சபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை கேட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:

சபை எல்லைக்குள் மோசமாகச் சேதமடைந்து காணப்படும் வீதிகளை புனரமைக்கும் பணிகளை முதலில் மேற்கொண்டு வருகிறோம். அடுத்த கட்டமாக வீதிகளில் சிறிய, பெரிய அளவில் உள்ள சேதங்களைத் திருத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவற்றை அடுத்த வருடத் திட்டத்தில் செய்து முடிக்க உறுப்பினர்கள் தத்தமது பிரதேசத்தில் உள்ள வீதிகளின் சேத விவரங்களை வழங்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.- என்றார். (ஐ-9)



## 6 கிராமங்களில் வாழ்வாதாரச் செயற்பாடு

### பாசிக் நிறுவனத்தின் ஏற்பாட்டில்

**இந்த செயற்றிட்டங்களால் 300 இற்கும் மேற்பட்ட பயனாளிகள் நன்மையடைகின்றனர்.**

யாழ்ப்பாணம், ஜூலை 18

ஜப்பான் நாட்டு அரசு சார்பற்ற நிறுவனமான பாசிக் நிறுவனத்தால் யாழ். மாவட்டத்தில் 6 மீன்பிடிக் கிராமங்களில் வாழ்வாதார மேம்பாட்டுச் செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடற்றொழில் கிராமங்களான காரைநகர் அம்பாள் கடற்றொழில் கூட்டுறவுச் சங்கம், வேலணை துறையூர் கடற்றொழில் கூட்டுறவுச் சங்கம், தும்பளை கடற்றொழில் கூட்டுறவுச் சங்கம், மணற்காடு கடற்றொழில் கூட்டுறவுச்சங்கம், உடுத்துறை கடற்றொழில் கூட்டுறவுச் சங்கம், கட்டைக்காடு கடற்றொழில் கூட்டுறவுச் சங்கம் ஆகிய திட்டக் கிராமங்களில் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கான கருவாடு பதனிடும் செயற்றிட்டம் இடம் பெற்று வருகிறது.

கருவாடு பதனிடும் நிலையங்களில் பயனாளிகளுக்கு பயிற்சி வழங்கப்பட்டு சுகாதார முறையில் கருவாடு தயாரிக்கப்பட்டு அவற்றை வடக்கிலும் தென்னிலங்கைப் பகுதிகளிலும் விற்பனை செய்வதற்கு நிறுவனம் உதவி வருகிறது.

இந்தத் திட்டத்தின் ஊடாக பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்கள் நன்மையடைகின்றன. இவர்களின் தொழில் முயற்சிக்கு ஏதுவாக மணற்காடு, கட்டைக்காடு ஆகிய இரண்டு இடங்களிலும் நிரந்தரக் கட்டடத்தில் கருவாடு பதனிடும் நிலையங்கள் அமைக்கும் பணிகள் இடம்பெறுகின்றன.

இந்தச் செயற்றிட்டங்களால் 300 இற்கும் மேற்பட்ட பயனாளிகள் நன்மையடைகின்றனர்.

வேலணை திட்டக் கிராமத்தில் இறால்கருவாடு தயாரிக்கப்பட்டு உள்ளூர் மற்றும் வெளி மாவட்டங்களிலும் விற்பனை செய்யப்படுகிறது. இதனூடாகக் கிடைக்கக்கூடிய வருமானத்தைக் கொண்டு பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களின் வாழ்வாதாரம் மேம்படுத்தப்பட்டு வருகிறது. (வ-14)


## அம்பாறை மாவட்டத்தில் ஐந்து புதிய குளங்கள்



அம்பாறை,ஜூலை 18
அம்பாறை மாவட்டத்தின் அதிக வறட்சி நிலவும் கிராமப் புறங்களை மையப்படுத்தி பாம் பவுண்டேஷன் என்ற அரச சார்பற்ற அமைப்பு 5 சிறிய குளங்களை நிர்மாணித்துள்ளது. மொத்தமாக 41 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட இந்தக் குளங்கள் மூலம் நேரடியாக 2500 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் நன்மையடைவர் என்று பாம் பவுண்டேஷன் அமைப்பின் கிழக்கு மாகாண திட்ட இணைப்பாளர் எஸ்.பாஸ்கரன் தெரிவித்தார்.


# கிழக்கு மாகாணசபை அமர்வில் தீர்மானங்கள் பல நிறைவேற்றம்

திருமலை, ஜூலை 18
கிழக்கு மாகாண சபையின் அமைச்சரவைக் கூட்டம் கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத் தலைமையில் நடைபெற்றது.
இந்த அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களைக் கிழக்கு மாகாண அமைச்சரவைப் பேச்சாளரும், வீதி அபிவிருத்தி அமைச்சருமான எம்.எஸ் உதுமாலெப்பை வீதி அபிவிருத்தி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் வெளியிட்டார்.
அவை வருமாறு:
★சம்மாந்துறை ஆயுர்வேத மத்திய மருந்தகத்தை மாவட்ட ஆயுள் வேத வைத்தியசாலையாக தரம் உயர்த்தக் கோருதல்.
★கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபையை உருவாக்குதல்.
★ கிழக்கு மாகாண அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு 500 மில்லியன் விசேட நிதியைப் பெறுவதற்கான அனுமதி கோருதல்.
★ கிழக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் நியதிச் சட்டத் திருத்தம்.
★ 2012 ஆம் ஆண்டு ஆங்கில (டிப்ளோமா) ஆசிரியர்களை இணைத்துக் கொண்டு வழங்கப்பட்ட நியமனங்களில் மாகாணங்களுக்கிடையிலான வேறுபாட்டை விலக்கல்.
★குச்சவெளிப்பிரதேசத்தில் நீண்ட காலக் குத்தகை அடிப்படையில் காணி வழங்குவதற்கான அனுமதி.
★. கிழக்கு மாகாண சபையின் உயர்பதவிகளுக்கு அதிகாரிகளை நியமித்தல்.
★கிழக்கு மாகாண சபையில் வெற்றிடமாக உள்ள சாரதி நியமனங்களை ஒப்பந்த அடிப்படையில் வழங்க நடவடிக்கை எடுத்தல் என்பனவாகும். (ச)



திருகோணமலை, பத்தாம் குறிச்சி சம்பனி பிள்ளையார் ஆலய மகா கும்பாபிசேகம் நடைபெற்றபோது.... (ச-40)

## சட்டவிரோத சிகரட்டுகள் கல்முனையில் சிக்கின



கல்முனை,ஜூலை 18
கொழும்பில் இருந்து பயணிகள் பஸ்ஸில் கல்முனைக்கு எடுத்துவரப்பட்ட ஒரு தொகை சட்டவிரோத சிகரட்டுகள் கல்முனை பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.
புதன்கிழமை அதிகாலை 5 மணிக்கு கல்முனையில் தேநீர் கடை ஒன்றின் அருகே பஸ்ஸில் கொண்டுவரப்பட்ட பொதிகளை இறக்குகின்ற போதே பொலிஸாரினால் சுற்றி வளைக்கப்பட்டு இந்த சட்ட விரோத சிகரட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.
இந்தச் சம்பவம் கொழும்பில் இருந்து சம்மாந்துறைக்கு பயணிகளை ஏற்றிச்செல்லும் போதே கல்முனையில் இடம் பெற்றுள்ளது.
சம்மாந்துறைக்குச் செல்ல வேண்டிய பயணிகளை கல்முனையில் இறக்கிவிட்டு பொலிஸார் பொலிஸ் நிலையத்துக்கு பஸ்ஸை எடுத்து சென்றுவிட்டனர்.
இதனால் கொழும்பில் இருந்து வந்த பயணிகள் செய்வதறியாது தெரு வோரத்தில் நின்றிருந்தனர்.
பஸ்ஸுடன் கைப்பற்றப்பட்ட சட்ட விரோத சிகரட்டுகளுடன் ,சாரதியும் கல்முனை பொலிஸில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப் பட்டு வருகின்றார். (ச)

## ரயில் மோதி பெண் சாவு

மட்டக்களப்பு,ஜூலை 18
மட்டக்களப்பு, ஏறாவூர் பிரதேசத்தில் புதன்கிழமை அதிகாலை ரயிலில் மோதுண்டு பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார் என்று ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.
கொழும்பிலிருந்து மட்டக்களப்பை நோக்கி வந்து கொண்டிருந்த ரயிலில் மோதுண்டே அவர் உயிரிழந்துள்ளார்.
இந்தச் சம்பவத்தில் ஐயன் கேணி ரகுநாதன் வீதியைச் சேர்ந்த ராசலிங்கம் காயத்திரி (வயது-25) என்பவரே உயிரிழந்துள்ளார் என்று அவரது உறவினர்கள் அடையாளப்படுத்தியுள்ளனர்.
குறித்த இளம்பெண் மன நிலை பாதிக்கப்பட்டவர் என்று உறவினர்கள் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர் பான மேலதிக விசாரணை களை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## காத்தான்குடியில் டெங்கு ஒழிப்பு

காத்தான்குடி,ஜூலை 18
பொலிஸ் திணைக்களத்தின் வழிகாட்டலில் காத்தான்குடி பொலிஸ் நிலையம், நகர சபை, சுகாதார வைத்தியதிகாரி அலுவலகம் என்பன இணைந்து புதன்கிழமை காலை முதல் காத்தான்குடி பொதுச் சுகாதாரப் பிரிவில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டன.
காத்தான்குடி ஆரையம்பதி பொது சுகாதார பரிசோதகர்கள் ,தொண்டு நிறுவன பிரதிநிதிகள் இணைந்து நாவற்குடா மற்றும் எல்லைப் பிரதேசங்களில் டெங்கு ஒழிப்பில் ஈடுபட்டனர். (ச)



## குறைபாடுகளுடன் இயங்கும் கிளிவெட்டி பொதுநூலகம்

திருகோணமலை,ஜூலை 18
திருகோணமலை, கிளிவெட்டிப் பொதுநூலகம் குறைபாடுகளுடன் இயங்கி வருகின்றது. இந்த நூலகம் 2006 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஓரளவு வசதிகளுடன் இயங்கிய போதும் தற்போது பெயரளவில் மட்டும் தான் இயங்கி வருகின்றது என்று மக்கள் கூறுகின்றனர்.
இந்த நூலகத்தில் அலுமாரியில் புத்தகங்கள் ஒழுங்கான முறையில் அடுக்கி வைக்கப்படவில்லை. இப்பொழுது நூலகத்துக்கு அருகில் சம்பூர் மக்கள் தங்க வைக்கப்பட்டு இருக்கும் நலன்புரி முகாம் இருக்கிறது. இந்த முகாமுக்கான கிராம சேவையாளர் அலுவலகம் கூட இப்பொழுது நூலகத்தின் ஒரு பகுதியில் தான் இயங்கி வருகின்றது.
இதனால் மாணவர்கள் நூலகத்தில் பயன்பாட்டைப் பூரணமாகப் பெறமுடியாமல் இருக்கின்றது. இப்பொது நூலகத்தைப் பார்க்கின்ற போது பெயருக்கு மட்டும் தான் நூலகம். அடிப்படை வசதிகள் கூட ஒழுங்கான முறையில் செய்து கொடுக்கப்படவில்லை என்று மக்கள் கூறுகின்றனர். (ச-40)

## மட்டக்களப்பு மாவட்டத்தில் சிசு உயிரிழப்பு வீதம் குறைவு



மட்டக்களப்பு,ஜூலை 18
மட்டக்களப்பு மாவட்டத்தில் சிசு உயிரிழப்பு வீதம் குறைவாகும் என்று மாவட்ட பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் எஸ். சதுர்முகம் தெரிவித்தார்.
மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் செவ்வாய்க் கிழமை நடைபெற்ற மட்டக்களப்பு மாவட்ட சுகாதார அபிவிருத்தி தொடர்பான மீளாய்வுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:
தேசிய ரீதியாக சிசு உயிரிழப்பு, தாய் உயிரிழப்பு என்பவற்றை ஒப்பிடும்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் இது மிகவும் குறைவாகும்.
மட்டக்களப்பு மாவட்டத்தில் மந்த போஷாக்குள்ள மாணவர்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

> மந்த போஷாக்குள்ள மாணவர்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் சகல பிரதேசங்களிலும் தொற்றும் நோய் மற்றும் தொற்றா நோய் தொடர்பான விழிப்புணர்வு வேலைத்திட்டங்களை சுகாதாரத் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு நோய் கட்டுப் பாட்டிலுள்ளது.-என்றார். (ச)

## ஹமீதியா வீதி புனரமைப்பு



திருகோணமலை,ஜூலை 18
திருகோணமலை, முள்ளிப் பொத்தானை ஹமீதியா நகர் வீதியை கொங்கிரீட் கல் பதித்து புனரமைப்பு செய்வதற்கு தம்பலகாமம் பிரதேச சபை தவிசாளர் எஸ்.எம். சுபியான் நடவடிக்கை எடுத்துள்ளார்.
இந்த வீதி, ஹமீதியா முஸ்லிம் வித்தியாலயம் மற்றும் ஹமீதியா ஜும்ஆ மஸ்ஜித் ஆகியவற்றுக்கு செல்வதற்கான மிக முக்கிய வீதியாகும். எனினும் இந்த வீதி நீண்ட காலமாக புனரமைக்கப்படாதிருந்ததோடு அண்மையில் ஏற்பட்ட மழை வெள்ளத்தினாலும் மிக மோசமாக சேதமடைந்திருந்தது.
இதனால் தம்பலகாமம் பிரதேச சபையின் தவிசாளர் எஸ்.எம்.சுபியான், இந்த வீதியை கொங்கிரீட் கல் பதித்து புனரமைப்பு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். (ச)

## ஆளும்கட்சிக்குத் தாவியோருக்கு ஐ.தே.கட்சி உறுப்புரிமை ரத்து

கொழும்பு,ஜூலை 18
ஆளும் கட்சிக்குத் தாவிய ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களின் உறுப்புரிமை விரைவில் ரத்துச் செய்யப்பட வுள்ளது.
பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்போது அதற்கு ஆதரவாக வாக்களித்த ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் உறுப்புரிமை ரத்துச் செய்யப்படவுள்ளது.
கட்சியின் செயற்குழு செவ்வாய்க்கிழமை கட்சித் தலைமையகமான சிறிகொத்தவில் கூடி இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது. உறுப்புரிமை தொடர்பில் நீதிமன்றம் விதித்திருந்த கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதைத் தொடர்ந்து, கட்சி உறுப்புரிமையை ரத்துச் செய்வது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருகிறது என்று செயற்குழு உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

> கட்சி உறுப்புரிமையை ரத்து செய்வது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

கட்சி உறுப்புரிமையிலிருந்து குறித்த உறுப்பினர்கள் நீக்கப்பட்டால் அவர்களின் நாடாளுமன்ற உறுப்புரிமையும் பறிபோகும் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

# சமாதானத்தைச் சீர்குலைக்க வெளிநாட்டு சக்திகள் முயற்சி

## பிரதமர் குற்றச்சாட்டு

கொழும்பு,ஜூலை 18
நாட்டின் சமாதானத்தை சீர்குலைப்பதற்கு வெளிநாட்டு சக்திகள் முயற்சிக்கின்றனச் என்று பிரதமர் டி.எம். ஜயரட்ன குற்றம் சாட்டியுள்ளார்.
பிரதமர் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சர்வதேச நீதிமன்றில் நிறுத்த வேண்டும் என்று சிலர் கோரி வருகின்றனர். இது கண்டிக்கத்தக்கது



> எவரேனும் சூழ்ச்சித் திட்டங்களை தீட்டினால் அதற்கு எதிராக மக்கள் பலத்தை பிரயோகிக்க நேரிடும்.

சர்வதேச நீதிமன்றுக்கு ஜனாதிபதி, பாதுகாப்புச் செயலர் மட்டுமன்றி நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் 225 உறுப்பினர்களும் முன்னிலைப்படுத்த வேண்டும்.
பயங்கரவாதத்தை இல்லாதொழிக்க நாடாளுமன்றின் பெரும்பான்மை ஆதரவு கிடைக்கப்பெற்றது. 30 ஆண்டுகளாக நீடித்த கொடூர போரை ஜனாதிபதி இல்லதொழித்தார்.
இந்த முயற்சிக்கு பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ ஒத்துழைப்பு வழங்கினார். இவர்கள் இருவரையும் சர்வதேச போர்க் குற்றவியல் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த வேண்டும் என்ற கருத்து கண்டிக்கத்தக்கது.
எவரேனும் இவ்வாறான சூழ்ச்சித் திட்டங்களை தீட்டினால் அதற்கு எதிராக மக்கள் பலத்தை பிரயோகிக்க நேரிடும்.-என்றார். (ச)

## '13' ஐ ஆதரித்து வெளியானது தயானின் நூல்

> தீர்வாக அமையக்கூடிய ஒரே விடயம் 13 ஆம் திருத்தச்சட்டம்.

கொழும்பு,ஜூலை 18
இந்தியாவின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்ட அரசமைப்புக்களை 13 ஆவது மாத்திரமே ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மற்றும் சிங்கள மக்களுக்கு அதிகாரப்பகிர்வை வழங்கி தீர்வை பெற்றுக் கொடுப்பதற்கான ஒரே வழி என்று, புதிதாக வெளியான நூல் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இலங்கையின் இராஜதந்திரி தயான் ஜெயதிலக எனினால் எழுதப்பட்ட 'நீண்ட போரும், உறைந்த சமாதானமும்' என்ற நூலில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.
தற்போதுள்ள தீர்வுத்திட்டங்களில், அனைத்து தரப்புக்கும் தீர்வாக அமையக்கூடிய ஒரே விடயம் 13 ஆவது திருத்தச்சட்டமே. எனவே இந்தச் சட்டத் திருத்தம் மாற்றப்படவோ, கைவிடப்படவோ கூடிய ஒன்று அல்ல என்று அவர் தமது நூலில் தெரிவித்துள்ளார். (ச)

## றமழான் மாதத்தில் பள்ளிவாசல் தாக்குதல்

### நடவடிக்கை எடுக்கக் கோருகிறார் அஸாத்



மஹியங்கனை மஸ்ஜியதுல் அரபா பள்ளிவாசலுக்குச் சேதம் விளைவித்தோரைக் கண்டுபிடித்து சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அஸாத் சாலி தெரிவித்தார்.
இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:
புனித றம்ழான் மாதத்தில் இஸ்லாத்தை அவமதிக்கும் செயற்பாடு மஹியங்கனையில் நடைபெற்றுள்ளது.
மின்சார இணைப்பைத் துண்டித்து விட்டு திட்டமிட்ட முறையில் பள்ளிவாசலைச் சேதப்படுத்தியுள்ளனர்.
இலங்கையின் வரலாற்றில் எந்தவொரு ஆட்சியிலும் இவ்வாறான மூர்க்கத்தனமான சம்பவங்கள் இடம் பெற்றதில்லை.
இந்தப் பெருமை எல்லாம் தற்போது பதவியிலுள்ள ஜனாதிபதியையே சாரும்.
அரசுக்கு ஜால்ரா போடும் முஸ்லிம் தலைமைகள் இது குறித்து என்ன சொல்லப் போகிறார்கள்?
இவை போன்ற தாக்குதல் சம்பவங்களோடு தொடர்புபட்ட எவரும்இதுவரை கைது செய்யப்படவுமில்லை.தண்டிக்கப்படவும் இல்லை. - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-10)

## அபிவிருத்தித் திட்டங்களுக்கு உலக வங்கி உதவ வேண்டும்

### உலக வங்கியிடம் ஜனாதிபதி மஹிந்த கோரிக்கை

கொழும்பு,ஜூலை 18
தாக்கங்களைக் கொண்டிராத சிறிய திட்டங்களை விட, பொருளாதாரத்தில் பரிணாம மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து உலக வங்கி கவனம் செலுத்த வேண்டும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வேண்டுகோள் விடுத்துள்ளார்.
இலங்கை, இந்தியா, பங்களாதேஷ் மற்றும் பூட்டான்



ஆகிய நாடுகளுக்கான உலக வங்கியின் நிறைவேற்றுப் பணிப்பாளர் முகேஷ் பிரசாத்துடன் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.
இலங்கையின் பொருளாதாரம் மற்றும் சமூக அபிலாஷைகளை நிறை வேற்றிக் கொள்வதற்கு நேரடியாக பங்களிப்பு செலுத்தக் கூடிய பரிணாம திட்டங்கள் தொடர்பில் உலக வங்கி கவனம் செலுத்த ஆரம்பித் துள்ளது என்று முகேஷ் பிரசாத் குறிப்பிட்டார்.(ச)



நீர்கொழும்பு மாவட்ட வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்டு வந்த டெங்கு விடுதியை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன ஆகியோர் திறந்து வைத்தனர்.

## பொதுமக்களின் கருத்துக்களை பெறும் பணியில் தெரிவுக்குழு

கொழும்பு,ஜூலை 18
அரசமைப்பை மறுசீரமைப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழு, பொதுமக்கள், பொது அமைப்புகள், அரசியல் கட்சிகள் ஆகியவற்றின் கருத்துக்களைப் பெறவுள்ளது.
இந்தத் தகவலை நாடாளுமன்ற பிரதிச் செயலர் நீல் தெரிவித்தார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:
இலங்கை மக்களுக்கு ஒரே தேச மக்களாக வாழ்வதற்கு ஏற்ற அரசியல் மற்றும் அரசமைப்பு நடவடிக்கைகள் பற்றி விதந்துரைப்பதற்காக சபாநாயகரினால் அண்மையில் நாடாளுமன்றத் தெரிவுக்குழு நியமிக்கப்பட்டது.
இந்தக் குழுவின் முதலாவது அமர்வு கடந்த 9 ஆம் திகதி அதன் தலைவர் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவின் தலைமையில் கூடியது. இதன்போது மக்கள் அமைப்புகள் மற்றும் கட்சிகளதும் கருத்துக்களை பெறுவது குறித்துக் கவனம் செலுத்தப்பட்டது.
சகல மக்களதும் தனித்துவத்தைப் பாதுகாக்கவும், சமூக, பொருளாதார அரசியல் மற்றும் கலாசார அபிவிருத்திகளை மேம்படுத்தவும் தேவையான பரிந்துரைகளை மேற்கொள்ள இந்தக் குழு நடவடிக்கை எடுக்கவுள்ளது.
இதற்காகப் பொது மக்களினதும் அமைப்புகளினதும் அரசியல் கட்சிகள் மற்றும் நிறுவனங்களினதும் யோசனைகள் மற்றும் கருத்துக்கள் எதிர்வரும் 9 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள் எப்பட வுள்ளது.-என்றார். (ச)

## படகு விபத்தில் மீனவர் சாவு

கொழும்பு,ஜூலை 18
சிலாபம் - கருக்குப்பனை கடற்பகுதிக்கு அருகில் படகொன்று விபத்திற்குள்ளானதில் மீனவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். சிலாபம், அலபாறை பகுதியைச் சேர்ந்த 37 வயதான ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.
படகு விபத்திற்குள்ளான சந்தர்ப்பத்தில், அதில் பயணித்த



இருவரில் ஒருவர் பாதுகாப்பாக நீந்திக் கரை சேர்ந்துள்ளார் என்று பொலிஸார் குறிப்பிட்டனர். (ச)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## நவம்பர் மாதத்து மாநாட்டில் அனைத்துலக ஊடகவியலாளர் நிலை...?

இலங்கையில் எதிர்வரும் நவம்பர் மாதத்தில் நடைபெற உள்ள பொதுநலவாய நாடுகளின் உச்சி மாநாட்டை, எந்த ஓர் அங்கத்துவ நாடும் புறக்கணிக்காது. ஐம்பத்திமூன்று நாடுகளும் தவறாது பங்குபற்றும் என்று வெளிவிகார அமைச்சர் ஜி.எல். பிரீஸ் தெரிவித்துள்ளார்.

கனடா, ஆஸ்திரேலியா, பிரிட்டன் உட்பட பல நாடுகள் இந்த மாநாட்டைப் பகிஷ்கரிப்பது குறித்து வீச்சாகக் கருத்து தெரிவித்து வந்த போதிலும் அந்த நிலை அகன்றுள்ளது.

அதனால், அரசு விரும்புவது போன்று, போரின் பின்னரான இலங்கையின் நிலையை, நேரில் அறிந்து கொள்ளும் வாய்ப்பு, ஐம்பத்திமூன்று நாடுகளின் தலைவர்கள் மற்றும் உயர்அதிகாரிகளுக்குக் கிடைக்க உள்ளது.

அத்தோடு, இங்கு வரும் வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் போரின் பின்னரான முன்னேற்றங்களை, அபிவிருத்திகளை எழுதும்போது, நமது நாடு குறித்து வெளிநாடுகளுக்கு உள்ள தப்பான அபிப்பிராயங்கள் நீங்கிவிடும் என்று அரச தரப்பினர் நம்புகிறார்கள்.

எனினும், சில வெளிநாட்டு ஊடகவியலாளர்களின் வருகை, இலங்கை அரசாங்கத்தின் வயிற்றில் புளியைக் கரைக்கும் என்ற அச்சமும் ஓங்கி எழுந்துள்ளதனையும் அறியமுடிகிறது.

அவர்களில் ஒருவர் சர்ச்சைக்குரிய பிரிட்டன் ஊடகவியலாளரான கெலும் மக்ரே. மற்றவர் பி.பி.சி. செய்திச் சேவையின் இலங்கைக்கான முன்னாள் செய்தியாளர் பிரான்சிஸ் ஹரிசன்.

கெலும் மக்ரே, இலங்கை தொடர்பான தனது 'யுத்த சூன்ய வலயம்' என்ற காணொலி மூலம் இலங்கையிலும் புலம்பெயர் தமிழர் வாழும் நாடுகளிலும் பிரபல்யம் பெற்றவர். விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரச படைகளுக்கும் இடையிலான இறுதி யுத்தத்தில், இலங்கை அரச படைகள் மேற்கொண்டதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளை முன்வைக்கும் வகையில் 'யுத்த சூன்ய வலயம்' தயாரிக்கப்பட்டது.

பி.பி.சியின் முன்னாள் செய்தியாளர் பிரான்சிஸ் ஹரிசன், மனித உரிமைகள் விவகாரங்களை முன்நிறுத்தி இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் உச்சி மாநாட்டைப் பகிஷ்கரிக்குமாறு விடுக்கப்படும் கோரிக்கைக்கு ஆதரவாக வெளிப்படையாகக் கருத்து வெளியிட்டவர்.

பொதுநலவாய மாநாட்டையொட்டி இலங்கை வருவதற்கு பொதுநலவாய செயலகத்துக்கு விண்ணப்பிக்கும் வெளிநாட்டு ஊடகவியலாளர்களில் இவர்களின் பெயர்களும் இருந்தால் என்ன செய்வது என்பதே இன்று இலங்கை அரசுக்கு ஏற்பட்டுள்ள தலைவலி என்று சொல்லப்படுகிறது.

பொதுநலவாய செயலகத்தில் அனுமதி பெறுகின்ற சகல ஊடகவியலாளர்களும் கொழும்பு மாநாட்டுக்குச் செல்வதற்கான சந்தர்ப்பம் கிடைக்கவேண்டும் என்றும், அவர்கள் இலங்கையில் சுதந்திரமாகப் பயணிக்கக்கூடியதாக இருக்கவேண்டும் என்பதுமே பொதுநலவாய அமைப்பின் தலைமை நாடான பிரிட்டனின் நிலைப்பாடு. ஊடகவியலாளர் ஒருவருக்குப் பொதுநலவாய செயலகம் அனுமதி கொடுத்து விட்டால் மாநாட்டை நடத்தும் நாடு விஸா வழங்குவது என்பது தானாகவே நடைபெறவேண்டிய ஏற்பாடு என்று பிரிட்டன் சுட்டிக்காட்டியுள்ளது.

அனைத்துலக, உள்நாட்டு ஊடகவியலாளர்களுக்கு செய்தி சேகரிப்புக்கான அனுமதி முன்னைய பொதுநலவாய மாநாடுகளில் கடைப்பிடிக்கப்பட்ட பொதுநலவாய செயலகத்தின் ஒழுங்கு விதிகளின்படி நடக்கும் என்று இலங்கை கூறினாலும், இந்த இரு சர்ச்சைக்குரிய ஊடகவியலாளர்கள் வருகை இலங்கைக்கு நெருக்கடி தரும் என்பதும் சொல்லித் தெரிய வேண்டிய ஒன்றல்ல.


அவர்கள் இருவருக்கும், இலங்கை அரசு விரும்பாத வேறு சில ஊடகவியலாளர்களுக்கும் இலங்கைத் தூதரகங்கள் விஸா வழங்க மறுக்குமானால் அது இலங்கைக்குப் பாரிய நெருக்குதலைக் கொடுக்கலாம்.

சில வெளிநாட்டு ஊடகவியலாளர்களுக்கு ஊடக வழிகாட்டல் குறித்து அறிவுறுத்தப்படும் என்று அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல சமீபத்தில் தெரிவித்திருந்தார். இலங்கை தொடர்பான தப்பபிப்பிராயங்கள் வெளிநாடுகளில் நீங்க இம்மாநாடு வாய்ப்பளித்துள்ளதாக எதிர்பார்க்கும் இலங்கைக்கு சர்ச்சைக்குரிய ஊடகவியலாளர் விவகாரம் ஒரு சவாலாக அமையும்.

எந்தவொரு ஊடகவியலாளரினதும் விஸாவை மறுக்கும் உரிமையைக் கொண்டிருப்பதாக இலங்கை அரசு தெரிவித்துள்ளமை, பொதுநலவாய மாநாடு நெருங்கும் போது பெரும் பிரச்சினையைத் தோற்றுவிக்கும் வாய்ப்பு உண்டு என்பதனையே சுட்டி நிற்கிறது.

# அடுத்து என்ன தான் செய்யும் இந்தியா?

கே.சஞ்சயன்



தனக்கும், சர்வதேச சமூகத்துக்கும் வழங்கிய வாக்குறுதியை இலங்கை அரசு மதித்து நடக்க வேண்டும் என்று மீண்டும் ஒருமுறை இந்தியா கேட்டுள்ளது. புதுடில்லி சென்றிருந்த பொருளாதார அபவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவிடமும் இந்தியா இதையே தான் கூறியது. கொழும்பு வந்திருந்த இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனனும் இதையே தான் இலங்கை அரசிடம் கூறியுள்ளார்.

கடந்தமாதம் புதுடில்லியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை, இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் சந்தித்துப் பேசியபோது, 13ஆவது திருத்தச் சட்டத்தில் மாற்றம் செய்வது தொடர்பான இலங்கை அரசின் முயற்சிகள், 13ஆவது திருத்தச்சட்டத்துக்கும் அப்பாற்பட்ட அரசியல்தீர்வை வழங்குவதாக இந்தியாவுக்கும், சர்வதேச சமூகத்துக்கும் இலங்கை கொடுத்த வாக்குறுதி மீது சந்தேகத்தை எழுப்புவதாக குறிப்பிட்டிருந்தார்.

அதன் பின்னரும் இலங்கை அரசு 13ஆவது திருத்தச்சட்டத்தைப் பலவீனமாக்கும் முயற்சிகளில் இருந்து பின்வாங்காத நிலையில், தான் இந்தியா மீண்டும் மீண்டும் வாக்குறுதியை மதித்து நடக்க வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறது.

இலங்கை அரசு தனது வாக்குறுதியை மதித்து நடக்கப் போவதில்லை என்பதையும், நிலைமை தனது கையை விட்டுப் போகத் தொடங்கி விட்டது என்பதையும், இந்தியா புரிந்து கொண்டு விட்டது என்பதையே, வாக்குறுதி தொடர்பான அதன் வலியுறுத்தல்கள் எடுத்துக் காட்டுகின்றன.

13ஆவது திருத்தச்சட்டம் இப்போது ஒரு பிராந்திய விவகாரமாக மாறுகின்ற சூழலை அவதானிக்க முடிகிறது. 13ஆவது திருத்தச்சட்டத்தை எப்படியாவது ஒழித்து விடவேண்டும் என்பதே, அரசதரப்பில் உள்ள, பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ உள்ளிட்ட கடும் கோட்பாட்டாளர்களின் படிவாதமாக உள்ளது. உடனடியாக இதனை ஒழித்து விடுவதில் உள்ள சிக்கல்களை கருத்தில் கொண்டுதான் அரசு, எப்படியாவது இதனைப் பலவீனப்படுத்தியாக வேண்டும் என்று கங்கணம் கட்டி நிற்கிறது.

ஆனால் 13ஆவது திருத்தச்சட்டத்தை இலங்கைப் பிரச்சினைக்கு, தான் முன்வைக்கும் தீர்வாகக் கருதுவதால், இந்தியாவுக்கு இது ஒரு பெரிய மானப் பிரச்சினையாக உள்ளது. இப்போது 13ஆவது திருத்தச்சட்டத்தை, இலங்கை ஒழித்தால் அல்லது பலவீனப்படுத்தினால், இந்தியாவுக்கு இரண்டு சிக்கல்கள் ஏற்படும்.

ஒன்று இலங்கை விவகாரத்தில் இந்தியாவுக்கு இருந்த தார்மீகப் பொறுப்புகள் இல்லாமல் ஆக்கப்பட்டு விடும். அதனால்,பிராந்திய ரீதியாக இந்தியாவின் ஆதிக்கம் கேள்விக்குள்ளாக்கப்படும். இரண்டாவது, விடுதலைப் புலிகளை அழிப்பதற்கு உதவிய இந்தியா, ஈழத் தமிழர்களின் நலன்களை முற்றிலுமாக உதாசீனப்படுத்தி, அவர்கள் மீது பழிதீர்த்துக் கொண்டு விட்டது என்ற கருத்து வலுப்படும்.

விடுதலைப் புலிகளுக்குப் பின்னர், இலங்கைத் தமிழர் விவகாரங்களில் இந்தியா விரும்பயோ விரும்பாமலோ ஒருமுக்கியபாத்திரத்தைவகிக்கவேண்டிய நிலைக்குள்ளாகியுள்ளது. இந்தநிலையில் 13ஆவது திருத்தச்சட்டத்தை பலவீனப்படுத்தி, தமிழர்களை எந்த அதிகாரமுமின்றி முடக்குவதற்கு இந்தியா துணை போகுமேயானால், இந்திய அரசின் மீது பெரும் பழிதான் சுமத்தப்படும். ஏனென்றால், போரின் போது, விடுதலைப் புலிகளை அழித்த பின்னர், தமிழர் பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு காணப்படும் என்று இலங்கை அரசு இந்தி யாவுக்கு வாக்குறுதி கொடுத்திருந்தது. அந்த வாக்குறுதியை இலங்கை அரசு காப்பாற்றத் தவறிய நிலையில், 13ஆவது திருத்தச்சட்டத்தையும் பலவீனப்படுத்துவதை, இந்தியாவினால் பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

பல்வேறு விடயங்களில் இலங்கை அரசுடன் இந்தியா விட்டுக் கொடுப்புடன்- சகிப்புத்தன்மையுடன் நடந்து கொண்ட போதிலும், 13ஆவது திருத்தச்சட்ட விவகாரத்தில் இந்தியாவினால் அவ்வாறு நடந்து கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. பிராந்திய அல்லது பூகோள அரசியல் நலன்களை முன்னிறுத்தி - இந்தியா இந்த விடயத்தில் இலங்கையுடன் சமரசம் செய்து கொள்ள முடியாது.

ஏனென்றால், இந்த விடயத்தில் மன்மோகன்சிங் அரசு விட்டுக்கொடுப்புடன் நடந்து கொண்டால், அது காங்கிரஸ் அரசு ஈழத் தமிழர்களுக்குச் செய்த மிகப்பெரிய அநீதியாகவே பார்க்கப்படும். அதுவும், இன்னும் சில மாதங்களில் நாடாளுமன்றத் தேர்தலை இந்தியா எதிர்கொள்ளவுள்ள நிலையில், இத்தகையதொரு சமரச முடிவு எடுக்கப்படுமானால், அதுமிகப்பெரியஅரசியல்தற்கொலைக்கு ஒப்பானதாகவே கருதப்படும்.

அதைவிட, இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைக்கு இந்தியா முன்வைக்கும் உயர்ந்தபட்சத் தீர்வாக 13ஆவது திருத்தச்சட்டமே உள்ள நிலையில், அதை இலங்கை அரசு நிராகரிக்கும்போது இந்தியாவின் மீது இயல்பாகவே ஓர் அழுத்தம் ஏற்படும்.

அதாவது தமிழர் பிரச்சினைக்கான மாற்றுத் தீர்வு என்ன என்பதை, வெளிப்படுத்த வேண்டிய நிலை இந்தியாவுக்கு ஏற்படும். அத்தகைய நெருக்கடி, இந்தியாவை 1987 இற்கு முந்திய நிலைக்குக் கொண்டு செல்லும். எனவே, 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதை உறுதிப்படுத்திக் கொள்வதே இந்தியாவுக்கு இன்று மிகவும் வசதியானது.

எனவே, இந்தியா திரும்பத் திரும்ப வாக்குறுதிகளை நினைவுபடுத்தியும், 13ஆவது திருத்தச்சட்டத்தைப் பலவீனப்படுத்தக் கூடாது என்று எச்சரித்தும் தனது நிலையைக் காப்பாற்றிக் கொள்ள முற்படுகிறது. ஆனால், இந்தியாவினது இந்த நினைவூட்டல்களையோ, 13ஆவது திருத்தச்சட்டத்தைப் பலவீனப்படுத்தப்படுவது தொடர்பான அதன் கவலைகளைப் பற்றியோ, இலங்கை அரசு அதிகம் கரிசனை கொண் டதாகவே தெரியவில்லை.

அவ்வாறு இந்தியாவின் நிலைப்பாட்டை இலங்கை கவனத்தில் எடுத்துக் கொண்டிருந்தால், 13ஆவது திருத்தச்சட்டத்தை மாற்றியமைப்பது தொடர்பான எந்த நகர்வையும் அது மேற்கொள்வதைத் தவிர்த்திருக்கும். குறிப்பாக, தெரிவுக்குழு தொடர்பான நகர்வுகள் குறைந்தபட்சம் சில நாள்களுக்கேனும் பிற்போடப்பட்டிருக்கும். ஆனால் அவ்வாறு செய்யப்படவில்லை. சிவ்சங்கர் மேனன், இந்தியாவுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் கொடுத்த வாக்குறுதியை நினைவூட்டிய சில மணிநேரங்களிலேயே தெரிவுக்குழுக் கூட்டம் அதிகாரபூர்வமாகத் தொடங்கியது. அதற்கும் அப்பால், தெரிவுக் குழுவுக்குள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைக் கொண்டு வருவதற்கு இந்தியா உதவ வேண்டும் என்ற கோரிக்கையையும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, சிவ்சங்கர் மேனனிடம் முன்வைத்திருந்தார். இதிலிருந்து இந்தியாவுக்கு தனது நிலை என்ன என்பதும், இலங்கை அரசின் நிலை என்ன என்பதும் நன்றாகவே விளங்கியிருக்கும். அதாவது, இந்தியா வரைந்துள்ள கோட்டுக்குள் இலங்கை இனிமேலும் நிற்கப்போவதில்லை என்பது இந்தியாவுக்கு விளங்காமல் போயிருக்காது. இந்தநிலையில், 13 ஆவது திருத்தச்சட்டத்தைப் பாதுகாக்க, இந்தியா என்ன செய்யப் போகிறது? எத்தகைய வழிமுறையைக் கையாளப் போகிறது? என்ற கேள்வி அரசியல் அரங்கில் பெரும் பெறுமதி யான கேள்வியாக எழுந்திருக்கிறது.


# திறமைகள் மேம்பட ஊக்குவிப்பு அவசியம்


நேர்காணல்
சோபனா

## மட்பாண்டத் தொழிலாளி ஒருவரின் ஆதங்கம்

போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து. அந்தத் திருப்தியோடு தான் எங்களது தொழிலை நாங்கள் செய்து கொண்டிருக்கிறம். எத்தின காலம் கழிந்தாலும் எங்கட தொழிலின்ர கிராக்கி அழியாது. அந்த அளவுக்கு சனத்தின்ற தேவையோட சேர்ந்து போய்ச்சு. மிக்சி கிறைண்டர் வந்திட்டுது என்பதற்காக சனம் வாங்காமல் இல்லை. இன்னும் அதிலதான் சமைச்சுக் கொண்டு வருகுதுகள்.

தனது தொழில் மேன்மையை சட்டியை வனைந்து கொண்டே பெருமையாகக் கூறத் தொடங்கினார் பழனி முருகையா ராஜேந்திரன். மட்பாண்டத் தொழில்கள் தற்போது அருகி வரும் நிலையில் கிடைக்கக் கூடிய வளங்களைக் கொண்டு யாழ்ப்பாணம் கல்வியங்காட்டுப் பகுதியில் ஒரு சிறிய தொழில் இருப்பிடத்தை வைத்துக் கொண்டு தன்னோடு சேர்த்து நான்கு பேர்களது குடும்பங்களின் வாழ்க்கைக்கு ஒளியூட்டிக் கொண்டிருக்கிறார் இவர்.





**நீங்கள் எத்தனை வருசமா இந்தத் தொழிலைச் செய்கிறீர்கள்?**
எங்கட பரம்பரைத் தொழிலே இது தான். எந்தத் தொழிலைச் செய்தாலும் அதில எனக்குத் திருப்தி இல்லை. வெறுமனே தொழில் முயற்சியாக மேற்கொண்டாலும் இப்ப நிரந்தரமாக இதைத்தான் செய்து கொண்டு வாறன். இப்ப கிட்டத்தட்ட 25 வருசமா நான் மட்பாண்ட உற்பத்திப் பொருள்களை வனையிற தொழிலை மேற்கொள்கிறன். எங்களுக்கு இப்ப இருக்கிற கவலை எங்களுக்குப் பிறகு இந்தத் தொழிலைச் செய்ய பரம்பரையினர் இல்லாமல் போகப் போகுது எண்டுதான். எங்கட காலத்தோட நாங்களும் போக இந்தத் தொழிலும் முடிஞ்சு போயிடும். அந்த நிலமைதான் இப்ப இருக்கு.

**ஏன் உங்களுக்குப் பிறகு யாரும் செய்ய மாட்டினமோ?**
இந்தத் தொழில் ஒரு கலை மாதிரி. கற்றுத் தேர்ந்தவர்களால் மட்டும்தான் செய்ய முடியும். பிள்ளைகளின்ர இப்பத்தய காலம் தெரியும் தானே . ஆனால் இதில எந்தளவுக்கு வருமானம் கிடைக்குதென்று அவர்களுக்குத் தெரியாது. அதோட நாங்களே இருக்கிற வளங்களைக் கொண்டு பெரும் கஷ்டத்தின் மத்தியில் தான் இதைச் செய்கிறம். இதை ஊக்குவிக்க எந்தத் துறையும் வரேல்ல. எல்லாரும் வந்து வந்து பார்த்திட்டு அது செய்யிறம், இது செய்யிறம் என்று போட்டு மட்டும் போயினம். ஆனால் ஒன்றையும் செய்ததாக இல்லை. பிறகு எப்படி முன்னேற்றம் அடைய முடியும். ஏதோ அன்றாட செலவுக்கு மட்டும் போதும் என்ற திருப்தியோட நாங்கள் இதைச் செய்கிறம். எங்களுக்கு வேற எந்தத் தொழிலைச் செய்தாலும் இதில கிடைக்கிற மனத் திருப்தி கிடையாது.

தனது தொழிலின் பெருமையை விட்டுக் கொடுப்பதாக இல்லை அவர். என்னுடன் கதைத்துக் கொண்டே பத்துப் பதினைந்து சட்டிகளை வனைந்து முடித்துவிட்டார். பார்ப்பதற்கு எனக்கும் புதுமையாக இருந்தது. குழைத்த மண் வெவ்வேறு வடிவங்களில் அவரது கைவண்ணத்தால் சட்டிகளாக மாறிக் கொண்டிருந்தது.

**உங்களுக்கு தேவையான மண் எங்கே இருந்து எடுக்கிறீங்க?**
பிரச்சினைக்கு முன் யாழ்ப்பாணம் தாவடிப் பகுதிக் குளங்களில் தான் மண் எடுப்பம். பிறகு காலம் போகப் போக மண்ணின் தரம் குறைஞ்சிட்டுது. அதுல செய்யிற மட்பாண்டங்கள் எல்லாம் கொஞ்ச நாளிலேயே உடையுது என்று சனம் கவலைப் பட்டுதுகள். சனம் பொருள்களை திருப்தியோடு வாங்க வேண்டும் என்பதற்காக தரமான மண்ணை தேர்ந்தெடுத்து இப்ப மட்பாண்டங்கள் செய்யிறம். நல்ல தரமான களிமண் மல்லாவி, ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு பக்கம்தான் இருக்கு. அப்ப யாழ்ப்பாணத்தில என்னைப் போல தொழில் செய்யிறவை எல்லாரும் அங்கதான் மண் எடுக்கினம். களிமண், சாதாரணமண், மணல் மண் என்று இரண்டு மூன்று மண்களை கலந்து தான் செய்யிறம்.

**கிட்டத்தட்ட எத்தனை நாளில முழுமையான சட்டி பானையாக எடுப்பீர்கள்?**
காலநிலைகள் சரியாக இருந்தால் மூன்று நாளில எல்லா வேலையும் முடிஞ்சிடும். அதுக்கு முன்னர் ஆயத்தமாக ஒரு தொகை மண்ணை தண்ணியில ஊறவைத்து விடுவம். பிறகு அதை வெய்யில் படாம வைத்திருந்து தேவைக்கேற்ப எடுத்து மட்பாண்டங்கள் வனையிறனாங்கள். குழைஞ்சு இறுகின மண்ணை நல்லா காலால மிதிச்சு தேவையான அளவு எடுத்து வனையிற திருகாணியில வைச்சு டிசைனுக்கு ஏற்ப அளவுக்கு ஏற்ப செய்யிறம். முந்தி எல்லாமே கையாலதான் வனைய வேண்டிஇருந்தது. இப்ப திருகாணிக்கு மோட்டர் பூட்டி ஒரு தடவையில இருபத்தைந்து முப்பது என்று பொருள்களை செய்யக்கூடியதாகவும் இருக்கு.

ஒரு நாளைக்கு கிட்டத்தட்ட நூறுக்கு மேல் சட்டிகள், பானைகள் செய்யலாம். பிறகு அதை உலரவைத்து கட்டிப்போட்டு காயவைத்து சூளையில் போட்டு காயவிட்டு அதன் பிறகு விற்பனைக்குக் கொடுக்கிறம். நாங்கள் ஓடர் எடுத்து செய்யிறதால செய்யிற பொருள்கள் தேங்கி இருப்பதில்லை. தேவையான அளவுக்கு மட்டும் செய்வம். மூன்று நாளில முழமையான ஒரு பாத்திரம் வந்துவிடும்.

**இப்ப இந்தத் தொழிலுக்கு கிராக்கி இருக்குதோ?**
எந்தக் காலம் வந்தாலும் எங்கட தொழில் தொழில்தான். எத்தினை வசதி வாய்ப்புகள் வந்தாலும் சனம் மாறாது. மண் பாத்திரங்களில் சமைத்து சாப்பிட்டால் நோய்கள் வராது. உடல் ஆரோக்கியத்துக்கு நல்லது என்று மருத்துவரீதியான உண்மைகளை பின்பற்றுகினம்.

**கூடுதலா என்ன விற்பனை செய்யப்படும்?**
இப்ப மனிதன்ர ஆயுள் இறுதியில கூடிக் கொண்டு போக சட்டியும் கொள்ளிப்பானையும் வேணும் தானே. மண்பானை உடைச்சுத்தான் சடங்கு செய்வினம். கூடுதலாக அதுவும் விற்பனை போகும். அதால நாங்கள் இப்ப சட்டி, பானை மட்டும் தான் செய்யிறம். தேவை ஏற்பட்டால் புதுப் புது வடிவங்களில் பாத்திரங்கள் செய்யிறனாங்கள். காலத்துக்கு ஏற்ப சீசன் நேரங்களிலை ஏற்ற மாதிரி செய்வம். விளக்கீட்டு நேரத்தில் சுட்டி அதிகம் விற்பனை ஆகும். அப்ப அதைச் செய்வம்.

**அப்போ மழை வந்தா உங்கட தொழில் செய்யேலுமோ?**
மழை வந்தா அதைவிட நஷ்டம் எதுவுமில்லை. ஒரேயடியாக திண்டு கழுவிடும். மண்ணோட மண்ணா போயிடும். அந்த நேரம் நாங்கள் தொழில் செய்வது குறைவு. முடிந்தளவு குறைவாகத் தான் செய்யிறனாங்கள்.

**வெளிமாவட்டங்களுக்கு ஏற்றுமதி செய்யிறனீங்களா?**
செய்யிற பொருள்கள் இப்ப உள் மாவட்டங்களுக்கே போதுமா இருக்கு. எங்கட தொழிற்சாலையில பெரிய வளங்கள் இல்ல. இருக்கிறதைக் கொண்டுதான் செய்யிறம். கூடுதலாக செய்ய வேண்டும் என்றால் இன்னும் இடவசதி வேணும். நவீன உபகரணங்கள் வேணும். இதை யாரும் செய்து கொடுக்க முன்வரேல்ல. எங்களால முயன்றளவு முதலீடுகளைப் போட்டு செய்யிறம். இதுவே எங்களுக்கு கூடின வருமானம் தருது. வெளி மாவட்டங்களுக்கு ஏற்றினா இன்னும் கூடுதல் வருமானம் பெறலாம். ஆனால் அதற்கான வசதி எங்களிடம் இல்லை என்றார் அவர்.

தான் தன்னுடன் சேர்த்து நான்கைந்து குடும்பங்களின் வாழ்வாதரத்துக்கும் உதவி புரிந்து வரும் இந்தத் தொழில் முயற்சியாளருக்கு திறமைகள் இருந்தும் அதனை பயன்படுத்த முடியாத நிலை. சிறு தொழில் ஊடாக முன்னேற்றம் அடைந்து வரும் இவரதும் இவர் போன்றதும் திறமைக்கு வழிகாட்டல் செய்யப்பட்டால் யாழ்ப்பாணத்தின் பாரம்பரிய தொழில்களில் ஒன்றான மட்பாண்டத் தொழில் அழியாமல் பாதுகாக்கப்படும்.

# விளையும் பயிரை முளையிலே...

விளையும் பயிரை முளையிலே தெரியும் என்பது தமிழ் முதுமொழி. குழந்தைகள் அனைவரும் ஒரே சுபாவம் கொண்டவர்களாக இருப்பதில்லை. முரட்டுத்தனம், அடுத்த குழந்தையை சீண்டுதல் ஆகிய குணங்கள் சில குழந்தைகளிடம் இயல்பிலேயே இருப்பது உண்டு. பள்ளிப்பருவத்தை எட்டும் முன்பாகவே குழந்தைகளின் கூட்டுணர்வுத்திறன் வெளிப்பட்டு விடுகிறது என்பது ஆராய்ச்சியின் முடிவு.

பள்ளி செல்லும் வயது அடையாத குழந்தைகளுக்காக முன்பருவ பள்ளிக்கூடங்கள் நடத்தப்படுகின்றன. மற்ற குழந்தைகளுடன் கலந்து பழகும் வாய்ப்பு இந்த பள்ளிகள் மூலம் கிடைக்கிறது. சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நற்பழக்கங்கள் இந்தப் பள்ளிகள் மூலம் விதைக்கப்படுகின்றன.

குழந்தைகளுக்கு அவர்களுடைய உணர்வுகளைக் கட்டுப்படுத்தும் பயிற்சிகூட இங்குதான் கிடைக்கிறது. சில குழந்தைகள் இயல்பிலேயே முரட்டுத்தனம் வாய்ந்தவர்களாயும், மற்ற குழந்தைகளைச் சீண்டும் குணமுடையவர்களாயும் இருப்பார்கள். பள்ளியின் செயல்பாடுகளில் ஈடுபாடு இல்லாதவர்களாயும் இருப்பது இயல்பானதுதான். இப்படிப்பட்ட குழந்தைகளின் நட்புவட்டம் சிறியதாக இருக்கும். பிற்காலத்தில் வளர்ந்த பின்னரும் கூட சமூகத்தில் மற்றவர்களிடம் நல்ல உறவை இவர்கள் ஏற்படுத்திக்கொள்வதில்லை.

சிறுவர்களின் கூட்டுணர்வு குறித்த ஆய்வு அரிசோனா பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்டது. ஆறு முன்பருவ பள்ளிகளின் வகுப்பறைகளில் இருந்து 97 குழந்தைகள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டனர். குழந்தைகளின் நடத்தைகளைப் பற்றிய தகவல்களை அவர்களின் ஆசிரியர்கள் வழங்கினர். ஒவ்வொரு குழந்தையும் எத்தனை குழந்தைகளுடன் உறவாடியது, எத்தனை முறைகள் உறவாடியது, அவர்களின் முரட்டுத்தனத்தின் அளவு, வகுப்பில் ஈடுபாடு இவையனைத்தும் சேகரிக்கப்பட்டு அலசி ஆராயப்பட்டன.

முரட்டுத்தனம், கோப உணர்வு, வகுப்பில் ஈடுபாடு காட்டாமை ஆகிய குணங்களைக் கொண்ட குழந்தைகளுக்கு மிகக்குறைவான நண்பர்கள் மட்டுமே இருந்தனர். மாறாக மென்மை, நன்கு பழகும் குணம் இவற்றுடன் வகுப்பில் ஈடுபாடு காட்டும் குழந்தைகளின் நட்புவட்டம் பெரியதாக இருந்தது. இந்த முடிவுகள் முன்பருவபள்ளி வயதினருக்கு மட்டுமல்லாது வளர்ந்த பிள்ளைகளுக்கும் பொருந்துவதாக அமைந்திருந்தன. இந்த முடிவுகள் ஆண் பெண் குழந்தைகளுக்குப் பொதுவாகதாகவே இருந்தன.

குழந்தைகளே இப்படியென்றால் சமூகமும் அப்படித்தானே இருக்கும். விதையொன்று போட்டால் சுரையொன்று முளைக்குமா என்ன?



# அரசியல் பிரவேசத்தில் ஆதிக்கம் செலுத்துவது ஆண்களே



எத்தனை ஆண்டுகள் ஆனாலும் கூட பெண்ணுக்கான வரைமுறை எமது சமூகத்தில் ஆண்களுக்கு ஒரு படி குறைந்ததாகவே கருதப்படுகிறது. சமூகத்தின் கட்டமைப்புகளில் பெண்கள் தமது தனித்துவத்தை அடையாளப்படுத்த வேண்டிய கட்டமைப்பு இருந்த போதிலும் அது மேன்நிலை அடைவது சிரமமானதொன்றே.

பெண்கள் தமது திறன்களைப் பயன்படுத்தி எத்தனை துறைகளில் கால்அடி வைத்தாலும் அவர்களுக்கு என்றும் கிடைக்கக் கூடிய தனித்துவம் அல்லது திறன்களுக்குரிய பாராட்டுக் கிடைப்பது மிக அரிதான ஒன்று.

பெண் என்பவள் சாதுவானவள். பிரச்சினைகளைத் தனித்து நின்று எதிர்கொள்ள முடியாதவள் எனும் நிலைப்பாடே எம்மத்தியில் உள்ளது.

இந்த நிலையில் சமூக வலையமைப்புகளுடன் பெண்கள் தம்மை அரசியலில் அறிமுகப்படுத்துவது என்பது சிரமமானதொன்று என்பதுடன் மிகக் குறைவாகவும் காணப்படுகிறது. இதற்கு மாறாகத் தெரிவு செய்யப்பட்ட அரசியல் அந்தஸ்து கிட்டினாலும் பெண்கள் அரசியலில் பிரகாசிப்பதென்பது மிக அரிதானதே.

சமூகத்தில் இந்தப் பிரதிபலிப்புகளால் திறன் கொண்டவர்களும் அரசியலில் பிரவேசிக்க, தம்மை அறிமுகப்படுத்த தயக்கம் காட்டுகிறார்கள். இந்தத் தயக்கம் ஆண்டுகளுக்கு சாதகமாக அமைகிறது.

தலைமைத்துவத்தை தாங்கக் கூடியவர்கள் ஆண்கள் எனும் நிலைப்பாடு சமூகத்தில் உருவாகியுள்ளது. அரசியல் ரீதியாக அந்தஸ்தைப் பெறுவதற்கு ஆண்களால் மட்டுமே முடியும் என்பதை சமூகமும் பெருமளவில் ஏற்றுக் கொண்டுள்ளது. இதன் காரணமாகத் தகுதியுடைய பெண்கள் தம்மை அரசியலில் அடையாளப்படுத்த முடியாமல் குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டும் நிலையில் உள்ளனர்.

இதனால் அரசியலில் பெண்களுக்குக் கிடைக்கக் கூடிய வாய்ப்புக்கள் மிகக் குறைவானதாகும் என்பதே எனது கருத்தாகும்.

த.நந்தினி, சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

தலைமைத்துவத்தை
தாங்கக் கூடியவர்கள்
ஆண்கள் எனும்
நிலைப்பாடு சமூகத்தில்
உருவாகியுள்ளது.
அரசியல் ரீதியாக
அந்தஸ்தைப் பெறுவதற்கு
ஆண்களால் மட்டுமே
முடியும் என்பதை
சமூகமும் பெருமளவில்
ஏற்றுக் கொண்டுள்ளது.

## தாலாட்டு



நானும் நீயும்
கடற்கரை
மணலில் கால்பதித்து
நடந்து கொண்டிருந்த வேளை
என்ன அதிசயம்!
அலைகளின் சத்தம் அடங்கி
உறங்கிக் கொண்டிருக்கிறதே!
ஓ உன் கொலுசின்
தாலாட்டில் உறங்கி
விட்டனவா?

சிந்து சிவதாஸ், ஐங்கரன் வீதி,
சுதுமலை தெற்கு.

## விமர்சனம்

நீங்களும் எழுதலாம்....

அரசியல் பிரவேசத்தில் ஆதிக்கம் செலுத்துவது

**ஆண்களா? பெண்களா?**



உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்.

தரமான விமர்சனங்கள் பிரசுரமாகும்.

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள் ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-..............................................................


முகவரி :- ..........................................................

..........................................................

.......................... ..........................
திகதி கையொப்பம்

**'இளவல்கள் வட்டம்',**
'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## நீதியைத் தேடி.....



விழியைத் திறந்தும் விடியாத உலகம்
வழியேதும் அறியாது வலிகளின் பயணம்
நீதியை வழங்க நினைத்தோர்கள் அதிகம்
அறிக்கைகளை அலசி ஆண்டுகளின் மரணம்
கத்திக் கூக்குரலிடும் காக்கை மனிதர்கள்முன்
ஏங்கியே வாழ்ந்திடும் ஏமாளிகளாய் ஆனோம்,
பேசாத ஊமைகளாய் மௌனிக்கும் கணங்கள்
பேரவலம் நேர்ந்தபோதும் பொறுத்திடும் உள்ளங்கள்
பொல்லாத நாள்களை பொழுதாகக் கழிக்கிறோம்
நீதியைத் தேடியெம் நிம்மதி தொலைக்கிறோம்....

எஸ்.சிவறஜன்,
முள்ளியவளை,

## படித்தது சுவைத்தது

★ மனம் திறந்து பேசுங்கள் ஆனால் மனதில் பட்டதை யெல்லாம் பேசாதீர்கள். சிலர் புரிந்து கொள்வர். சிலர் பிரிந்து விடுவார்கள்.

★அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
அறிவின் அழகு படிப்பில் தெரியும்.

★காதல் என்பது வீதியில் கிடக்கிற காசு மாதிரி....
தொலைச்சவன் காலி, கிடைச்சவன் ஜாலி

★தன்னை அறிந்தவன் ஆசைப்படமாட்டான்
உலகை அறிந்தவன் கோபப்படமாட்டான்
இரண்டையும் அறிந்தவன் கஷ்டப்பட மாட்டான்.

★கொடுக்கத் தெரிந்தவனுக்குத்தான் எடுப்பதற்கு உரிமை உள்ளது.

சிந்து சிவதாஸ்,
ஐங்கரன் வீதி, சுதுமலை தெற்கு.

## வாழ்க்கை....

அமைதி வாழ்க்கையின் தீர்வல்ல
கவலை வாழ்க்கையின் பகுதியல்ல
மகிழ்ச்சி வாழ்க்கையின் துணையல்ல
தற்கொலை வாழ்க்கையின் முடிவல்ல
தோல்வி வாழ்க்கையின் வெளிச்சமல்ல
அழுகை வாழ்க்கையின் ஆயுதமல்ல
வெற்றி வாழ்க்கையில் தொடர்வதில்லை
வாழ்க்கையே ஒரு போராட்டம்தான்

தி.கௌசிகா,
வெள்ளாம்போக்கட்டி, கொடிகாமம்





## 5 பேருக்கு தற்செயல் நிவாரண உதவி

எதிர்பாராத தீ விபத்து, கடும் காற்று, மழை, வெள்ளப்பெருக்கு போன்றவற்றால் பாதிக்கப்பட்ட வர்களுக்கு.

கிளிநொச்சி, ஜூலை 18
கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் எதிர்பாராத தீ விபத்து, கடும் காற்று, மழை, வெள்ளப்பெருக்கு போன்றவற்றால் பாதிக்கப்பட்ட 5 பேருக்கு மாகாண சமூக சேவைகள் திணைக் களத்தால் தற்செயல் நிவாரண உதவித் தொகை அனுப்பி வைக் கப்பட்டுள்ளது.
பின்வரும் பயனாளிகள் தமது தேசிய அடையாள அட்டை, குடும்ப அட்டை ஆகியவற்றுடன் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலர் கோ.நாகேஸ் வரன் அறிவித்துள்ளார்.
ஞானச்சந்திரவேல் உருத்திரா தேவி-சிவநகர், அருணாசலம் கதிராயி- ஊற்றுப்புலம், இராச குமார் லட்சுமி- செல்வாநகர், வை.சந்திரலிங்கம்-பத்தாம் வாய்க்கால் உருத்திரபுரம், தர் மராஜா விதுனன்-உதயநகர் ஆகிய பயனாளிகளுக்கே உதவித் தொகை அனுப்பி வைக்கப் பட்டுள்ளது. (வ-9)

### மதிப்பீட்டு அறிக்கை சமர்ப்பிப்பு
# முதியோர் இல்லத்தை மீள இயக்க ஏற்பாடு



முதியோர் இல்லத்தைப் புனரமைத்து மீள இயங்க வைப்பதற்குச் சுமார் 6 மில்லியன் ரூபா நிதி தேவைப்படுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, ஜூலை 18
கிளிநொச்சி வன்னேரிக்குளம் முதி யோர் இல்லத்தை மீள இயக்கு வதற்கு சுமார் 6 மில்லியன் ரூபா நிதி தேவையென மதிப்பிடப் பட்டுள்ளது.
கிளிநொச்சி வன்னேரிக்குளத்தில் சேதமடைந்த நிலையில் காணப் படும் முதியோர் இல்லத்தைப் புனரமைத்து அதனை மீள இயங்க வைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு இங்குள்ள பலரும் கோரிக்கை விடுத்துள் ளனர்.
இந்த நிலையில், குறித்த முதி யோர் இல்லத்தைப் புனரமைத்து மீள இயங்க வைப்பதற்கு சுமார் 6 மில்லியன் ரூபா நிதி தேவைப் படுமென மதிப்பிடப்பட்டுள்ளது.
இந்த நிதியை வழங்குமாறு கோரும் கடிதம் ஒன்றை மாவட்ட சமூக சேவைகள் திணைக்களத் துக்கு முதியோர் இல்லத் தலைவர் தி.இராசநாயகம் அனுப்பியிருந் தார்.
இதனையடுத்து கடந்த பெப்ரவரி மாதம் வடமாகாண சமூக சேவைத் திணைக்கள அதிகாரிகள் தலைமை யிலான குழுவினர் அங்கு சென்று முதியோர் இல்லத்தை பார்வை யிட்டு அறிக்கை சமர்ப்பித்திருந் தமை குறிப்பிடத்தக்கது. (க-6)

# தப்பினார் தபால் ஊழியர்

கடந்த வாரம் ஏ-32 பிரதான வீதியில் இடம் பெற்ற விபத்துச் சம்பவத்தில் தபால் ஊழியர் ஒருவர் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார்.
இந்தச் சம்பவம் தொடர்பாகத் தெரிய வருவதாவது;
வேகமாக வந்த வீதிப் புனரமைப்பு வேலைகளில் ஈடுபட்டிருந்த கனரக வாகனம் ஒன்று கள்ளியடி பிரதான வீதியில் வேகக் கட்டுப்பாட்டை இழந்ததால் சைக்கிளை உருட்டிக் கொண்டு வீதியைக் கடக்க முற்பட்ட தபால் ஊழியர் மீது மோத முற் பட்டபோது தபால் ஊழியர் தனது சைக்கிளை விட்டுவிட்டு எதிர்ப்பக் கம் பாய்ந்துள்ளார்.
ஆனால் வாகனம் சைக்கிளில் மோதியதுடன் மட்டுமன்றிக் கள்ளி யடி பாடசாலையின் வேலியையும் சேதப்படுத்தியது.
அந்த இடத்துக்கு விரைந்து வந்த இலுப்பைக்கடவை வீதி போக்கு வரத்துப் பிரிவுப் பொலிஸார் வாகனச் சாரதி அதி வேகத்தில் வந்ததால் வாகனம் கட்டுப்பாட்டை இழந்த தாகத் தெரிவித்துத் தபால் ஊழி யருக்கு இழப்பீடாக சைக்கிள் ஒன்றை வாங்கிக் கொடுக்குமாறு தெரிவிக்க, தபால் ஊழியருக்குச் சைக்கிள் வாங்கிக் கொடுக்கப்பட்டது.
கள்ளியடி பாடசாலைக்கு முன்பாக இந்த விபத்து இடம் பெற்றதால் பாடசாலை மாணவர்களின் பெற் றோர் மத்தியில் இந்தச் சம்பவம் அதிர்ச்சியையும் அச்சத்தையும் ஏற்படுத்தி உள்ளது. பாடசாலை மாணவர்கள் இந்த வீதியையே போக்குவரத்துக்கும் பயன்படுத்தி வருகின்றனர்.
இந்தப் பிரதான வீதி புனரமைக் கப்பட்டது முதல் வாகனங்கள் வேக மாகச் செல்வதாகவும், வேகக் கட் டுப்பாட்டைக் கடைப்பிடிப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படாது விட்டால் மேலும் விபத்துக்கள் ஏற் படுவதற்கான சாத்தியங்கள் உள்ள தாகவும் இந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (க-12)





# மெத்தா நிறுவனத்தால் நடமாடும் சேவைகள்

நெடுங்கேணி, ஜூலை 18
மன்னார் வைத்தியசாலையில் இயங்கும் மெத்தா நிறுவனம் தனது 45 ஆவது நடமாடும் சேவையை மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள இலுப்பைக்கடவை, வெள்ளாங் குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் நாளை நடத்த வுள்ளது.
காலை 7.30 தொடக்கம் பிற்பகல் 10.30 வரை இலுப்பைக்கடவை பாடசாலையிலும் பிற்பகல் 11.30 தொடக்கம் 4.30 வரை வெள்ளாங் குளம் பாடசாலையிலும் இந்தச் சேவை பாடசாலை மாணவர்களுக் கும், ஆசிரியர்களுக்கும், பொது மக்களுக்காகவும் நடத்தப்படும்.
இதில் செயற்கை அவயவங்கள் பொருத்துவதற்கான அளவுகள் எடுக்கப்படும்.
இங்கு கட்டைக்கால், போலியோ பாதிப்பு என்பனவற்றுக்கான விசேட பாதணிகளும், நடைப் பயிற்சியும் இலவசமாக வழங்கப்படவிருக் கின்றன.
தொடர்ந்து சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை கிளிநொச்சி ஏ-9 வீதியில் அமைந் துள்ள கருணை நிலையத்தில் நடமாடும் சேவை இடம்பெறும்.
இந்த நடமாடும் சேவையில் கடந்த 5,6,7 திகதிகளில் மாங்குளம், முல்லைத்தீவு ஆகிய இடங்களில் அளவுகள் எடுக்கப்பட்டவர்களுக்கு செயற்கை அவயவங்கள் பொருத் தப்படுவதுடன் புதிதாக ஊனமுற்ற வர்களுக்கு அளவுகளும் எடுக்கப் படும் என மெத்தா நிறுவனத்தின் தொடர்பு அதிகாரி தெரிவித் துள்ளார். (க)




சர்வதேச விதவைகள் தின நிகழ்வின்போது வவுனியா மாவட்ட சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் நா.சேனாதிராசா உரை நிகழ்த்துகின்றார். (க-402)

# அக்கராயன்குளத்தில் நெற்களஞ்சியம் நிறுவுமாறு விவசாயிகள் கோரிக்கை

அக்கராயன், ஜூலை 18
கிளிநொச்சி அக்கராயன்குளம் பகுதியில் நெற் களஞ்சியம் ஒன்றை அமைத்துத் தருமாறு இந்தப் பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
கிளிநொச்சி மாவட்டத்தின் பெரிய நீர்ப்பாசனக் குளங்களில் ஒன்றாகக் காணப்படும் அக்கராயன் குளத்தின் கீழ் அதிகளவிலான பயிர்ச் செய்கை நிலங்கள் உள்ளன. ஆனால் நெல் அறுவடை காலங்களில் நெல்லைக் கொள்வனவு செய்யும் போது களஞ்சிய வசதியின்மையைக் காரணம் காட்டி குறைந்த அளவிலான நெல்லே கொள்வனவு செய்யப்படுகின்றது.
இந்த நிலையில் அக்கராயன்குளம் விவசாய அமைப் புக்கள் தமது பகுதியில் நெற் களஞ்சியம் ஒன்றை அமைக் குமாறு கோரிக்கை விடுத்துள்ளன. அறுவடை காலத்தில் நெல் சந்தைப்படுத்தும் சபையினால் நெல் கொள்வனவுகள் பல்வேறு இடங்களில் இடம்பெற்ற போதிலும் போதிய களஞ்சிய வசதிகள் இல்லாததால் விவசாயிகள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.
எனவே தமது பகுதியில் நெற் களஞ்சியம் ஒன்றை அமைத்துத் தருமாறு கடந்த 5 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட விவசாயக் குழுக் கூட்டத்தில் அக்கராயன்குளம் பிரதேச விவசாய அமைப்புக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டது. (க-6)

# மேய்ச்சல் தரவைகள் இல்லாததால் சிரமம்

அக்கராயன், ஜூலை 18
கிளிநொச்சி மாவட்டத்தில் மேய்ச்சல் தரவைகள் போதியளவு இல்லாததால் கால்நடை வளர்ப் பாளர்கள் இடர்களை எதிர்கொண்டு வருகின் றனர்.
பயிர்ச்செய்கைகள் மேற்கொள்ளப்படும் காலங் களிலேயே கால்நடை வளர்ப்பாளர்கள் அதிகள வில் இடர்களை எதிர்கொண்டுள்ளனர்.
இங்கு மேய்ச்சல் தரவைகளை உருவாக்குமாறு கால்நடை வளர்ப்பாளர்கள் தொடர்ச்சியாக வேண்டுகோள் விடுத்தபோதிலும் பயன் எதுவும் கிடைக்கவில்லை. இதேவேளை கிளிநொச்சியின் பரந்தன் பகுதியில் மேய்ச்சல் தரவைகளை அமைப் பதற்குரிய நிலம் உள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.
மேய்ச்சல் தரவைகள் இல்லாததால் அக்கராயன் பகுதியிலுள்ள கால்நடை வளர்ப்பாளர்களும் பெரும் இடர்களை எதிர்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)




## தேவை

## பிரதேச செய்தியாளர்கள்

| | | |
|---|---|---|
| ★ பரந்தன் | ★ முழங்காவில் | ★ ஓமந்தை |
| ★ விசுவமடு | ★ புதுக்குடியிருப்பு | ★ வவுனியா |
| ★ வட்டக்கச்சி | ★ முத்துஐயன்கட்டு | ★ செட்டிகுளம் |
| ★ உருத்திரபுரம் | ★ முல்லைத்தீவு | ★ மடு |
| ★ பூநகரி | ★ புளியங்குளம் | ★ முருங்கன் |

மேற்குறிப்பிட்ட இடங்களுக்கு பிரதேச செய்தியாளர்களாகப் பணியாற்ற விரும்புவோர் தமது சுய விவரங்களை editor @ uthayan.com என்ற - மின் அஞ்சல் முகவரிக்கோ அல்லது உதயன் வெளியீட்டகம், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற தபால் முகவரிக்கோ அனுப்பி வைக்க வேண்டும்.

உதயன்
18/07/2013

## தொழில்நுட்ப பாடத்தை ஆரம்பிக்குக

### கல்வி அமைச்சுக்கு கோரிக்கை

வடமராட்சி, ஜூலை 18

நவீன தொழில்நுட்ப பாட நெறிக்கான வகுப்புக்களை முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி, முருங்கன் மகா வித்தியாலயம் ஆகியவற்றிலும் ஆரம்பிக்க வேண்டும் என கல்வி அமைச்சுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவுக் கல்வி வலயத்தில் தம்புத்நுவர சிங்கள மகா வித்தியாலயத்திலும், மன்னார் கல்வி வலயத்தில் எருக்கலம்பிட்டி முஸ்லிம் மகா வித்தியாலயத்திலும் இவ்வகுப்புக்களை ஆரம்பிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை தமிழ் மாணவர்கள் கற்பதற்காக இந்த வலயங்களின் பாடசாலைகள் எவையும் தெரிவு செய்யப்படவில்லை.

எனவே குறிப்பிட்ட பாடசாலைகளிலும் நவீன தொழில்நுட்பப் பாடநெறிக்கான வகுப்பை ஆரம்பிக்க வேண்டும் என வடமாகாண கல்வி அமைச்சு விடுத்த வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-8)



அகில இலங்கை தமிழ் மொழித்தின நடனப் போட்டி நிகழ்வில் குழு நடனம் தனிநடனம் ஆகிய போட்டிகளில் முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்ட யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவர்களுக்கான வரவேற்பு நிகழ்வு கல்லூரி அதிபர் எஸ்.கே. எழில்வேந்தன் தலைமையில் இடம்பெற்றபோது தனிநடனப் போட்டியில் வெற்றிபெற்ற கௌதமன் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். (வ)

# தொழில்நுட்ப கல்வி மூலம் வேலைவாய்ப்பை பெற்றுக் கொள்வதற்கு சரியான சந்தர்ப்பம்

### வலிகாமம் வலய கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 18

தொழில்நுட்ப கல்வி மூலம் உடனடி வேலை வாய்ப்பை பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. கலைத்துறையில் உள்ள தொழில் நுட்ப ரீதியான மாணவர்களின் ஆற்றல்களை வெளிக்கொணர்வதற்கும், தொழில் நுட்ப ரீதியான கல்வி மூலம் உடனடி வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொள்வதற்கு, விஞ்ஞான துறையை கற்பதை விட இத்துறையைக் கற்பது மாணவர்களுக்குப் பொருத்தப்பாடுடையதாக அமையவுள்ளதாக வலிகாமம் வலய கல்விப் பணிப்பாளர் எஸ்.சந்திரராஜா தெரிவித்தார்.

யாழ்.மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இடம்பெற்ற தொழில்நுட்ப பாடத்துறை அறிமுக நிகழ்வு கல்லூரி அதிபர் எஸ்.சிவனேஸ்வரன் தலைமையில் அண்மையில் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது. அந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் உயர்தர வகுப்பில் 51 வீதமானவர்கள் கலைத்துறை பாட நெறியைத் தெரிவு செய்கின்றார்கள். கலைத்துறையைக் கற்பதனால் எதிர்காலத்தில் வேலை வாய்ப்பைப் பெற சிரமம் ஏற்படக் கூடும். அதற்கான காரணம் பிரயோக ரீதியான அறிவைப் பெற்றுக் கொள்ளாது வெறுமனே கோட்பாட்டு ரீதியான அறிவை பெற்றுக்கொள்வதே ஆகும். இக்குறையைப் போக்கும் முகமாக இத்துறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பொறியியலாளராக வரவேண்டும், வைத்தியராக வரவேண்டும் என்ற கனவில் உள்ளவர்கள் அத்துறையில் தோல்வியடைந்தால் அவர்களுடைய வாழ்வு தோல்வியடைந்ததாகவே ஆகிவிடும். ஆனால் இவர்கள் இத்துறையில் கற்பதினால் பல தொழில் வாய்ப்புக்களையும் வேறு பல வாய்ப்புக்களையும் பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பம் கிட்டுகிறது.

பிரயோக ரீதியான மாணவ சமூகத்தை உருவாக்கி தொழில் வாய்ப்பை பெற்றுக்கொள்வதற்கான திட்டமாக புதிதாக கல்வி அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்ட தொழில் நுட்பப் பாடத் திட்டம் விளங்குகின்றது.

கல்லூரியின் முதல்வர் எஸ்.சிவநேஸ்வரன் உரையாற்றும்போது:

தொழில் நுட்பப் பிரிவானது வேலை உலகிற்கும் கல்வி உலகிற்கும் ஏற்ப உருவாக்கப்பட்டுள்ளதாக நம்பப்படுகின்றது. இது கல்வி உலகில் புதிய மாற்றத்தை ஏற்படுத்தும். இத்துறையில் கற்பதால் மாணவர்கள் பல்கலைக்கழகங்கள், கல்வியியற் கல்லூரிகளுக்கு செல்வதற்கான வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன என்றார். (எ)

### ஆன்மிகச் சொற்பொழிவு

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்திவரும் வாராந்த சமய நிகழ்வு வரிசையில் நாளை வெள்ளிக்கிழமை 10.30 மணிக்கு 'தேவி பாகவதம்' என்னும் தலைப்பில் தொடர்ச் சொற்பொழிவு இடம்பெறும். இச்சொற்பொழிவை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல் நிகழ்த்துவார். (வ-8)

### கருத்தரங்கு

கரவெட்டிப் பிரதேச செயலக விதாதா வள நிலையத்தில் சந்தைப்படுத்தல், பொதியிடல் தொடர்பான கருத்தரங்கு ஓகஸ்ட் மாத முதல் வாரத்தில் நடை பெறவுள்ளது. இந்தக் கருத்தரங்கில் பங்கு கொள்ள விரும்பும் பயனாளிகள் எதிர்வரும் முதலாம் திகதிக்கு முன்னர் தங்கள் பெயர் விவரங்களை கரவெட்டிப் பிர தேச செயலக விதாதா வள நிலையத்தில் பதிவு செய்யுமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார். (ஒ)

## தருவது வித்தியா — இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

நாளை

ஆடி-03 வெள்ளிக்கிழமை 19.07.2013
திதி: ஏகாதசி மு.ப.10.18 வரை
நட்சத்திரம்: அனுசம் சித்தம் பி.ப. 02.09 வரை
சுபநேரம்: 06.01 - 07.31 வரை
இராகுகாலம்: 10.31 - 12.01 வரை

**மேடம்:** நீண்ட நாள் எண்ணங்கள் பூர்த்தியாக முயற்சிப்பீர்கள். பிரிய மானவர்களின் சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் மன உளைச்சல் நீங்கும். பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**இடபம்:** மன உறுதியுடன் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். உறவினர்கள், நண்பர்களின் வருகையால் மகிழ்ச்சியுண்டு. வேலையாள்களின் ஆதரவு கிடைக்கும். மாணவர்கள் உற்சாகத்துடன் காணப்படுவார்கள்.

**மிதுனம்:** புதிய முயற்சிகள் வெற்றி தரும். எதிர்பார்த்த இடத்திலிருந்து பணவரவு உண்டு. முன்கோபம் விலகும். பிரியமானவர்களைச் சந்தித்து பொழுதைக் கழிப்பீர்கள். அலுவலகப் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**கடகம்:** உங்களின் வெளிப்படையான பேச்சை அனைவரும் ரசிப்பார்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவீகள்.

**சிங்கம்:** புதுப்பொலிவுடன் காணப்படுவீர்கள். முன்கோபம் விலகும். அரச காரியங்களில் அனுகூலம் உண்டு. அயல் வீட்டாரின் ஆதரவு அதிகரிக்கும்.

**கன்னி:** செயலில் வேகத்தைக் காட்டுவீர்கள். மனக்குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். மாணவர்களின் நினைவாற்றல் கூடும்.

**துலாம்:** ஒருவித படபடப்பு வந்து செல்லும். அடுத்தவர்கள் மனம் காயப்படும்படி பேசாதீர்கள். புதியவர்களை நம்பி ஏமாற வேண்டாம். முன்கோபத்தைக் குறையுங்கள். உத்தியோகத்தில் அலுவலக இரகசியங்களை வெளியிட வேண்டாம்.

**விருச்சிகம்:** எதிர்பார்த்த இடத்திலிருந்து உதவிகள் தாமதமாகக் கிடைக்கும். உறவினர், நண்பர்களுடன் பகை வந்து நீங்கும். உத்தியோகத்தில் வேலைச்சுமையால் சோர்வடைவீர்கள்.

**தனுசு:** முகமலர்ச்சியுடன் காணப்படுவீர்கள். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். மாணவர்கள் உயர்கல்வியில் கூடுதல் கவனம் செலுத்துவார்கள்.

**மகரம்:** தன்னம்பிக்கை துளிர்விடும். தைரியமான முடிவுகளை எடுப்பீர்கள். வெளியூர் பயணங்களால் மகிழ்ச்சியுண்டு. எதிர்காலத் திட்டங்களைப் பற்றி நண்பர்களிடம் விவாதிப்பீர்கள். உத்தியோகத்தில் திறமைகளை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும்.

**கும்பம்:** திறம்படச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். ஆன்மிகவாதிகளின் சந்திப்பு நிகழும். அரசு விடயங்களில் அனுகூலமான நிலை காணப்படும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். முன்கோபம், வீண் பதற்றம் விலகும்.

**மீனம்:** மற்றவர்களின் வேலையையும் சேர்த்துப் பார்க்க வேண்டி வரும். தர்மசங்கடமான சூழ்நிலைகளில் அவ்வப்போது சிக்கித் தவிப்பீர்கள். பண விடயங்களில் சாக்குப் போக்கு சொல்லிச் சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் சிறிய இடர்பாடுகளைச் சமாளிக்க வேண்டியிருக்கும்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | | | | | 5 | | 3 | |
| | 7 | | 8 | | 2 | | | |
| 8 | | 5 | 3 | 7 | | 2 | | 4 |
| | | | 1 | 3 | 4 | | | |
| | 8 | | | | | | 4 | |
| | | | 5 | 8 | 9 | | | |
| 3 | | 2 | | 4 | 8 | 6 | | 7 |
| | | | 6 | | 3 | | | |
| | 9 | | 7 | | | | | 3 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 8 | 7 | 4 | 3 | 9 | 1 | 2 | 6 |
| 4 | 1 | 3 | 6 | 2 | 7 | 9 | 8 | 5 |
| 2 | 6 | 9 | 8 | 1 | 5 | 3 | 7 | 4 |
| 7 | 5 | 6 | 2 | 4 | 3 | 8 | 9 | 1 |
| 3 | 2 | 4 | 1 | 9 | 8 | 5 | 6 | 7 |
| 1 | 9 | 8 | 7 | 5 | 6 | 4 | 3 | 2 |
| 6 | 4 | 5 | 9 | 8 | 2 | 7 | 1 | 3 |
| 9 | 7 | 1 | 3 | 6 | 4 | 2 | 5 | 8 |
| 8 | 3 | 2 | 5 | 7 | 1 | 6 | 4 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# கொள்ளையர் பிடித்து வைத்துள்ள இலங்கையரை விடுவிக்க முயற்சி

## சோமாலி மக்களிடம் பெற்றோர் மன்றாட்டம்

கொழும்பு, ஜூலை 18
சோமாலிய கடற்கொள்ளையர்களால் அண்மையில் கடத்திச் செல்லப்பட்ட எம் வி.அல்பிபீயா கப்பலில் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருந்த இலங்கையர்கள் உட்பட மாலுமிகள் மற்றும் சிப்பந்திகளின் உறவினர்கள் உலகம் முழுவதிலும் வாழும் சோமாலிய மக்களை அந்தக் கடற்கொள்ளையர்கள் மீது தமது செல் வாக்கை செலுத்தி பணயக் கைதிகளை விடுவிக்க உதவுமாறு கூட்டாக வேண்டு கோள் விடுத்துள்ளார்கள்.

2010 ஆம் ஆண்டு முதல் சோமாலிய கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்டு பணயமாக வைக்கப்பட்டிருந்த எம் வி.அல்பிபீயா கப்பல் கடந்தவாரக் கடைசிப் பகுதியில் கடலில் மூழ்கியுள்ளது.

அல்பிபீயா கப்பல் மூழ்கிய போது அதன் அருகிலிருந்ததாகக் கருதப்படும் நஹாம் 3 என்ற கப்பலில் தற்போது அல்பிபீயா கப்பல் பணியாளர்கள் 11 பேர் உயிருடன் இருப்பதாகவும் 4 சிப்பந்திகள் காணாமல் போயிருப்பதாகவும் சோமாலிய கடற்பாதுகாப்பு படையினர் விடுத்துள்ள ஒரு செய்தியில் தெரிய வந்துள்ளது.

கப்பலில் இருந்து காணாமல்போன சிப்பந்தி கள் 4 பேரும் இலங்கையர்கள் என்றே அறிக்கைகள் குறிப்பிடுகின்றன.

முதலில் கிடைத்த செய்திகளின்படி அவர்கள் கடலில் மூழ்கியிருக்கலாம் என்று கருதப்பட்டது. பின்னர் வந்த செய்திகளின்படி அந்த 4 பேரும் கரை சேர்ந்திருக்கலாம்.

> "எம் வி.அல்பிபீயா கப்பல் கடந்தவாரக் கடைசிப் பகுதியில் கடலில் மூழ்கியுள்ளது.

உயிர் காக்கும் மிதவைகளின் உதவியுடன் அவர்கள் கடலில் நகர்ந்து கொண்டிருந்த போது வேறு கடற் கொள்ளை பிரிவினர்களின் ஆதிக்கத்துக்குள்ளும் அகப்பட்டுக் கொண்டிருக்கலாம் என்று அறியப்பட்டது.

அல்பிபீயாவில் இருந்த சிப்பந்திகளில் இந்தியர்கள், பங்களாதேசிகள், இலங்கையர்கள் மற்றும் ஈரானியர்கள் எனப் பல நாட்டவர் இருந்துள்ளனர் என்று கூறப்படுகின்றது.

அந்தச் சிப்பந்திகளின் உறவினர்கள் உலகம் முழுவதிலும் சோமாலியர்களிடம் தமது உறவினர்களை விடுவிக்க தமது செல்வாக்கைப் பயன்படுத்தி உதவுமாறு கேட்டுள்ளனர். (ப)

## ரூ. ஒரு கோடி 16 லட்சம் வட, கிழக்குக்கு ஒதுக்கீடு

கொழும்பு,ஜூலை 18
வடக்கு, கிழக்கில் மீள்குடியமர்த்தப்பட்ட மக்களுக்குத் தேவையான குடிதண்ணீர் மற்றும் கழிவறை வசதிகள் தற்போது ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இதற்காக ஒரு கோடி 16 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று மீள்குடியேற்ற அமைச்சின் செயலர் தெரிவித்தார்.

இதற்கான முதற்கட்ட நடவடிக்கைகள் மட்டக்களப்பு, கிரான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலையால் இடம்பெயர்ந்தவர்களுக்கு குடி தண்ணீர் மற்றும் கழிவறை வசதிகள் தொடர்பான பிரச்சினைகள் காணப்படுகின்றமை கண்டறியப்பட்டுள்ளது என்று அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. இதற்கமைய மீள்குடியேற்றப்பட்ட மக்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கான புதிய திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

வட மாகாணத்தின் வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலும் கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களிலும் இத் திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது. இதன் கீழ் ஆயிரத்து 395 குடும்பங்களுக்கு கழிவறை வசதிகளும் ஆயிரத்து 640 குடும்பங்களுக்கு குடி தண்ணீர் வசதிகளும் வழங்கப்படவுள்ளன. (ச)

# மரண அறிவித்தல்கள்

### மரிசிலின் மரியதாஸ் (போல்)



நாரந்தனை அண்ணா வீதியைப் பிறப்பிடமாகவும் நாரந்தனை மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட மரிசிலின் மரியதாஸ் (14.07.2013) ஞாயிற்றுக்கிழமை காலமனார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மரிசிலின் - கிறிஸ்ரினம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான இறப்பியல் - சூசானம் தம்பதியரின் அன்பு மருமகனும், லூர்துமலரின் அன்புக்கணவரும், பியோ (இத்தாலி), குயினா, ஜெராட் (இத்தாலி), குமுதா, றிச்சேட், றஜீவ், றதீஸ், சானுஜா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை இன்று (18.07.2013) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் ஒரு மணிக்கு புனித இராயப்பர் சின்னப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, நல்லடக்கத்திற்காக பூதவுடல் நாரந்தனை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 400 3758

நாரந்தனை மத்தி,
ஊர்காவற்றுறை.

(30963) (45.6.3)

### திருமதி ஜொய்சி மதுரநாயகம் (சின்னக்கிளி)



குருநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜொய்சி மதுரநாயகம் நேற்று முன்தினம் (16.07.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் மதுரநாயகம் அவர்களின் அன்பு மனைவி யும், பற்றிக்-விக்ரோறியா தம்பதியரின் அன்பு மகளும், அரியராஜா (லண் டன்), குஞ்சம்மா (பிரான்ஸ்), ஜிம்பிறவுன் (லண்டன்), சுதா (பிரான்ஸ்), புறுன்சன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு நாளை மறுதினம் (20.07.2013) சனிக்கிழமை பி.ப 3.00 மணிக்கு புனித யாகப்பர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
0779672860,0772562969
0770757901

இல. 38, 2ஆம் குறுக்குத்தெரு,
குருநகர், யாழ்ப்பாணம்.

(30969) (10.6.3)

# மரண அறிவித்தல்

### திருமதி கனகாம்பிகை சோமசுந்தரம்

*(ஓய்வு பெற்ற பிரதி அதிபர், வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை)*



மாதகலைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், மணிக்கூட்டு ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகாம்பிகை சோமசுந்தரம் 13.07.2013 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை- தங்கம்மா தம்பதியரின் சிரேஸ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்- சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும், கப்டன் என்.சோமசுந்தரம் (ஓய்வு பெற்ற பிரதி அதிபர், யாழ்.இந்துக் கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும், சுரேஸ் (அமெரிக்கா), நிறைஞ்சனா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பிரியகலா (அமெரிக்கா), ரூபராஜ் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், யாழன், சானுகா, சகானா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற திருச்செல்வ விநாயகமூர்த்தி (முன்னாள் ஆசிரியர், சென் ஜோசப் மகா வித்தியாலயம்-மாதகல்) மற்றும் திருமதி சிவயோகம் ஆகியோரின் அன்புச்சகோதரியும், தனலட்சுமி, இந்திரமலர், சந்திரமலர் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.07.2013) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 3.00 மணிக்கு கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.07, மணிக்கூட்டு ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
T.P:021 222 1142

(C/10301)(11.6.3)

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஓய்வு பெற்ற பிரதி அதிபர்
திருமதி **கனகாம்பிகை சோமசுந்தரம்**



அவர்கள் 13.07.2013 இறைபதம் அடைந்ததையிட்டு கவலையடைகின்றோம். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்கி, அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**நலன்புரி கழகம்,**
**வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை,**
**யாழ்ப்பாணம்.**

(c/10524) (3.6.11)

# கண்ணீர் அஞ்சலி



வலிகாமம் தெற்கு பிரதேச சபையில் தொழில்நுட்ப உத்தியோகத்தராக கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்ற **கணேசரத்தினம் அரவிந்தன்** அவர்களின் பாசமிகுமாமனார்.

**சுப்பிரமணியம் சிவபாதம்**

அவர்கள் 2013.07.15அன்று இறைபதம் அடைந்ததையிட்டு அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**வலி.தெற்கு பிரதேச சபை நண்பர்கள்**
**சுன்னாகம்.**

(சி/10522) (5,6,3)

# கண்ணீர் அஞ்சலி



திருமதி
**சோமசுந்தரம் கனகாம்பிகை**
(ஓய்வுபெற்ற பிரதி அதிபர் - வேம்படி மகளிர் கல்லூரி)

எங்கள் ஸ்தாபனத்தின் சக இயக்குநர் கப்டன் N. **சோமசுந்தரம்** அவர்களின் பாசமிகு துணைவியார் சோமசுந்தரம் கனகாம்பிகை அவர்களின் மறைவிற்கு எங்கள் இதய பூர்வ அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

**கோல்டன் ஈகிள் பாதுகாப்பு சேவை**
**முகாமைத்துவ இயக்குநரும்,**
**சக உத்தியோகத்தர்களும்.**

(சி/10519) (10,6,3)

# கண்ணீர் அஞ்சலி



## நாகலிங்கம் சுந்தரராஜா

(இளைப்பாறிய ஆசிரியர்- வட்டு இந்துக் கல்லூரி, மகாஜனக் கல்லூரி)

அன்பிற்கோர் இருப்பிடமாய்
கல்விக்கோர் ஒளி விளக்காய்!
பாசத்தின் புகழிடமாய்!
பக்திக்கோர் வழிகாட்டியாய்!

வாழ்வாங்கு வாழ்ந்து இறைபதம் அடைந்த எம் சிறிய தந்தையின் ஆத்மசாந்திக்காக பிட்டியம்பதி பத்திரகாளியம்மையினதும் சத்திய சாயீசனதும் பாதார விந்தங்களைப் பணிகின்றோம்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று நியூசிலாந்தில் நடைபெறுகின்றன.

சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.

பரமராசா குகராஜன்,
சிவனேஸ்வரம் செல்வராணி,
சிவலிங்கம் தவராணி.

(சி/10388 (3.5.6)

# மூன்று மாகாணங்களிலும் 165 பொலிஸ் பிரிவுகள்

## பொலிஸ் தலைமையகத்தின் கீழ் நேரடி செயற்பாடு

கொழும்பு.ஜூலை 18

தேர்தல்கள் நடைபெறவுள்ள வடக்கு, மத்திய மற்றும் வடமேல் ஆகிய மூன்று மாகாணங்களிலும் சுமார் 165 விசேட பொலிஸ் பிரிவுகள் நிறுவப்பட்டுள்ளன.

இந்த மூன்று மாகாணங்களிலும் தேர்தல் காலத்தில் இடம்பெறும் தேர்தல் வன் முறைச் சம்பவங்களை தவிர்க்கும் வகையிலேயே விசேட பொலிஸ் பிரிவுகள் நிறுவப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக சிறிவர்தன தெரிவித்தார்.

இதற்கமைய மூன்று மாகா ணங்களிலும் உள்ள சகல பொலிஸ் நிலையங்களி லும், பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் பிரிவுகளிலுமே இந்த பொலிஸ் பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தேர்தலை முன்னிட்டு இடம்பெறும் வன் முறைகளை தவிர்த்தல் மற்றும் அது தொடர்பில் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் தொடர்பில் உடனடியாக உரிய நட வடிக்கைகளை மேற் கொள்ளும் வகையிலேயே இந்த விசேட பொலிஸ் பிரிவுகளை நிறுவ தேர்தல்கள் செயலகம் தீர்மானித்தது.

இதேவேளை தேர்தல் வன் முறைகள் தொடர்பாக கண்காணிக்கும் பொலிஸ் தேர்தல் பிரதான செயலகம் பொலிஸ் தலைமையகத்தில் நிறுவப்பட்டுள்ளது.

தேர்தல்கள் செயலகம், மாவட்ட செயலகங்களில் விசேட பொலிஸ் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. (ச)


## 13 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **கந்தசாமி தர்மேசன்**

(திட்டமிடல் உதவியாளர் - வலிகாமம் கல்வி வலயம், மாவட்ட உதவிச் சாரண ஆணையாளர் - காங்கேசன்துறை)

மண்ணில்
30.10.1953

விண்ணில்
18.07.2000

அன்பின் ஊற்றாய் விளங்கி ஆதரவு காட்டியே
இன்ப வாழ்வு நாம் வாழ உம்மையே அர்ப்பணித்தீர்
துன்ப சுவடே தெரியாமல் எம்மை வளர்த்து
கண்ணின் மணிபோல் வாழ்ந்து விண்ணில் மறைந்தீர்
மண்ணிலே நல்ல மாண்புடனே வாழ்ந்திருந்த உங்களை
எப்போது காண்போம் இனி........

"தரன் இல்லம்"
தேவாலய வீதி,
மூளாய், சுழிபுரம்.

பிரிவால் துயருறும்,
மனைவி, முத்தரன்கள்.

(30842) (45.6.3)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
18.02.1947

இறப்பு
10.07. 2011

**அமரர் கந்தையா செல்வராசா**

*திதி: 18.07.2013*

*அன்பிலே தெய்வமாய் அறிவிலே ஆசானாய்*
*பண்புடனே எமைவளர்த்து பாச மழைபொழிந்து*
*இன்பமுடன் நாம் வாழ எல்லாம் எமக்களித்து*
*எம்மை விட்டு இறைவன் அடி சென்றனையோ!*
*என்றென்றும் நாம் மறவோம்!*
*உம் நினைவால் வாழ்ந்திருப்போம்.*

நீங்கா நினைவுகளுடன்
மனைவி - பரிமளம்
பிள்ளைகள் - சுகுணராஜ்,
தினேஸ்ராஸ்,
றுபனி,
குடும்பத்தினர்.

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

(சி/10517)(45.6.3)

## மூன்றாம் வருட நினைவஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
| --- | --- |
| 15 - 12 - 1952 | 21 - 07 - 2010 |

அப்பா என்றழைத்த எம் தெய்வமே
ஆண்டுகள் மூன்று ஓடி மறைந்தாலும்
ஆறிடுமோ எங்கள் துயரம் - அப்பா
உங்கள் மெய்யை விட்டு உயிர் பிரிந்து
இன்று முன்றாண்டுகள் ஆனதப்பா - நாங்கள்
கைகூப்பி நின்றவனும் எம்மை
கைவிட்டு விட்டானப்பா - நாங்கள்
கண்கலங்கி வாடுகின்றோம் அப்பா
ஊர் போற்ற வளர்த்தீர்கள் அப்பா எம்மை
ஓம் என்று சொல்லுக்கு மறுவார்த்தை இல்லையென
ஓங்கி ஒலித்திட எம்மை வளர்த்தீர்கள் அப்பா
உங்கள் பொன் மொழியும் புன்சிரிப்பும்
குறுங்கதையும் கண்முன் நிழலாடுதப்பா
நாங்கள் கதிகலங்கித் தேடுகின்றோம் - அப்பா
உங்கள் ஆசியுடன் உங்களை நினைத்து
நித்தம் எம் பணியைத் தொடருகின்றோம் அப்பா.

திதி: 18,07,2013

**வல்லிபுரம் கணேசலிங்கம்**

(உரிமையாளர்-எரிக்கணேஸ்
பல் மூக்குக் கண்ணாடியகம்)

வன்-வடமேற்கு,
பொன்னையா லேன்,
ஆனைக்கோட்டை.

மனைவி,
பிள்ளைகள்

(சி/10516) (6.3.10)




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடனான காலநிலை நிலவும்.

## யாழ்.மத்திய கல்லூரி முதலாமிடம்

யாழ்ப்பாணம், ஜூலை 18
அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான தமிழ் மொழித் தினப் போட்டியில் குழு நடனம் பிரிவு 1 இல் யாழ்.மத்திய கல்லூரி முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டது.

கொழும்பு றோயல் கல்லூரியில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் செ.சங்கீதன், பா.கோகில ரமணன், இ.விஜயராஜ், செ. அபியூத், றெ.றெஜினஸ், சு. சூரியா, ஞா. நிதுஷன், கஜீவன், பிருணராஜ், யோ. விதுஷன் ஆகிய மாணவர்கள் நடன ஆற்றுகையை நிகழ்த்தியுள்ளனர்.

குழு நடனத்துக்கான நெறியாள்கையைக் கல்லூரியின் நடனத்துறை ஆசிரியர் லிங்கராசா அனிருத்தன் மேற்கொண்டிருந்தார். (எ)

## சமுர்த்தி உத்தியோகத்தருக்கான கிராம அலுவலர் பிரிவுகள் பகிர்வு

வலி. வடக்கு, ஜூலை 18
யாழ். மாவட்டத்தில் கடந்த மாதம் புதிதாக நியமனம் பெற்ற சமுர்த்தி அலுவலர்களுக்கு அவர்கள் கடமையாற்றுவதற்கான கிராம அலுவலர்கள் பிரிவுகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

கடந்த 10 வருடங்களுக்கு மேலாக இரண்டு, மூன்று கிராம அலுவலர்கள் பிரிவுகளில் சமுர்த்திக் கடமைகளை எந்த வகையான பதில் கொடுப்பனவுகளும் பெறாத நிலையில் ஆற்றிய பல சமுர்த்தி அலுவலர்கள் முழு மனத்துடன் தமது கடமைகளை பொறுப்பேற்றுள்ளனர்.

ஏற்கனவே 321 பேர் தெரிவு செய்யப்பட்டு 88 பேர் சமுர்த்தி வங்கிகளில் கடமையாற்றுவதற்கான பயிற்சிகள் வழங்கப்பட்டு வங்கிகளுடன் இணைக் கப்பட்ட நிலையில் ஏனையோர் கிராம அலுவலர்கள் பிரிவுகளில் கடமைக்காக இணைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை ஏற்கனவே கடமையாற்றிய சிலர் உள்ளக வெளியக இடமாற்றங்களுக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளனர். (வ-86)

## சிந்தையைக் கடந்து அப்பாற் சென்றபின் நாம் அனுபவிப்பது எதனை?

சிந்தைக்கு அப்பாற் சென்றதும் நாம் 'அகம்' அல்லது தான் என்பதை அன்றி வேறொன்றையும் அனுபவிக்கமாட்டோம். ஆறு கடலை அடைந்ததும் அதன் தனித்துவத்தை இழக்கின்றது. அது அதன் பெயர், உருவம், அனைத்தையுமே இழந்து கடலுடன் ஒன்றாகி விடுகிறது.

அதுபோலவே, நாம் சிந்தைக்கு அப்பாற் சென்றவுடன்தான் தன்னறிவு தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது. இது சிந்தையின் அழிவின் பின்பே நிகழும்.



நன்றி
தெய்வீகம் மலரும் பொழுது

சாயி சிந்தனை

# தூய்மைத் தன்மை வாய்ந்த சிந்தனைகள் காலம் கடந்தும் பெறுமதி மிக்கவை

## மருத்துவபீட உதவிப் பதிவாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 18
தூய்மைத் தன்மை வாய்ந்த சிந்தனைகள் காலம் கடந் தும் பெறுமதி மிக்க விளைவுகளை தரவல்லன என்று யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட உதவிப் பதிவாளர் இ.சர்வேஸ்வரா தெரிவித்தார்.

யாழ்.அளவெட்டி அருணோதயாக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு வைபவமும் நிறுவுநர் நினைவு நிகழ்வும் அண்மையில் நடைபெற்றன. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு'' திறன்களே உலகின் திறவு கோல்கள்'' எனும் தலைப்பில் நிறுவுநர் நினைவு உரையினை நிகழ்த் தும் போதே சர்வேஸ்வரா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட வேளையில் அருணாசல உடையார் எமது கிராமத்தின் கல்விப் பாரம்பரியத்தில் கொண்டிருந்த அதீத அக்கறையை நாம் இன்று அறுவடை செய்து கொண்டிருக்கிறோம். அவரது நல்ல சிந்தனையால் விதைக்கப்பட்ட விதை இன்று எமது கிராமத்தின் பிள்ளைகளுக்கு அறிவு சார் நிழலை மட்டுமன்றி ஆளுமைகள் என்ற நிழலையும் தரும் பெரும் விருட்சமாக வியாபித்து நிற்கிறது.

ஏதோ ஒருகணப்பொழுதில் நல்ல மனிதரொருவரின் சிந் தனையில் உதித்த நல்ல எண்ணம் விளைவித்த பேறுகளை இன்று நாம் இப் பாடசாலையின் வளர்ச்சி யிலும் மாணவர்களின் கல்வி மற்றும் இணைப் பாட விதானச் செயற்பாடுகளின் வெற்றியிலும் கண்டு பெருமையுறத் தக்க வாய்ப்பைத் தருகிறது.

ஒரு குழந்தையின் வளர்ச்சிக்காகப் பாப்பாப் பாட்டுப் பாடிய பாரதியார் வகுத்துக் கொடுத்த விதிகளையும், நேர அட்டவணைகளையும் காணும் போது அதில் பொதிந்து கிடக்கும் உளவியல் உண்மைத் தன்மைகளை ஆழமாக உணரமுடிகிறது. எமது சமூகத்தில் வாழும் சிறுவர்களுக்கு இவ்வாறான விதிப்படி வாழ வழிகிடைக் கின்றதா? என ஆய்வு செய்ய விளையும் போது ஏமாற்றமான பதிலே கிடைக்கின்றது.

இயந்திரமயமாக மாறி வரும் வாழ்க்கை புதிய நுட்பங்களின் புகுத்தலினால் புனிதத்தை தொலைத்து வரும் பண்பாட்டு கலாசார வாழ்வியல் மரபுகள் என எமது நாளாந்த பொழுதுகள் நாம் எண்ணித் தீர்மானிக்க முடியாத திசை நோக்கிய பயணமாகவே அமை கின்றது.

திறன்கள் உடைய ஒரு மாணவனாலேயே இன்றைய உலகை வெற்றிகரமாக எதிர் கொள்ள முடியும். மாணவர்கள் திறன்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து அறிவோடு சமாந்தரமாக திறன்களையும் வளர்க்க வேண்டும் என்றார். (எ-36)

## புதிய குடியிருப்பு கிராமத்துக்கு மின்சாரம்

கொழும்புத்துறை, ஜூலை 18
நெடுங்குளம் பிள்ளையார் கோயில் பகுதியில் உருவாகி வரும் புதிய குடியிருப்புக் கிராமத்துக்கு மின் விநியோகம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

200 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கும் இக் கிராமத்துக்கான மின் விநியோகத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உத்தியோகபூர்மாக ஆரம்பித்து வைத்தார். யாழ். மாநகர சபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா, ஆணையாளர், மின்சார சபை அதிகாரிகள் எனப் பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (வ-135)

## தண்ணீர் தாங்கி மக்கள் பாவனைக்கு

கொழும்புத்துறை, ஜூலை 18
கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலய வளாகத்தில் அமைக்கப்பட்ட தண்ணீர்த் தாங்கி நேற்று முன்தினம் பொதுமக்களின் பாவனைக்குத் திறந்து வைக்கப்பட்டது.

பிறவுண்ஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். மாநகர சபையால் நிர்மாணிக்கப்பட்ட தண்ணீர்த் தாங்கியை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா திறந்து வைத்தார்.

அயற் கிராமங்களில் இருந்து தமது குடி தண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ள இக் கிணற்றுக்கு வரும் பொதுமக்களின் வசதி கருதி இந்தத் தண்ணீர்த் தாங்கி அமைக்கப்பட்டு அதன் சுற்றாடலில் 3 இடங்களில் நீர்க் கம்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன. (வ-135)

## சைக்கிள் திருட்டு

கொழும்புத்துறை, ஜூலை 18
கொழும்புத்துறை ஆனந்தன் வடலி வீதியில் உள்ள வீடொன்றின் வாசலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிள் நேற்று முன்தினம் காலை திருட்டுப் போயுள்ளது.

சமயோசிதமாக தன் திருட்டு முயற்சியை மேற்கொண்ட நபர் வாசலில் நின்ற சைக்கிளை எடுத்துச் செல்கையில் ஆளரவம் கேட்டு தான் மறைந்து கொள்வதற்காக சைக்கிளுடன் அடுத்த வீட்டுக்குள் சென்றுள்ளார்.

அங்குநின்ற பப்பாசிமரத்திலிருந்து ஒரு பழமாவது தருமாறு வீட்டு உரிமையாளரிடம் கேட்டுள்ளார். புதியமுகமான அவருக்கு பப்பாசிப்பழம் இல்லையென வீட்டார் கூறிய போதும் தருமாறு அடம் பிடித்து நின்றுள்ளார். பலத்த முயற்சியின் பின்னர் அவர் வெளியேற்றப்பட்டார்.

சிறிது நேரத்தின் பின்புதான் அருகில் உள்ள வீட்டில் சைக்கிள் களவு போனமை தெரிய வந்தது. அப்போதுதான் திருடன் தான் மறைந்து கொள்வதற்காக பப்பாசிப்பழம் கேட்பதாக சாட்டுக் கூறி அடுத்த வீட்டில் தரித்துச் சென்றதை ஊகிக்க முடிந்தது. (வ-135)

## வலி. கிழக்கில் பிரதேச செயலர் பிரிவில் 3 ஆவது சமுர்த்தி வங்கி

அச்சுவேலி, ஜூலை 18
வலி.கிழக்கு பிரதேச செய லர் பிரிவில் மூன்றாவது சமுர்த்தி வங்கி சிறுப்பிட்டியில் செயற்படத் தொடங்கியுள்ளது. வங்கியின் செயற்பாடுகளைக் கடந்த திங்கட்கிழமை வலி. கிழக்கு பிரதேச செயலர் எம்.பிரதீபன் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் கோப்பாய் மற்றும் அச்சுவேலியில் சமுர்த்தி வங்கிகள் சொந்தக் கட்டடங்களில் செயற்பட்டு வருகின்றன.

தற்போது மூன்றாவது சமுர்த்தி வங்கியைச் சிறுப்பிட்டியில் நிறுவுவதற்கு நிதி ஒதுக்கப்பட்டிருப்பதோடு வங்கிச் செயற்பாடுகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தற்போது தனியார் இல்லத்தில் செயற்படும் வங்கிக்கு நிரந்தரக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டதும் புதிய கட்டடத்துக்கு மாற்றப்படுவதோடு கட்டுமானப் பணிகள் ஒரு வருடத்தில் பூர்த்தியடையும். வங்கி நிர்மாணத்துக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என வலி.கிழக்கு பிரதேச செயலர் எம். பிரதீபன் தெரிவித்தார். (வ-11)




மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரிக்கு அமரர் சங்கரப்பிள்ளை கனகசபை நினைவாக அவரது குடும்பத்தினரால் சுமார் ஏழு லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட நுழைவாயில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. (ந-9)

## விபத்தில் வயோதிபர் காயம்

தென்மராட்சி, ஜூலை 18
சைக்கிளில் பலாப்பழம் கட்டிய நிலையில் வீதியைக் கடக்க முயன்ற வயோதிபர் மோட்டார் சைக்கிளால் மோதுண்டு காயமடைந்தார். மோட்டார் சைக்கிளோட்டியும் தூக்கி வீசப்பட்டுக் காயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை சாவகச் சேரி பெரிய அரசடியில் இடம்பெற்றது. மீசாலை மேற்கைச் சேர்ந்த நாகலிங்கம் சோமசுந்தரம் (வயது-72) என்பவர் தலையில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (வ-9)

## இளைஞர் சேவை அலுவலகம் இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 18
தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ். மாவட்டக் காரியாலயம் இதுவரை தேசிய வீடமைப்பு அதிகார சபைக்குச் சொந்தமானகட்டடத்தில் இயங்கி வந்தது. இக் காரியாலம் கடந்த 10 ஆம் திகதி தொடக்கம் இல.28, கச்சேரி கிழக்கு வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் செயற்பட்டு வருகிறது. (ந-14)

## உயிலங் குளத்தில் திறந்த கிணறுகள்

துணுக்காய் உயிலங்குளம் 50 வீட்டுத்திட்டத்தில் ஏற்பட்டுள்ள குடிதண்ணீர் நெருக்கடியைத் தீர்க்கும் பொருட்டு இரண்டு திறந்த கிணறுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இந்த வீட்டுத்திட்டத்தில் அடிப்படை வசதிகள் இல் லாத நிலையும் காணப்படுகின்றது. வீதிகள் மோசமான நிலையில் காணப்படுகின்றன.

தண்ணீரைப் பெறுவதற்கு மக்கள் நீண்ட தூரம் செல்ல வேண்டிய நிலையில் உள்ளனர். இந்த நிலையில் இரண்டு திறந்த கிணறுகள் இங்கு அமைக்கப்பட்டு வருகின்றன. (க-18)

# 'பிரகீத்தை'ப் பார்க்கவில்லை அருந்திக்க எம்.பி. சாட்சியம்

ஊடகவியலாளர் பிரகீத் ஹெக்னெலிகொட பிரான்ஸில் உயிருடன் இருக்கின்றார் என்று நாடாளுமன்றில் தெரிவித்துப் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அருந்திக பெர்ணாண்டோ, பிரகீத் எக்னெலிகொடவை நான் காணவில்லை என்று ஹோமாகம நீதிமன்றத்தில் செவ்வாய்க்கிழமை தெரிவித்தார்.



இந்த வழக்குத் தொடர்பில் சாட்சியமளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஊடகவியலாளரான மஞ்சுளவெடிவர்த்தனவின்பேச்சை நம்பியே, ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட உயிரோடு இருப்பதாக நான் நாடாளுமன்றத்தில் தெரிவித்தேன் என்று அவர் தனது சாட்சியத்தில் கூறினார்.

பிரகீத் எக்னெலிகொடவை நான் காணவில்லை. பிரான்ஸிலுள்ள உணவகத்துக்கு வந்துபோனவர் தான் எக்னெலிகொடவென மஞ்சுள வெடிவர்த்தன என்னிடம் கூறினார் என்று அவர் குறிப்பிட்டார்.

இதன்போது சாட்சியை இடைமறித்த சட்டத்தரணி உபுல் குமார பெரும, பத்திரிகைச் செய்தியின் பிரகாரம் எக்னெலிகொட உயிரோடு இருப்பதாகத் தங்களிடம் கூறிய எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் யாரென்று வினவினார்.

எக்னெலிகொட, பெல்ஜியத்தில் வாழ்ந்து வருவதாக ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துநெத்தி தன்னிடம் தெரிவித்தார் என அருந்திக்க கூறினார். (ச)

# கொழும்பு நகரை சுத்தப்படுத்துவர் கைதிகள்

கொழும்பு,ஜூலை 18

கொழும்பு நகரை சுத்தப்படுத்தும் நடவடிக்கைகளில் கைதிகளை ஈடுபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

பாதுகாப்புச் செயலரின் ஆலோசனைக்கு அமைய புதிய திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளதாகச் சிறைச்சாலைகள் ஆணையாளர் சந்திர ரத்ன பல்லேகம தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தை கொழும்பு மாநகர சபை, பொலிஸார் மற்றும் சுற்றாடல் பிரிவு என்பன இணைந்து முன்னெடுக்கவுள்ளன என்று அவர் கூறினார்.

இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படும் கைதிகளை அதிகாரிகள் விசேடமாக கண்காணிப்பார் என்று அவர் சுட்டிக்காட்டினார். கைதிகள் சாதாரண உடையில் வீதியைச் சுத்தப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## தேசிய விவரக் கொத்தை தயாரிக்க நடவடிக்கை


கொழும்பு, ஜூலை 18

கலைஞர்களின் பெயர் விவரங்கள் அடங்கிய தேசிய விவரக் கொத்தை தயாரிக்க கலாசார அலுவல்கள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கலைத்துறையில் கடந்த 2வருடங்களில் குறைந்த பட்சம் 3 படைப்புக்களை படைத்திருப்போர் இந்த தேசிய விவரக் கொத்தில் தங்களது பெயர்களைப் பதிவு செய்வதற்கு விண்ணப்பிக்கத் தகைமை பெற்றவர்கள் என்று திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

திணைக்களத்தினால் டெலிநிசா, சினி, வன்சங் ஆகிய பெயர்களில் விவரக் கொத்துக்கள் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ள நிலையில், கலைஞர்கள் தங்கள் பெயர், கலைத்துறையில் பயன்படுத்தும் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கத்துடன் குறித்த வருடங்களில் தங்களால் படைக்கப்பட்ட படைப்புக்கள் அடங்கிய விண்ணப்பத்தினை பணிப்பாளர், கலாசார அலுவல்கள், திணைக்களம்,8 ஆம் மாடி, 'செத்சிறிபாய', பத்தரமுல்லை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு திணைக்களம் கலைஞர்களை கோரியுள்ளது. (ச-10)

# றம்புக்கன் ஓயாத் திட்டத்தை திறந்து வைப்பார் ஜனாதிபதி



திருகோணமலைஜூலை 18

மத்திய நீர்ப்பாசன அமைச்சினால் 3700 மில்லியன் ரூபா நிதியில் றம்புக்கன் ஓயா நீர்ப்பாசனத் திட்டம் நிறைவு செய்யப்பட்டு எதிர் வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் திறந்து வைக்கப்பட்டு மக்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

இந்தத் திட்டத்தினூடாக கிழக்கு மாகாண சபைக்குச் சொந்தமான பொறப் பொல குளத்தினூடாக 500 ஏக்கர் விவசாயக் காணிகளுக்கான நீர் வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பொறப் பொல குளத்தினை தொடர்ந்தும் மாகாண சபையின் நீர்ப்பாசன திணைக்களம் பராமரிப்பதற்கான அனுமதியை வீதி அபிவிருத்தி நீர்ப்பாசனம், வீடமைப்பு அமைச்சர் எம்.எஸ். உதுமா லெப்பை கோரியுள்ளார்.

அதனைச் சபை .அங்கீகரித்துள்ளது. எனவே இனி வரும் காலங்களில் அந்தப் பகுதி சிறந்த அபிவிருத்தியை நோக்கி முன்னேற்றமடையும் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-40)

## ஆண்டுகள் பதின்மூன்றில்...!



தோற்றம் 30 . 01 . 1942

மறைவு 18 . 07 . 2000

அமரர்
**வேலுப்பிள்ளை கனகரட்ணம்**
(கனெக்ஸ்)
(முன்னாள் திட்டமிடல் பணிப்பாளர்- சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்)

ஆண்டுகள் 13இல் ஆயிரம் மாற்றங்கள்
அன்பை மதிக்காது அவமதிக்கும் உள்ளங்கள்
பாசத்தை விலைபேசும் வேஷ உறவுகள்
இத்தனைக்குள்ளும் எம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கும்
உங்களின் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கிகும் உங்கள்

மேகலா, திலீபன்,
கோகுலன், அர்ச்சனா,
அருந்தா, அரி
0778 591565

(C/10529)(10,14)

## கூறு விலைகோரல்

**சாவகச்சேரி பிரதேச சபை –கொடிகாமம்**

சாவகச்சேரி பிரதேச சபையின் பிரதான மண்டபத்திற்கான ஒலிபெருக்கி வசதியினை ஏற்படுத்தும் பொருட்டு தகுதி வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து கூறுவிலை கோரப்படுகின்றது. எனவே இவ் வேலைத்திட்டத்தினைச் செய்ய விரும்பும் வழங்குநர்கள் அலுவலக நாள்களில் (முற்பகல் 10.00 – மாலை 04.00) மணிவரை பார்வையிட்டு தங்கள் விண்ணப்பத்தினை 29.07.2013 இற்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**தலைவர்,**
**சாவகச்சேரி பிரதேச சபை,**
**கொடிகாமம்.**

(c/10512)(3.6.2)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0216671111

## கண்ணீர் அஞ்சலி

எங்கள் அதிபர்
**க.சண்முகராசா**
அவர்களின் அன்புத் தாய்
திருமதி
**வள்ளியம்மை கதிர்காமு**



அவர்களின் மரணச் செய்தி கேட்டு மிக்க துயருறுகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம். அவரது இழப்பால் தவிக்கும் குடும்பத்தாருக்கு எங்கள் அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆசிரியர், மாணவர்கள், ஊழியர்கள்.
பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம்
யா/பொலிகண்டி இ.த.க பாடசாலை, வல்வெட்டித்துறை.

## Northern Academic and Leadership Training Center (NALTC)

தற்போது யாழ்ப்பாணத்தில் புதியதோர் உதயம்!

Northern Academic and Leadership Training Center (NALTC) தனது சேவையை Australian Tamil Management Service உடன் இணைந்து நடத்துகின்றது.

1. **Academic Programmes**
   a. Children Development Programmes : செயற்பாட்டுடன் கூடிய கற்கை நெறி முற்றுமுழுதாக ஆங்கில மொழியில் நடத்தப்படுகிறது. 6-12 Years
   b. Effortless Spoken English for Students, School Leavers and Employees இலகுவழி ஆங்கில பேச்சு பயிற்சி, வேலையாளர்களின் வசதிக்கேற்ப ஒழுங்குகள் செய்து தரப்படும்.
2. **Training Programmes with Work Opportunity:**
   Typist, Accountant, Secretary, English Teacher, Marketing Officer.
   பதிவுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.
   பதிவுகளுக்கு முந்துங்கள்
3. **Professional Services.**
   a. Skilled Migration, Student Visa, Work Visa உட்பட சகலவிதமான வெளிநாட்டு சேவைகளையும் இங்கு பெற்றுக்கொள்ளலாம்.

And also available:
1. Online Visa Application for India, UK and Canada.
2. Computer Typing - Tamil & English
3. Translation-Tamil to English
4. Exam Model Papers for Scholarship Students
5. Air ticketing for all countries

**Northern Academic and Leadership Training Center**
**499/1, Point Pedro Road, Nallur-Jaffna.**
**Hotline: 0770166746**

(C/10525)
(10,6)

## மணமகன் தேவை

*யாழ். இந்து கௌரவ குடும்பம், 1979இல் பிறந்த மிருகசீரிடம் நட்சத்திரம், 8இல் செய்வாய், கிரகபாவம் 43, பட்டதாரி மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை.*

*தொடர்பு: 0727440326*

## வேலை ஆள்கள் தேவை

எமது ஸ்தாபனத்துக்கு பொதி செய்வதற்கு பெண் பிள்ளைகள் தேவை. நாள் ஒன்றுக்கு ரூபா 300/= வழங்கப்படும். வயது 18 தொடக்கம் 35 வரை வேலை நேரம் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை. தொடர்பு :

**11-A, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.**

**021 222 3857** (30978) (10,14)

## வேலையாள்கள் தேவை

திருநெல்வேலியில் இயங்கிவரும் பலசரக்கு கடை ஒன்றுக்கு வேலையாள்கள் தேவை.

தொடர்புகளுக்கு: 0777714558

## தவறிவிட்டது

கிருஷ்ணமூர்த்தி காளராஜ் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (863083486v), சிறுதொகைப் பணம் என்பன 10.07.2013 புதன்கிழமை தென்மராட்சி, வடமராட்சி பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்கண்ட இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு:
**077 902 5096, 077 720 0067**
(30973)(3.6.11)

## தச்சுவேலை செய்வதற்கு வேலையாள்கள் தேவை

நன்கு வேலை செய்யக்கூடிய வேலை ஆள்கள் தேவை. உதவி ஆள்களும் தேவை.

தொடர்பு: **078 559 1513** (30978) (10,14)

## கடை வாடகைக்கு

வேம்படிப் பாடசாலைக்கு முன்பாக கடை ஒன்று வாடகைக்கு உண்டு.

தொடர்புக்கு: **0721837075** (30967) (10,6,3)

## தேவை

கிளிநொச்சியில் இயங்கும் எமது கிளை நிறுவனத்துக்கு பின்வரும் ஆளணியினர் தேவைப்படுகின்றனர்.

* **Reception-** பெண்
* **Technician-** ஆண் - குறைந்தது ஒரு வருட அனுபவம், மோட்டார் வண்டி அனுமதிப்பத்திரம் என்பன எதிர்பார்க்கப்படும் தகுதியாகும்.

ஆர்வமுடையவர்கள் ஏழு நாள்களிற்குள் தங்கள் சுயவிவரக் கோவையை இல.49, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.

**STP COMPUTER WORLD PVT LTD**
**# 49, 1ST Cross Street Jaffna.**
(சி/10512)(3.6.45)

# போலி நாணயத்தாளுடன் கைதானோருக்குப் பிணை

யாழ்ப்பாணம், ஜூலை 18
500 ரூபா போலி நாணயத்தாள் கொடுத்து எரிபொருள் நிரப்ப முயன்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட வங்கி உத்தியோகத்தர்கள் மூவரும் யாழ்.நீதிமன்றினால் நேற்றுப் புதன்கிழமை பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

அரச வங்கி ஒன்றில் பணியாற்றும் மூவரும் யாழ்.நகரிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில் 500 ரூபா போலி நாணயத்தாளைக் கொடுத்து எரிபொருள் நிரப்ப முயன்ற போதே பிடிபட்டனர்.

அது தொடர்பில் யாழ்.பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் மூவரையும் நேற்றுமுன்தினம் கைது செய்திருந்தனர்.

யாழ்.நீதிமன்றில் அவர்கள் முற்படுத்தப்பட்டபோது மூவரையும் தலா ஓர் இலட்சம் ரூபா பிணையில் செல்ல அனுமதியளித்து வழக்கை நீதிவான் ஒத்திவைத்தார். (த-4)

**கணினி திருத்தம்**
உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா?உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம்.அழையுங்கள்.
0779086737 **GUNAA BEST PC**
52,Hospital Road,Jaffna.

**காணி வீடு விற்பனைக்கு**
*நீதிமன்ற வீதி, மல்லாகத்தில் 2 பரப்புக் காணியுடன் கூடிய வீடு சகல வசதிகளுடனும் உடன் விற்பனைக்கு உண்டு.*
*(பிரதான வீதியில் அமைந்துள்ளது)*
*தொடர்பு:0779559442*

**உதயன்**
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## கண்ணீர் அஞ்சலி



**சுப்பிரமணியம் சிவபாதம்**
(இளைப்பாறிய தபால் அதிபர்)

எமது பாடசாலை ஆசிரியை திருமதி தனுசியா அரவிந்தன் அவர்களின் அன்புத் தந்தை சுப்பிரமணியம் சிவபாதம் அவர்களின் மறைவால் துயர் அடைந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
யா/சிறுப்பிட்டி
அ.த.க.பாடசலை, நீர்வேலி.

## கண்ணீர் அஞ்சலி



எமது கழகத்தின் மூத்த உறுப்பினரும், இந்து வின் மைந்தனும், கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் தலைவரும், இந்துக் கல்லூரி யின் முன்னாள் பிரதி அதிபருமாகிய Capt. N. சோமசுந்தரம் அவர்களின் அன்புத் துணைவியார்

**திருமதி கனகாம்பிகை சோமசுந்தரம்**

(ஓய்வு பெற்ற பிரதி அதிபர், யாழ். வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை)

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி பெற இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

Yolly Star Sport Club, Jaffna

## மரண அறிவித்தல்



**மகாதேவன் குலதேவா**

அரியாலையைப் பிறப்பிடமாகவும் லண்டனில் வசித்தவருமாகிய தேவா என்று அன்பாக அழைக்கப்படும் குலதேவா (13.07.2013) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் மகாதேவன்-குமாராணி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் லோகேஸ்வரன்-சத்தியபாமா தம்பதியரின் அன்பு மருமகனும், கலைநிதியின் அன்புக் கணவரும், கோஷிகா (லண்டன்), நிவிகா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், லக்ஷி (லண்டன்), யுகதேவா (இயந்திர இயக்குநர் -Northern Power Company (Pvt.)Ltd.-சுன்னாகம்), குகதேவா ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜெயந்தன்(லண்டன்), கிறிசாந்தி ஆகியோரின் மைத்துனரும், சீதாலட்சுமி, அதிஷ்டலட்சுமி(லண்டன்),கமலாதேவி, விஜய லட்சுமி, காலஞ்சென்ற ஆனந்த சுந்தரம் மற்றும் கருணாகரன், குமாரசாமி(கனடா), அரவிந்தன் காலஞ்சென்றவர்களான தரும லிங்கம், பாலசுப்பிரமணியம் ஆகியோரின் பெறாமகனும், காலஞ்சென்ற சண்முகலிங்கம் (அமெரிக்கா) மற்றும் மகாலிங்கம்(லண்டன்), மகாராணி (அமெரிக்கா), செல்வமலர் (லண்டன்), காலஞ்சென்றவர்களான சரஸ்வதி,பாலாம்பிகை ஆகியோரின் மருமகனும், விதுஷன் (லண்டன்), வர்ஷா (லண்டன்), ஹபி(லண்டன்) ஆகியோரின் மாமனும், ரிதிஷாவின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (18.07.2013)வியாழக்கிழமை லண்டன் நேரப்படி மு.ப. 11 மணியளவில் St.Maryleborl Crematoriun East End Road, London N2 RZ UK. இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

80, கனகரத்தினம் வீதி,
அரியாலை,யாழ்ப்பாணம்.
(30974)(5.6)

தகவல்:
குடும்பத்தினர்.

# குழந்தையுடன் பிச்சை எடுத்த தாயார் கைது

யாழ்.பஸ் நிலையத்தில் குழந்தையுடன் பிச்சையெடுத்த தாயை யாழ்.பிரதேச செயலகத்தினர் நேற்றுப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

அவர்கள் இன்று வியாழக்கிழமை நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

சுமார் 40 வயது மதிக்கத்தக்க குறித்த தாய் பல நாள்களாக பஸ் நிலையத்தில் கைக்குழந்தையுடன் பிச்சையெடுத்து வந்த நிலையில் நேற்றுப் பிடிக்கப்பட்டார். (த-4)

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

# வடக்கிலும் தெற்கிலும் கைவினைக் கிராமங்கள்

டங்களில் அடையாளம் காணப்பட்ட இடங்களில் பூரண வசதியுடன் இந்த கைவினைக் கிராமங்கள் அமைக்க்ப்படவுள்ளதாக அந்த ஊடக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் முதல் கட்டத்தில், அம்பாந்தோட்டையில் அடுத்த நான்கு மாதங்களில் கைவினைக் கிராமம் அமைக்கப்படவுள்ளது.

இது தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று நேற்று இந்தியத் தூதுவர் வை.கே.சின்ஹா மற்றும் பாரம்பரிய கைத்தொழில் அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி, தேசிய கலைகள் மன்ற தலைவர் புத்தி கீர்த்திசேன மற்றும் இந்தியப் பிரதித் தூதுவர் பி.குமரன் ஆகியோருக்கு இடையில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.(த)

# வீரவன்ஸவும் சம்பிக்கவும் அரசில் உள்ள கோமாளிகள்

கிழமை நடத்திய செய்தியாளர்கள் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது;

ஆடை அணிந்து வாழும் சுரணை உள்ளவர் என்றால் விமல் வீரவன்ஸ இந்த நேரமே தனது பதவியை துறந்து விட்டு அரசை விட்டு வெளியேறி இருக்க வேண்டும்.

முதலில் இலங்கை பற்றிய விசாரணைக் குழுவை ஐ.நா. சபை கலைக்க வேண்டும் என்று, விமல் வீரவன்ஸ சாகும்வரை உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார். ஆனால் ஐ.நா. செயலாளர் நாயகம் இந்த கோமாளியைக் கணக்கில் கூட எடுக்கவில்லை.

இவரும் உண்ணாவிரதத்தில் சாகவில்லை. பின்னர் பொலிஸ், காணி அதிகாரங்களை அகற்றாமல் வடக்கில் தேர்தலுக்கு அரசு செல்லக் கூடாது. அப்படிச் சென்றால் அரசிலிருந்து அகன்று விடுவேன் என்று சொன்னார். சிவ்சங்கர் மேனன் வந்து சொல்ல வேண்டியதைச் சொன்னவுடன் அரசு தலை வணங்கி 13 ஆவது திருத்தத்தில் கை வைக்காமல் பொலிஸ், காணி அதிகாரங்களுடன் வடக்குத் தேர்தலுக்குச் செல்கின்றது. ஆனால் வீரவன்ஸ அரசிலிருந்து இன்னமும் விலகவில்லை. அதே போன்று தான் சம்பிக்க ரணவக்கவும். இந்த இருவரும் அரசில் உள்ள கோமாளிகள் - என்றார். (த-5)

# ஆஸி. அகதிகளுடன் மேலும் ஒரு படகு மூழ்கி 4 பேர் சாவு

கின்றன. கிறிஸ்மஸ்தீவிலிருந்துசுமார் 70 கடல் மைல்களுக்கு அப்பால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த விபத்து இடம்பெற்ற இடத்தை நோக்கி ஆஸி. கடற்படைப் படகுகள் விரைந்துள்ளதாகவும், விரைவான மீட்புப் பணிகளை முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகளை ஆஸ்திரேலிய அரசு செய்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

படகில் பயணித்த 144 பேர் மீட்கப்பட்டனர் என ஆஸ்திரேலிய எல்லைப் பாதுகாப்புப் பிரிவு தெரிவித்துள்ளது. இரண்டு கடற்படைப் படகுகளைப் பயன்படுத்தி புகலிடக் கோரிக்கையாளர்கள் மீட்கப்பட்டுள்ளனர். குறித்த படகில் 150 பேர் பயணித்திருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. (த)

# வேட்பாளர் பங்கீடு இறுதி முடிவு இன்று

செய்யும் கூட்டம் நேற்று யாழ்ப்பாணத்திலுள்ள தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது.

கூட்டத்தில் முழுமையாக முடிவுகள் எவையும் எட்டப்படாததால் இன்று மீளவும் கூடி இறுதி முடிவு எட்டுவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் கட்சிகளுக்கு இடையிலான வேட்பாளர் பங்கீடு நேற்று எட்டப்பட்டன. இதன்படி முதற்கட்டமாக வேட்பாளர் பங்கீடு அறிவிக்கப்பட்டது.

| கட்சி | வேட்பாளர் எண்ணிக்கை |
|---|---|
| **முல்லைத்தீவு மாவட்டம்** | |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | 1 |
| புளொட் | 1 |
| தமிழரசுக் கட்சி | 2 |
| ரெலோ | 2 |
| ஈ.பி.ஆர்.எல்.எவ். | 2 |
| **வவுனியா மாவட்டம்** | |
| புளொட் | 2 |
| தமிழரசுக் கட்சி | 2 |
| ரெலோ | 2 |
| ஈ.பி.ஆர்.எல்.எவ். | 3 |
| **மன்னார் மாவட்டம்** | |
| புளொட் | 1 |
| தமிழரசுக் கட்சி | 2 |
| ரெலோ | 3 |
| ஈ.பி.ஆர்.எல்.எவ். | 2 |

நேற்றைய கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த எவரும் கலந்துகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-5)

## மரண அறிவித்தல்கள்



**செல்லத்துரை கண்மணி**

தாவடி வடக்கைப் பிறப்பிடமாகவும் தற்போது பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை கண்மணி கடந்த 15.07.2013 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா- சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும் நாகராஜா, தட்சணாமூர்த்தி, இராஜேஸ்வரன், விக்னேஸ்வரன், ரஞ்சினி, ஞானேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 22.07.2013 பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வன்னியசிங்கம் வீதி,
தாவடி வடக்கு,
கொக்குவில்.
(30979)

தகவல்:
க. நடராஜா
(மைத்துனர்)



**வள்ளியம்மை கதிர்காமு**

புலோலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வள்ளியம்மை கதிர்காமு நேற்று (17.07.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிர்காமுவின் அன்பு மனைவியும், சண்முகராசா (முன்னாள் அதிபர், யா/புலோலி மெ.மி.த.க. பாடசாலை, அதிபர், யா/பொலிகண்டி இ.த.க. பாடசாலை) வின் அன் புத் தாயும், திருமதி மதுணா சண்முகராசாவின் (ஓய்வு நிலை கணக்காளர், வீதி அபிவிருத்தித் திணைக்களம்) அவர் களின் மாமியும், தீபிகா (வவுனியா வளாகம்-யாழ் பல்கலைக் கழகம்), சாரங்கா (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாட சாலை), கயமுகன், திருக்குமரன் (யா/ஹாட்லிக் கல்லூரி) ஆகி யோரின் அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.07.2013) வியாழக்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முள்ளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிலாவடித் தெரு,
புலோலி தெற்கு, புலோலி.
T.P: 077 907 6742
(30969)
(10,6,3)

தகவல்:
க. சண்முகராசா
(மகன்)

## போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜுலை 18
யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையத்தின் 48 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் உரும்பிராய் சென். மைக்கல் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையே நடைபெற்ற இந்த ஆட்டத்தில் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ற-23)

★★★

யாழ்ப்பாணம், ஜுலை 18
மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையத்தில் 48 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகம் நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரில் நேற்று இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள்:

ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகத்துக்கும் அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக்கழகம் 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது.

மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழகத்துக் கும், கைதடி குமரன் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே நடைபெற்ற ஆட்டத்தில், மட்டுவில் மோனதாஸ் விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றது. (ற-23)

# வவுனியா தமிழ் மத்திய ம.வி. அபார வெற்றி

யாழ்ப்பாணம், ஜுலை 18
அகில இலங்கை பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் 15 வயதுப் பாடசாலை அணிகளுக்கிடையே நடத்தும் பிரிவு III கிரிக்கெட் சுற்றுத் தொடரில் கடந்தவாரம் நடைபெற்ற ஆட்டமொன்றில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய அணி 46 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய அணியும் செட்டிக்குளம் மகா வித்தியாலய அணியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய அணியினர் 49 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் அனைத்து இலக்குகளையும் இழந்து 165 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர்.

யசோதரன் 35 ஓட்டங்களையும், பிரியந்தன் 28 ஓட்டங்களையும் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய அணி சார்பாக அதிக பட்சமாகப் பெற்றுக் கொண்டனர்.

பந்துவீச்சில் செட்டிக்குளம் மகா வித்தியாலய அணி சார்பாக கபிலன் 5 இலக்குகளையும், பிரகாஸ் 4 இலக்குகளையும் வீழ்த்தினர்.

167 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய செட்டிக்குளம் மகா வித்தியாலய அணி 33 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் அனைத்து இலக்குகளையும் இழந்து 119 ஓட்டங்களை மட்டுமே பெற்று 33 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

அதில் அக்பத் 23 ஓட்டங்களையும், அபிநயன் 10 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றுக் கொண்டனர்.

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய அணி சார் பாகச் சிறப்பாகப் பந்துவீசிய சிறியன், பிரியந்தன், அபிஷன் ஆகியோர் தலா 3 இலக்குகளைக் கைப்பற்றினர். (ற-23-422)

### அரியாலை ஐக்கிய வி.க. உதைபந்தாட்டத் தொடர்

# பாடும் மீன், சென்.மேரிஸ் இறுதியாட்டத்தில்



யாழ்ப்பாணம், ஜுலை 18
அரியாலை சனசமூக நிலையத்தின் 64 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.


அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் நேற்று இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்துக் களமிறங்கியது குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி.

மிகவும் விறுவிறுவிப்பாக இடம்பெற்ற ஆட்டத்தில் இரு அணிகளும் சம பலத்துடன் மோதிக் கொண்டன.

ஆட்டநேர முடிவில் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

முதலாவது அரையிறுதியாட்டத்தின் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றிருந்தது.

நாவந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணியும், குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணியும் மோதும் பரபரப்பான இறுதியாட்டம் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. (ற-23)



கிழக்கு மாகாண சபை விளையாட்டுப் போட்டிகளில் 15 வயதுப் பிரிவு ஆண்களுக்கான மேசைப் பந்தாட்டப் போட்டிகளில் வெற்றி பெற்று மாகாணச் சம்பியனாகத் தெரிவாகிய ஐயன்கேணி தமிழ் வித்தியாலய அணியினரும் பொறுப்பாசியர்களும். (ற)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜுலை 18
யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையத்தின் 48 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மட்டுவில் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று வியாழக்கிழமை கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம்:

பி.ப. 3.45 மணி
மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் எதிர் பாசையூர் சென்.அன்ரனிஸ் 'பி' அணி.

பி.ப. 4.45 மணி
பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக 'ஏ' அணி எதிர் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம்.(ற-23)

★★★

யாழ்ப்பாணம், ஜுலை 18
மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையத்தின் 48 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகம் நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று வியாழக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரம்:

'பி' பிரிவு
இரவு 7 மணி
அச்சுவேலி கலைமகள் விளையாட்டுக் கழகம் எதிர் நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழகம். (ற-23)

### வதிரி ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழக மென்பந்து கிரிக்கெட் தொடர்:

# மாலிசந்தி மைக்கல், அல்வாய் நியூபவர் சம்பியன்களாகத் தெரிவு

பருத்தித்துறை, ஜுலை 18
வதிரி ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழகம் நடத்திய 5 பந்துப் பரிமாற்றங்கள் மற்றும் 10 பந்துப்பரிமாற்றங்கள் கொண்ட மென்பந்தாட்டச் சுற்றுப்போட்டிகளின் இறுதியாட்டங்களில், மாலி சந்தி மைக்கல் விளையாட்டுக்கழக அணியும், அல்வாய் நியூபவர் விளையாட்டுக் கழக அணியும் சம்பியனாகத் தெரிவாகின.

இந்த இறுதியாட்டங்கள் மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றன.

5 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுத் தொடரின் இறுதியாட்டத்தில் மானிப்பாய் ஒக்ஸ்போர்ட் விளையாட்டுக் கழகமும் மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் ஒக்ஸ்போர்ட் விளையாட்டுக் கழகம் அணியினர் 44 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர்.

துடுப்பாட்டத்தில் காந்தன் 16 ஓட்டங்களையும், அனுகாந் 9 ஓட்டங்களையும் மானிப்பாய் ஒக்ஸ்போர்ட் விளையாட்டுக் கழகம் சார்பாகப் பெற்றுக் கொண்டனர்.

பந்துவீச்சில் மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக் கழக அணி சார்பாக தினோஜன் 2 இலக்குகளையும் பவிகரன், தர்சன், அச்சுதன் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினார்கள்.

45 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய மைக்கல் விளையாட்டுக்கழகத்துக்கு கபிலன், ரகுவரன் ஆகியோர் கைகொடுத்தனர்.

அதிரடியாக ஓட்டங்களைக் குவித்த மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தினர் 4.3 பந்துப்பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து வெற்றியிலக்கை அடைந்தனர்.

துடுப்பாட்டத்தில் அதிரடியாக ஆடிய கபிலன் 20 ஓட்டங்களையும், ரகுவரன் 11 ஓட்டங்களையும் மைக்கல் விளையாட்டுக் கழகம் சார்பாகக் குவித்தனர்.

பந்து வீச்சில் மானிப்பாய் ஒக்ஸ்போர்ட் கழகத்தின் சார்பாக ராஜ் 2 இலக்குகளையும் அனுகாந் ஓர் இலக்கையும் கைப்பற்றினார்கள்.

ஆட்ட நாயகனாக மைக்கல் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த கபிலன் தெரிவு செய்யப்பட்டார்.

தொடர்ந்து இடம்பெற்ற 10 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுத் தொடரின் இறுதியாட்டத்தில் அல்வாய் நியூபவர் விளையாட்டுக் கழக அணியும், கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகமும் களமிறங்கின.

முதலில் துடுப்பாடிய அல்வாய் நியூபவர் அணியின் ஆரம்ப வீரர்கள் நிதானமாக ஆடி ஓட்டங்களைச் சேர்ந்த போதும், மத்திய வரிசை துடுப்பாட்டக்காரர்களின் அதிரடி ஆட்டத்தின் மூலம் 10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 78 ஓட்டங்கள் பெறப்பட்டன.

நியூபவர் அணி சார்பாக கமல் 18 ஓட்டங்களையும், கிரிசாந் 17 ஓட்டங்களையும், ராம்சங்கர் கமலவாசன் ஆகியோர் தலா 15 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

பந்து வீச்சில் கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகம் சார்பாக குணதீபன், நிதர்சன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும், நிசாந்தன் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

79 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாட ஆரம்பித்த கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகத்தினருக்கு ஆரம்பம் முதலே அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தனர் நியூபவர் பந்து வீச்சாளர்கள்.

நியூபவர் அணியின் துல்லியமான பந்துவீச்சை எதிர் கொள்ள முடியாது திணறிய கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகத்தினர் 8.3 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 52 ஓட்டங்களுக்கு அனைத்து இலக்குகளையும் இழந்தனர்.

ஞானம்ஸ் விளையாட்டுக் கழகம் சார்பாக குணதீபன் 18 ஓட்டங்களையும் ஜொனி 11 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் நியூபவர் அணி சார்பாக நிபந்தன் 3 இலக்குகளையும், ராம் 2 இலக்குகளையும் சாய்த்தனர்.

ஆட்ட நாயகனாக சகல துறைகளிலும் ஜொலித்த அல்வாய் நியூபவர் அணியின் ராம்சங்கர் தெரிவு செய்யப்பட்டார். (ற-34)

## ஹெலிகொப்டர் லால் உயிரிழந்தார் நேற்று



**இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் டோனியின் நண்பர் சந்தோஷ் லால் நேற்றுக் காலை மரணம் அடைந்தார்.**

இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் டோனியின் நெருங்கிய நண்பர் சந்தோஷ் லால். இவர்தான் டோனியின் அடையாளமாகக் கொள்ளப்படும் 'கெலி கொப்டர் ஷொட்டை' டோனிக்கு பயிற்றுவித்தவர். இந்த 'ஷொட்' மூலமே டோனி முக்கிய மான தருணங்களில் சிக்ஸர்கள் அடித்து அணியின் வெற்றிப் பாதைக்கு அழைத்துச் செல்வதுண்டு.

சந்தோஷ் லாலுக்கு கடந்த வாரம் திடீரென கடுமையான வயிற்று வலி ஏற்பட்டது. இதனையடுத்து ராஞ்சியில் உள்ள குரு நானக் மருத்துவமனையில் கடந்த 12 ஆம் திகதி அனுமதிக்கப்பட்டார்.

இவரைப் பரிசோதித்த மருத்துவர்கள் அவருக்கு கணைய வீக்கம் இருப்பதை கண்டு பிடித்தனர்.

இதனையடுத்து டெல்லிக்கு கொண்டு செல்லப்பட்ட லால், இந்திரபிரஸ்தா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். லாலின் மருத்துவச் செலவை டோனியே ஏற்றுக் கொண்டிருந்தார். இந்த நிலையில் சிகிச்சை பெற்று வந்த லால், சிகிச்சை பலனின்றி நேற்றுக் காலை உயிரிழந்தார். (ங)



**ஆஷஸ் தொடரில் பங்கேற்பதற்காக இங்கிலாந்து சென்றுள்ள ஆஸ்திரேலிய அணியை உற்சாகப்படுத்துவதற்கான விருந்துபசாரம் ஒன்று பிரிட்டனிலுள்ள ஆஸ்திரேலியத் தூதரகத்தில் நேற்று இடம்பெற்றது. இதில் ஆஸ்திரேலிய அணித் தலைவர் கிளார்க் உள்ளிட்ட வீரர்கள் பங்கேற்று ஆடிப்பாடி மகிழ்ந்தனர்.**

## போனது பதவி

இந்திய விமானப் படையின் விளம்பரத் தூதராக இருந்து வந்த சச்சின் டெண்டுல்கர் அந்தப் பதவியில் இருந்து திடீரென நீக்கப்பட்டுள்ளார். இந்திய விமானப் படையின் இந்தக் கௌரவப் பதவி சச்சின் டெண்டுல்கருக்கு 2011 ஆம் ஆண்டு அளிக்கப்பட்டது.

**சச்சின் டெண்டுல்கரை கௌரவப்படுத்துவதன் மூலம் நிறைய இளைஞர்கள் இந்திய விமானப் படையில் சேர்ந்து பணியாற்ற முன் வருவார்கள் என்று எதிர் பார்க்கப்பட்டது.**

ஆனால் அது எதிர்பார்த்த அளவில் பெரிய பலனை அளிக்காததாலேயே சச்சின் டெண்டுல்கர் நீக்கப்பட்டார். அவருக்குப் பதிலாக விமானப் படையைச் சேர்ந்த ஒருவர் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளார். (ங)

## ஊக்கமருந்துச் சோதனையில் தோல்வி

முன்னணிக் குறுந்தூர ஓட்ட வீரர்களான அமெரிக்காவின் டைசன் கே மற்றும் ஜமைக்காவின் அசாபா பவல் ஆகியோர் தடை செய்யப்பட்ட ஊக்கமருந்துப் பரிசோதனையில் தோல்வியடைந்துள்ளனர்.

இந்த நிலையில் அடுத்த மாதம் உலக சம்பியன்ஷிப் போட்டிகளில் இருந்து டைசன் கே நீக்கப்பட்டுள்ளார். 100 மீற்றர் ஓட்டத்தில் உசைன் போல்ட்டிற்கு அடுத்த படியாக சிறந்த காலப்பெறுமதியை டைசன் கே பதிவுசெய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கடந்த மாதம் நடைபெற்ற ஜமைக்கா சம்பியன்ஸ்ஷிப் போட்டிகளின் போது நடத்தப்பட்ட ஊக்கமருந்துச் பரிசோதனையில் அசாபா பவல் தோல்வியடைந்துள்ளார். (ங)

# மேற்கிந்தியா பதிலடி

மேற்கிந்திய தீவுகளுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணிக்கும் மேற்கிந்திய தீவுகள் அணிக்குமிடையிலான 2ஆவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணி 37 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

கயானாவில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி 50 பந்துப்பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 232 ஓட்டங்களைப் பெற்றது.

முதலாவது பந்துப்பரிமாற்றத்திலேயே கிறிஸ் கெயிலை இழந்த மேற்கிந்திய தீவுகள் அணி, அதன் பின்னர் 2 ஆவது இலக்குக்காக 79 ஓட்டங்களைப் பகிர்ந்திருந்தது.

ஒரு கட்டத்தில் 5 இலக்குகளை இழந்து 150 ஓட்டங்களுடன் தடுமாறியபோதிலும், அதன் பின்னர் 6 ஆவது இலக்குக்காக 70



ஓட்டங்கள் இணைப்பாட்டமாகப் பெறப்பட்டன.

துடுப்பாட்டத்தில் மேற்கிந்திய தீவுகள் அணி சார்பாக டெரன் பிராவோ 81 பந்துகளில் 54 ஓட்டங்களையும் டுவைன் பிராவோ 52 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 43 ஓட்டங்களையும் ஜோன்சன் சார்ள்ஸ் 51 பந்துகளில் 31 ஓட்டங்களையும் கெரான் பொலார்ட் 27 பந்துகளில் 30 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பாகிஸ்தான் அணி சார்பாக சயீட் அப்ரிடி 29 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் சயீட் அஜ்மல் 45 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் அசத் அலி, மொஹமட் இர்பான் இருவரும் தலா ஒவ்வொரு இலக்கையும் கைப்பற்றினர்.

233 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 47.5 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 195 ஓட்டங்களைப் பெற்று 37 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

முதலாவது இலக்குக்காக 37 ஓட்டங்களைப் பகிர்ந்த அந்த அணி, ஒரு கட்டத்தில் 2 இலக்குகளை இழந்து 103 ஓட்டங்களுடன் பலமான நிலையை அடைந்திருந்தது. ஆயினும் பாகிஸ்தான் அதன் பின்னர் இலக்குகளை தொடர்ச்சியாக இழந்து தடுமாறியது.

துடுப்பாட்டத்தில் பாகிஸ்தான் அணி சார்பாக நசீர் ஜம்ஷெத் 93 பந்துகளில் 54 ஓட்டங்களையும் உமர் அக்மல் 46 பந்துகளில் 50 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக சுனில் நரைன் 26 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும் டுவைன் பிராவோ 2 இலக்குகளையும் கேமர் றோச், டெரன் சமி, மார்லன் சாமுவேல்ஸ், கெரான் பொலார்ட் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

இந்தப் போட்டியின் நாயகனாக மேற்கிந்தியத் தீவுகள் அணியின் சுனில் நரைன் தெரிவானார்.

ஐந்து போட்டிகள் கொண்ட தொடரில் 2 போட்டிகளின் நிறைவில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு போட்டியில் வெற்றிபெற்று சமநிலையில் உள்ளன. (ங)

## ஸ்ரீலங்கா பிறீமியர் லீக் இந்த வருடம் இல்லை




இலங்கைக் கிரிக்கெட் சபைக்கும், சமர்செட் நிறுவனத்திற்கும் செலுத்த வேண்டிய வருடாந்தப் பணத்தை ஸ்ரீலங்கா பிறீமியர் லீக் தொடரின் அணிகள் செலுத்தத் தவறியுள்ளதால் இந்த வருடம் நடைபெறவிருந்த எஸ்.எல்.பி.எல் தொடர் நிறுத்தப்பட்டுள்ளது.

ஏற்கனவே இந்தப் பணத்தைச் செலுத்துவதற்கான இறுதித் தினம் நிறைவடைந்திருந்த நிலையில், நேற்றுமுன்தினம் வரை இறுதித் தினம் நீடிக்கப்பட்டிருந்தது. இதன்போதும் சில அணிகள் தங்களின் பணத்தைச் செலுத்தத் தவறியுள்ளன.

எத்தனை அணிகள் இதுவரை தங்களது பணத்தைச் செலுத்தவில்லை என்பது குறித்து இலங்கைக் கிரிக்கெட் சபையோ அல்லது ஸ்ரீலங்கா பிறீமியர் லீக்கின் சந்தைப்படுத்தல் பங்காளர்களான சமர்செட் நிறுவனமோ இதுவரை தெளிவுபடுத்தவில்லை.

இந்த வருடத்துக்கான அணிகளின் வீரர் தெரிவு கடந்த 14ஆம் திகதி இடம்பெறவிருந்தது. இருந்த போதிலும், அது பின்னர் 20ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

எனினும், வருடாந்தப் பணத்தைச் செலுத்தாதவரை அணிகள் வீரர் தெரிவில் ஈடுபட அனுமதிக்க முடியாது என்று இலங்கைக் கிரிக்கெட் சபையும், சமர்செட் நிறுவனமும் அறிவித்திருந்தன. அணிகள் தங்களது வருடாந்தப் பணத்தை செலுத்தாததன் காரணமாக இம்முறை ஸ்ரீலங்கா பிறீமியர் லீக் (எஸ்.எல்.பி.எல்.) தொடர் இடம்பெறாது என்று நேற்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## சர்ச்சையை கிளப்பும் 'டி.ஆர்.எஸ்."

விரைவில் தொழில் நுட்பம் மூலம் மறுபரிசீலனை செய்யும் (டி.ஆர்.எஸ்) முறைக்கு மூடுவிழா நடத்தப்படலாம் என்று சர்வதேச முன்னாள் கிரிக்கெட் நடுவர் பொமி ஜமுலா தெரிவித்தார்.

நடுவர்களின் முடிவை தொழில் நுட்பம் மூலம் மறு பரிசீலனை செய்யும் (டி.ஆர்.எஸ்.) முறைக்கு ஆரம்பத்தில் இருந்தே இந்தியா எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. இந்திய அணி பங்கேற்கும் ஆட்டங்களில் இம்முறை பயன்படுத்தப்படுவதில்லை.

அண்மையில் நடந்த ஆஷஸ் தொடரின் முதல் டெஸ்டில், களத்தில் இருந்த நடுவர்கள் வழங்கிய 13 முடிவுகளில், 8 முடிவுகள் மூன்றாவது நடுவரால் மாற்றப்பட்டது. அதையடுத்து 'டி.ஆர்.எஸ்.' முறை சர்ச்சையை கிளப்பியுள்ளது. இதுகுறித்து இந்தியாவைச் சேர்ந்த முன்னாள் கிரிக்கெட் நடுவர் ஜமுலா கருத்துத் தெரிவிக்கையில்,

"தொழில்நுட்ப அடிப்படையில் செயற்படும் 'டி.ஆர்.எஸ்.' முறை, பல்வேறு நேரங்களில் சிறப்பாக இருந்தது. ஆனால், அவ்வப்போது தவறுதலான தீர்ப்பும் தருகிறது. தொடர்ந்து தவறுகள் நேரும் பட்சத்தில் 'டி.ஆர்.எஸ்.' முறையை தூக்கி எறிந்து விடவேண்டும். அதேநேரம், தொழில்நுட்பங்கள் நடுவர்களுக்கு உதவியாகவும் அமையும். அவைகுறித்து நடுவர்களுக்கு சிறப்பாக பயிற்சி கொடுக்க வேண்டும்" என்று தெரிவித்தார். (ற)

# 40 மில்லியன் டொலர்; நட்ட ஈடு கோருகின்றார் ஆர்தர்

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் பயிற்றுவிப்பாளர் பதவியிலிருந்து சர்ச்சைக்குரிய விதத்தில் நீக்கப்பட்ட மிக்கி ஆர்தர், 4 மில்லியன் ஆஸ்திரேலிய டொலரை நட்ட ஈடாக ஆஸ்திரேலியக் கிரிக்கெட் சபையிடமிருந்து கோரியுள்ளார்.

ஒப்பந்தக் காலம் நிறைவடைய முன்னரே நீக்கப்பட்டமை தொடர்பாகவே அவர் இந்த நட்ட ஈட்டைக் கோரியுள்ளார்.

ஆஸ்திரேலியக் கிரிக்கெட் சபைக்கெதிராக அவரது சட்ட நடவடிக்கைகளுக்கான சட்டப் பத்திரங்கள் ஆஸ்திரேலிய ஊடகமொன்றால் வெளியிடப்பட்டுள்ள நிலையிலேயே இந்தத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அணியின் தோல்விகளுக்கு தான் பலியாடு ஆக்கப்பட்டுள்ளேன் என்றும், தென்னாபிரிக்காவில் பிறந்தவர் என்பதால் தன் மீது பாகுபாடு காட்டப்பட்டுள்ளது என்றும் மிக்கி ஆர்தர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அத்தோடு, ஆஸ்திரேலிய அணியின் தலைவரான மைக்கல் கிளார்க்கிற்கும், உப தலைவராக இருந்த ஷேன் வொற்சனுக்குமிடையில் பெரும் வேறுபாடு காணப்படுகின்றது என்றும், இருவருக்குமிடையிலான தகராறில் "சான்ட்விச்சிற்கு" நடுவில் காணப்படும் இறைச்சி போன்று தான் காணப்படுகின்றேன் என்றும் மிக்கி ஆர்தர் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலிய, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆஷஷ் தொடர் ஆரம்பிக்கப்படுவதற்கு 2 வாரங்களுக்கு முன்னராக ஆஸ்திரேலிய அணியின் பயிற்றுவிப்பாளர் மிக்கி ஆர்தர் அப்பதவியிலிருந்து நீக்கப்பட்டிருந்தார். (ற)





# இங்கிலாந்து அணியில் மாற்றமில்லை

ஆஷஸ் டெஸ்ட் தொடரில் இன்று இடம்பெறவுள்ள 2 ஆவது ஆட்டத்தில் விளையாடும் இங்கிலாந்து அணியில் எந்த வித மாற்றமும் இல்லை என்று அந்நாட்டு கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

முதல் டெஸ்ட் ஆட்டத்தில் ஆஸ்தி ரேலிய அணியை 14 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து அணி தோற்கடித்தது.

அந்தப் போட்டியில் இரு அணிகளுக்குமே வெற்றி வாய்ப்பு சமமாக இருந்தது. நடுவரின் தீர்ப்பை மறு பரிசீலனை செய்யும் முறையால் ஆட்டத்தின் முடிவு இங்கிலாந்துக்குச் சாதகமானது.

இருப்பினும், இரு அணி வீரர்களின் செயற்பாடுகளை ஒப்பிடுகையில் இங்கிலாந்து அணியின் கூட்டு முயற்சி இந்த ஆட்டத்தில் தெளிவாகத் தெரிந்தது. இதைத் தொடர்ந்து அதே அணி, 2ஆவது டெஸ்ட் போட்டியில் களமிறக்கப்படும் என்று அந்நாட்டு அணித் தேர்வாளர் ஜியோப் மில்லர் அறிவித்துள்ளார். (ற)

## துடுப்பாட்டத்தில் கவனம் தேவை



ஆஸ்திரேலிய துடுப்பாட்ட வீரர்கள் தங்கள் திறமையை மேலும் வெளிப்படுத்த வேண்டும் என்று அந்த அணியின் பயிற்சியாளர் டேரன் லீமென் தெரிவித்துள்ளார்.

ஆஷஸ் தொடரின் முதல் ஆட்டத்தில் இங்கிலாந்திடம் தோல்வியைத் தழுவி, 0-1 என்ற கணக்கில் ஆஸ்திரேலியா பின் தங்கியுள்ளது. அந்த ஆட்டத்தில் முன்னணி துடுப்பாட்ட வீரர்கள் ஓட்டங்களைக் குவிக்கத் தவறியமை ஆஸ்திரேலிய அணியின் தோல்விக்கு முக்கிய காரணமாக அமைந்தது. அது குறித்துக் கருத்துத் தெரிவிக்கும் போதே லீமென் இவ்வாறு தெரிவித்தார்.

"முதல் ஆட்டத்தில் ஆஸ்திரேலிய பந்து வீச்சாளர்கள் அற்புதமாக பந்து வீசினர். துடுப்பாட்ட வீரர்கள் ஓட்டங்களைக் குவிப்பதே முக்கியம். கடந்த ஆட்டத்தின் முதல் இன்னிங்ஸில் 64 பந்துப்பரிமாற்றங்களையும், 2ஆவது இன்னிங்ஸில் 110 பந்துப்பரிமாற்றங்களையும் மட்டுமே ஆஸி. அணியால் விளையாட முடிந்தது. முதல் இன்னிங்ஸில் 120 பந்துப்பரிமாற்றங்கள் அல்லது அதற்கு மேல் துடுப்பாட்டம் செய்து ஓட்டங்களைக் குவிப்பதே வெற்றிக்கு முக்கியம்' என்று மேலும் தெரிவித்துள்ளார் லீமென். (ற)



# சந்திமால் அணித்தலைவர்

தென்னாபிரிக்க அணியுடனான முதல் இரண்டு ஒரு நாள் ஆட்டங்களிலும் இலங்கை அணித் தலைவராக தினேஸ் சந்திமாலும், அணியின் உபதலைவராக லஹிரு திரிமனேயும் நியமிக்கப்பட்டுள்ளனர். இலங்கை அணித் தலைரான மத்தியூஸுக்கு இரு ஆட்டங்களில் விளையாடுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையிலேயே இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

முத்தரப்புத் தொடரில் இந்தியாவுக்கெதிரான ஆட்டத்தில் தாமதமாகப் பந்துவீசியதை அடுத்தே மத்தியூஸுக்குத் இந்தத் தடை விதிக்கப்பட்டது.

அதேவேளை, தென்னாபிரிக்க அணிக்கும் இலங்கை கிரிக்கெட் தெரிவுக்குழு பதினொருவர் அணிக்கும் இடையே நேற்று நடைபெற்ற பயிற்சியாட்டத்தில் தென்னாபிரிக்க அணி வெற்றி பெற்றது.

50 பந்துப்பரிமாற்றங்கள் மட்டுப்படுத்தப்பட்ட இந்த ஆட்டத்தில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

அதன்படி அந்த அணி, 50 பந்துப்பரிமாற்றங்களின் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 271 ஓட்டங்களை பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை கிரிக்கெட் தெரிவுக் குழு பதினொருவர் அணி, 44.5 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 198 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. தென்னாபிரிக்க அணி 73 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. (ற)

NEC மணிக்கூட்டு வீதி, யாழ்நகர். (பெருமாள் கோயில் அருகில்)
A/L 2015
தொழில்நுட்ப பிரிவு
*Science for technology
By- N.Easan B.sc, PGDE
* Engineering Technology
By- P.Theesan B.sc
ஆரம்பம்- 20.07.2013 சனி 8.00 மணி
அனுமதிகளை உடன் பதிவு செய்யவும்.
0774696695

3 மாதத்தில் சரளமாக ஆங்கிலம் பேச வேண்டுமா?
ஆங்கிலம் என்பது நீந்துதலைப்போலவும்,வாகனம் ஓட்டுதலைப்போலவும் பழகுதலின் மூலம் கற்றுக் கொள்ளவேண்டிய ஒரு செயற்பாடாகும்.
ஆங்கிலத்தை பேசிப்பழகாமல் அதன் இலக்கணத்தைக் கற்றுக்கொள்வது சுத்த முட்டாள்த்தனமான ஒரு காரியமாகும்
ஆங்கிலத்தில் ஒரு சொல் தெரியாதவராக நீங்கள் இருந்தாலும் தொடர்ந்து எம்முடன் உரையாடற் பயிற்சியில் ஈடுபடுவதன் மூலம் நீங்களும் மூன்றே மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேச முடியும்.
பேச்சுப் பயிற்சியின் மூலம் நீங்களும் ஆங்கிலம் பேச விரும்பினால்
20.07.2013 இல் ஆரம்பமாகும் புதிய பிரிவில் இணையுங்கள்
பிரிவு 1. 8-10.00 பிரிவு 2. 10-12.00
பிரிவு 3. 1-03.00 பிரிவு 4. 3-05.00
ஒரு பிரிவில் 20 பேர் மட்டும்
முன் பதிவு அவசியம்
/Saamson Spoken English
SAAMSON Language Research Centre
279,ஆஸ்பத்திரி பின்புறம்,யாழ்நகர்.
077 621 4567

தமிழ் Seminar
Dr.S.S.ஆனந்தன்
தமிழிந்திரன் MA
ஞா, தி- 9-11.30
BECON
பெருமாள் கோயிலடி

விளம்பர தொடர்புக்கு
021 567 1111
advt @uthayan.com

மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு
NPWS - XXXX தொடர் இலக்கமுடைய TVS XL SUPER HEAVY DUTY வகையைச் சேர்ந்த மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 474 3527
(37651)(3.6.11)

கடைகள் வாடகைக்கு
யாழ்ப்பாணம் ஸ்ரான்லி றோட்டில் இல. 85, (381) விகாரைக்கு அருகிலும் புகையிரத நிலைய குவாட்டஸிற்க்கு முன்பாகவும் 4 விசாலமான கடைகள் வாடகைக்குஉண்டு.
தொடர்பு:- 077 6786230

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.07.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.